344

தமிழகத்தில்
கோசர்கள்

# தமிழகத்தில் கோசர்கள்

கா. கோவிந்தன்

புலவர். கா. கோவிந்தன்.

# தமிழகத்தில் கோசர்கள்

கா. கோவிந்தன்

# தமிழகத்தில் கோசர்கள்

கா. கோவிந்தன் எம். ஏ.

விற்பனை உரிமை :

அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராய நகரம் : : சென்னை - 17.

முதற் பதிப்பு : நவம்பர், 1960.
உரிமை உடையது

'தமிழ் இனம்', இன்று தமிழகத்து வாழ்பவர் அனைவரையும் ஒருசேரக் குறிக்கின்ற ஒப்பற்ற சொல். ஆனால், இந்தச் சொல்லிலே, எத்தனை இனங்களின் வரலாற்றுச் செய்திகள் புதைந்து கிடக்கின்றன? அந்த நினைவிலே எழுந்த படைப்பு இந்த நூல்.— — — ]

பாரதம் அச்சகம், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

# தமிழகத்தில் கோசர்கள்

'தமிழ் இனத்தார்' என, இந்நாளிலே நம்முடைய நாட்டகத்தே வாழ்வோர் பலரும், பண்டிலிருந்து இன்றுவரை ஒரே இனத்தவராகவே அமைந்திருந்தவர்தாமா? இந்தக் கேள்வி தமிழ் இலக்கியத்தினைக் கற்பவர் பலருக்கும் எழுவது இயல்பேயாகும். இதற்குத் தெளிவான விடை சொல்லுவது மிகவும் கடினம் என்பது அனைவரும் அறிந்ததொன்று.

இந்த ஐயத்தைப் போக்குவதற்குப் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள், முதற்கண், தமிழகத்தே வாழ்ந்திருந்து, காலத்தால் தமிழரேயாகிக் கலந்துவிட்ட மறக்குலத்தவரான கோசர்களைப் பற்றிய பற்பல செய்திகளையும் ஆராய்ந்து, இந்நூலினை அமைத்திருக்கின்றார்.

தமிழக வரலாறு மிகத் தெளிவாகவும் ஆதாரங்களுடன் முற்றவும் அமைவதற்கு இயலாததாகவே இருக்கின்றது. ஆங்காங்கு இலக்கியங்களுள் காணும் சிலபல வரலாற்றுச் செய்திகளைக் கொண்டே வரலாற்றை இயைபுபடுத்தி உருவாக்க வேண்டியதிருக்கிறது. இத்தகைய பணியிலுள்ள சிரமங்கள், இதனை அறிந்தவர்களாலேயே முற்றவும் உணரப்படும்.

இந்நூலின்கண், புலவர் கோவிந்தனார், பற்பல செய்திகளையும், தம்முடைய பரந்த அறிவுச் செழுமையினைக் கொண்டு ஆராய்ந்து, முடிவுகளையும் தருகின்றார். அவற்றை அவ்வாறே பிறரும்

ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஏற்கக் கூடியன ஏற்க இயலாதன என, அவை படிப்பவரின் கருத்துக்களுக்கு ஏற்ப வேறுபடுதலும் கூடும்.

எனினும், இந்தத் துறையிலே, தமிழ் அறிஞரின் கருத்தைச் செலுத்துவதற்கு உதவியாக எழுந்த நூல் என்ற வகையிலே, இதனைத் தமிழ் அறிந்தார் அனைவரும் விருப்பமுடன் வரவேற்பார்கள் என நம்புகின்றோம்.

**பதிப்பகத்தார்**

# நூலினுள்ளே...


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழகத்து மறவர் குலங்கள் | ... | 9 |
| 2. | இடமும் இயல்பும் | ... | 41 |
| 3. | கோசரும் கொண்கானத்து நன்னனும் | ... | 57 |
| 4. | கோசரும் திதியனும் | ... | 70 |
| 5. | கோசரும் மோகூர்ப் பழையனும் | ... | 77 |
| 6. | கோசர்குலப் புலவர்கள் | ... | 92 |
| 7. | கோசர்குலக் கோமான்கள் | ... | 99 |

# 1. தமிழகத்து மறவர் குலங்கள்

தமிழகத்திற்கு, ஆசிரியர் தொல்காப்பியனார், வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு எனப் பெயர் சூட்டி யிருப்பதால், வேங்கடமலைக்கும் குமரிமுனைக்கும் இடைப் பட்ட இந்நாட்டில், பண்டு, சேர சோழ பாண்டியர் என்ற மூவேந்தர் வழிவந்தார் மட்டுமே ஆட்சி புரிந்திருந்தனர் என அறுதியிட்டுக் கூறிவிடுதல் இயலாது. அம் மூவேந்தர் வாழ்ந்திருந்த அதே தமிழகத்தில், அதே காலத்தில், அவர் ஆட்சிக்கு அடங்கியும் அடங்காமலும் வேறு பல சிற்றரசர் களும் பெருவாழ்வு வாழ்ந்திருந்தனர். அவர்கள், அம் மூவேந்தர்க்குரிய சேர, சோழ, பாண்டிய குலங்களிற் பிறந்த வரல்லர். “கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி” என்றும், “படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டுவரும் குடிகள்” என்றும் பாராட்டப் பெறும் பழம்பெருமை வாய்ந்த அம் மூவேந்தர் குடியோடு ஒத்த பழ மையும் பெருமையும் வாய்ந்த வேறு பல குடிகளும், தமிழ கத்தில் தழைத்திருந்தன. மூவேந்தர் குடியில் வந்த பேரரசர் களைப் போலவே, அப் பல்வேறு குடிகளில் வந்த அச் சிற்ற ரசர்களும் தமிழகப் பெருவாழ்விற்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர். அம் முடி மன்னர்களைப் போலவே, இக் குறுநிலத் தலைவர்களும் புலவர்களைப் புரந்து அவர்தம் பாராட்டைப் பெற்றுள்ளனர். பண்டைத் தமிழ்நாட்டு

அரசியல் வாழ்வை ஓரளவு உணர உறுதுணை புரியும் பழந் தமிழ் இலக்கியங்களை ஊன்றி நோக்கினால், வீரத்தால் மட்டு மல்லாமல், பாராட்டற்குரிய வேறு பல பண்புகளாலும், அப் பேரரசர்களைக் காட்டிலும், இச் சிற்றரசர்களே சிறந்து விளங்கினர் என்பது தெளிவுறப் புலனாகும். பழம்பெரும் இலக்கியக் கருவூலங்களாகிய பத்துப் பாட்டு எட்டுத் தொகைகளின் தோற்றத்திற்குத் தோன்றாத் துணைபுரிந்த பெருமை, வரையாது வழங்கும் வள்ளல்களாகவும், வணங் காது வெல்லும் வீரர்களாகவும் வாழ்ந்த அச் சிற்றரசர் களையே முற்றிலும் சாரும் என்றால், அது முக்காலும் உண்மையென்பர், அக் கால வரலாற்றை முற்ற உணர்ந்த முதுபெரும் புலவர் அனைவோரும். ஆகவே, அம் மூவேந்தர் களையும், அவர் பிறந்த குடிகளையும் அறிந்து பாராட்டிப் பெருமை கொள்வதைப் போலவே, அச் சிற்றரசர்களையும், அவர்கள் பிறந்த பல்வேறு குடிகளையும் அறிந்து பாராட்ட வேண்டுவது தமிழர்களாகிய நம் கடமையாகும். அதுவே, குறிக்கோளாய் அத்தகைய குடிகளுள் ஒன்றாகிய கோசர் குடி பற்றிய வரலாற்றினை விளங்கக் கூறும் இந்நூலின் தொடக்க நிலையில், அப் பல்வேறு குடிகள் பற்றிய ஒரு சில செய்திகளை அறிந்து கொள்வது நலமாகும். ஆதலின், **அவியர், ஆவியர், ஓவியர், கொங்கர், தொண்டையர், பூழியர், மலையர், மழவர், வடுகர், வேளிர்** என்ற அம் மரபினர் குறித்து ஒரு சில கண்டு மேற்செல்வோமாக.

**1. அவியர்:** இன்றைய சேலம் மாவட்டத்துத் தர்மபுரி, பண்டைக் காலத்தில் தகடூர் என்னும் பெயரோடு சிறந்து விளங்கிற்று. அத் தகடூரைச் சூழ, அன்று அமைந்திருந்த அரண், அழிக்கலாகா ஆற்றலும் அமைப்பும் உடையது. அரணுக்குரிய அரசர்களைப் பாடிப் பரிசில் பெற வரும் பாவலர்க்கல்லது, அவ்வரசர்களோடு பகை கொண்டுவரும் காவலர்க்கு வழிவிடா வன்மையுடைய காவற்காடு சூழ்ந்த

அக் கோட்டையை, வெற்றியல்லது தோல்விகாணு வில் வீரர் பலர் காத்துக் கிடப்பர். [1] தகடூரைத் தலைநகராகக் கொண்டு நாடு, தள்ளாவிளையுளும், தக்காரும் தாழ்விலாச் செல்வரும் மலியப்பெற்ற மாண்புடையது. புலி முதலாம் அந் நாட்டுக் கொடு விலங்குகள், பிற உயிர்களுக்கு ஊறு செய்வதில்லை யாதலின், புல்லுணவு வேண்டிக், கன்றுகள் பின் தொடர, காலையில் காடுபுகும் பசுக்கூட்டம், மாலைவரக் கண்டும் மனைபுகும் மனம் இலவாய், இரவிலும் அக் காட்டிலேயே இருந்துவிடும். களவு வாழ்க்கையைக் கனவிலும் கருதாமைக்கு ஏதுவாகிய வளமிகுதியால் அந் நாட்டில் கள்வர் எவரும் இலராகவே, அந் நாட்டு உழவர், நெல்முதலாம் தம் விளைபொருள்களைக் களத்துமேட்டிற் காவல் இன்றியே விட்டுவைப்பர். மேலும், வழிப்போவாரைக் கொள்ளையிட்டு வயிறுவளர்க்கும் கொடியோரை அந் நாட்டில் காண்பது அரிதாகலின், வழிச் செல்வோர், இரவு வந்துற்றதும், காவல் மிகுந்த இடம் தேடியலையாமல், தாம் விரும்பும் இடங்களில் இருந்து இளைப்பாறிச் செல்வர். [2] தகடூர் நாட்டின் நடுவண் குதிரை என்னும் பெயருடையதொரு குன்று இருந்தது. எளிதில் ஏறியடையலாகாத் தன் உச்சியில், உண்டார் உயிரை நெடிது நாள் வாழவைக்கவல்ல கனியினை

---

1. "ஆர்வலர் குறுகின் அல்லது, காவலர்
கனவினும் குறுகாக் கடியுடை வியன்நகர்" —புறம்: 390.

"பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர்." —பதிற்றுப் பத்து: 78.

2. "கன்றமர் ஆயம் கானத்து அல்கவும்,
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்,
களமலி குப்பை காப்பில வைகவும்,
விளங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்." புறம்:—230

அளிக்கும் அருமை வாய்ந்த நெல்லிமரம் ஒன்று நெடிது வளர்ந்திருக்கும் பெருமையுடையது அக் குதிரைக் குன்று.

இத்துணை வளம் மிக்க நாட்டை ஆண்டவரே அதியர். தமிழகத்துப் பிற மரபினர் எவர்க்கும் வாய்க்காத ஒரு பெருமை, இவ் வதியர்க்கு வாய்த்துளது. இக்கால மக்களுக்குப் பொற்காசுகளை வாரி வழங்கும் பொன்ருப் புகழ் மிக்க விளைபொருளாம் கரும்பினைக், கடல் கடந்த நாட்டிலிருந்து, தமிழகத்திற்கு முதன்முதலில் கொண்டுவந்த பெருமை, இவ் வதியர்குல முன்னோர்க்கே உரித்து.

அதியர்குலம், தன் மலை அருநெல்லிக்கனியை, அருந் தமிழ்ப் பெரும் புலமை மூதாட்டியாம் ஔவைக்கு அளித்து, வள்ளல் எழுவருள் ஒருவனும் தகுதி பெற்ற பெரியோனும், மூவேந்தர்க்குப் படைத்துணை அளிக்குமளவு பேராற்றல் வாய்ந்தவரும், தமிழகத்தைத் தமதாக்கிக் கொள்ளும் கருத்தினராய்த் தமிழகத்துப் புகுந்த வடவாரியப் படையை வென்று விரட்டிய விழுப்புகழ் உடையாரும், கடல் கோள்களாலோ அல்லது கடல்நிகர் படை கோள்களாலோ பாழூற்றுப் போகாப் பேரரண் வாய்க்கப்பெற்றவரும் ஆகிய மலைய மன்னர்களின் அரசிருக்கையாம் திருக் கோவலூரையே முற்றி அழித்து, முதுபெரும் புலவராம் பரணர் பாராட்டைப் பெற்ருேனும், தன் பேராற்றலும் பெருவாழ்வும் கண்டு தமிழகத்துப் பேரரசர்களும் சிற்றரசர்களுமாகிய அனைவரும் ஒன்று திரண்டு வந்து வளைத்துக் கொண்டமையான் உயிர் துறக்க வேண்டி நேர்ந்த நிலையினும், **தகடூர் யாத்திரை** என்ற பெயரால் ஒரு தமிழ்ப் பெருநூலே தோன்றுதற்கு

1. "அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,
அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்,
நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர்." —புறம்: 99.

வாய்ப்பளிக்கும் வகையில் தகடூர்ப் போர் ஆற்றியோனு மாகிய அதியமான் நெடுமான் அஞ்சியையும், அவன் மறை வால் அல்லலுறும் நாட்டின் அவலநிலையைத் தன் ஆட்சி நலத்தால் அகற்றி, பாரம் மிகுதியாலும், வழியருமையாலும் வண்டியின் அச்சு இடைவழியில் முறிந்து போகுமாயின், அந்நிலையில் உதவுவதாக என்றே, உமணர் எனும் உப்பு வணிகர் உடன் கொண்டு செல்லும் சேம அச்சுப்போல் அமைந்து காத்த கட்டிளங் காளையாகிய பொகுட்டெழி னியையும் [1]பெற்றளித்த பீடும் பெருமையும் வாய்ந்தது.

முச்சங்கம் நிலவிய முதுபெரும் காலத்தவராய அதியர், கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டளவிலும் பெருவாழ்வு பெற்றிருந்தனர். விசயாலயன் வழிவந்த பிற்காலச் சோழர் குல மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில், **அதியமான் இராசராசதேவன்** என்பானொருவன், தகடூர் நாட்டு மலைய னூரை இறையிலியாக்கித் திருவண்ணாமலைக் கோயிலுக்கு வழங்கினான் என்று, அக்கோயில் கல்வெட்டொன்றும் கூறு கிறது.

2. **ஆவியர்:** முருகப் பெருமான் கோயில் கொண்டி ருக்கும் ஆறு படை வீடுகளுள் ஒன்றும் பெருமையுடைய தான, மதுரை மாவட்டத்துப் பழனி என்ற மலையகத்து மாநகர்க்குச் சங்க கால மக்கள் இட்டு வழங்கிய பெயர் பொதினி என்பதாம். ஆவிநன்குடி என்ற அழகுத் திருப் பெயர் இட்டு அழைக்கிறது திருமுருகாற்றுப்படை. சித்தன்

---

1. "எருதே இளைய; நுகம் உணராவே;
சகடம், பண்டம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும், மிசை ஏறினும்
அவணது அறியுநர்யார் என, உமணர்
கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோன்" —புறம்: 102.

என்ற சிறப்புப் பெயருடையயோனாகிய செவ்வேள் முருகன் உறைவதால், அதற்குச் சித்தன் வாழ்வு என்ற பிறிதொரு பெயரும் உண்டு. "சித்தன் வாழ்வு இல்லந்தொறும் மூன்று எரியுடைத்து" எனப் பாராட்டப் பெறுவது அறிக.

பொதினி மலையை அரசிருக்கையாகக் கொண்ட அம்மலை நாட்டை ஆவியர் என்பார் ஆண்டுவந்தனர். அவ் ஆவியர் குடியில் வந்த நெடுவேள் ஆவி என்பான், சிறந்த வீரனாய்த் திகழ்ந்தான். முருகன் நிகர் முழுவலி படைத்த அவ்வாவியர் பெருமகன், சிறந்த குதிரைப் படையுடையாரும், அண்டை நாட்டு ஆனிரைச் செல்வங்களைக் கவர்ந்து தமதாக்கிக் கொள்வதில் ஆற்றல் மிக்கவரும், சேரப் பேரரசரால் சிறந் தார் என மதிக்கப் பெற்று, அவர் படையுள் சிறப்பிடம் அளிக்கப் பெற்றவரும் ஆகிய மழவர் என்ற மறவர் இனத்தை வெற்றி கொண்ட வரலாற்றினைப் புலவர்கள் வாயார வாழ்த்திப் பாடியுள்ளனர்.[1]

ஆவியர் குடியினர் முடியுடை மூவேந்தர்கட்கு மகட் கொடை வழங்கும் பெருநிலை பெற்ற பெருங்குடியினர் ஆவார். சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனின் மகனும், இமயத்து எல்லை வரைக்கும் புகழ்பரப்பி இமய வரம்பன் என்ற புகழோடு திகழ்ந்தவனுமாகிய, சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மனைவியர் இருவர் எனவும், ஒருத்தி சோழன் மணக்கிள்ளி மகள் எனவும், மற் றொருத்தி **வேளாவிக் கோமான் பதுமன் மகள்** எனவும் அறியப்

1. "உருவக்குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி."
"முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி."

—அகம்: 1-61.

படுவது காண்க. இந்தச் சேரரின் மகட்கொடை உறவின் சின்னமாக வஞ்சியின்கண் வேளாவிக் கோமாளிகை ஒன்றும் விளங்கிற்று எனச் சிலம்பு கூறும்.[1]

மயிலுக்குப் பொன்னுடை போர்த்திய பெருமையால் வள்ளல் எழுவருள் ஒருவனாய் வைத்து மதிக்கத்தக்க வையாவிக்கோப் பெரும்பேகன்[2] பிறந்ததும் இவ்வாவியர்குடியே. வையாவிக்குளம் எனும் பெயரோடு, பழனி மலையில் இன்றும் விளங்கும் நீர்நிலை, அம்மலையாண்ட ஆவியர் குலத்தவரின் அழியா நினைவுச் சின்னமாம்.

**3. ஓவியர்:** தென்னார்க்காடு மாவட்டத்துத் திண்டிவனம் வட்டத்தையும், செங்கற்பட்டு மாவட்டத்து மதுராந்தக வட்டத் தென்பகுதியையும் தன்னகத்தே கொண்ட சிறுநாட்டை, மாவிலங்கை மாநகரைத் தலைநகராகக் கொண்டு, முச்சங்கம் நிலவிய முற்காலத்தே ஆண்ட அரச இனத்தவர் ஓவியராவர். வயல்களில் விளைந்து மடிந்து கிடக்கும் நெல்லை அறுவடை புரியும் உழவர் மகளிர், தம் கூரிய அரிவாள் வாய் மழுங்கியவிடத்து, அவ்வயல்களில் விளையாடித்திரியும் யாமையின் வளைந்த முதுகு ஓட்டையே தீட்டுக் கல்லாகக்கொண்டு தீட்டுமளவு வயல் வளத்தில் சிறந்த

1. "பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம் பொழில்
வேளாவிக்கோ மாளிகை."

—சிலம்பு: நடுகல்: 196-198.

2. "கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்."

—சிறுபாண்; 5-7.

மாவிலங்கை, கடல்படு செல்வங்களால் சிறந்து கவின் பெறும் எயிற்பட்டினம்,[1] இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த இக் காலத்தும், தன் அழியா நினைவுச் சின்னத்தை நிறுத்திக் காட்டும் கோட்டையால் சிறப்புற்ற கிடங்கில், தன்னாட்டு அரசன் பகைமிகுதிகண்டு அஞ்சினனாக, அவனுக்கு வேலாக மாறி வெற்றி அளியுங்கள் என்ற முருகன் ஆணைக்கு அடங்கி வேலாகமாறி விளக்கமுற்ற மலர்கள் மணக்கும் கேணிகளைக் கொண்டது என்ற புராணப் பெருமை வாய்ந்த உப்பு வேலூர்[2], ஆழ்ந்த அகழியும், அரியகாப்பும், அந்தணர்குடி யிருப்பும் கொண்ட ஆமூர்[3] ஆகிய பேரூர்கள் பற்பல உடையது, ஓவியர் ஆண்ட அச் சிறுநாடு.

செய்ந்நன்றி மறவாமை, சிற்றினம் சேராமை, இன் முகம் காட்டி, இன்சொல் வழங்கி, இனியவே புரியும் இனிய பண்பு, அண்டி வந்தாரை ஆட்கொள்ளும் அருளுடைமை, மண்டி எதிர்ப்பாரின் மறத்தை மண்ணுக்கும் மாவீரம், தளர்ந்த படையைத் தாங்கி உரம் ஊட்டும் தாளாண்மை,

1. "நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்,
புன்னை மரத்தோடு அரியக் கல்செத்து
அள்ளல் யாமைக் கூன்புறத்து உரிஞ்சும்
நெல்லமல் புரவின் இலங்கை."

—புறம்: 379.

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம்."

—சிறுபாண்: 52-53.

2. "திறல்வேல் நுதியில் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர்."

— ,, 172-173.

3. "அந்தணர் அருகா அருங்கடி வியன்நகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர்."

— ,, 187-188.

எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மை, நீதி காண்பதில் நிலைபிறழாமை, வருவது உணரவல்ல வாலறிவு ஆகிய அரும் பெரும் பண்புகள் அத்தனையும் பெற்று, ஆடவரிற் சிறந்த நம்பியாகத் திகழ்ந்த நல்லியக் கோடன் என் பவன் பிறந்த குடி இவ்வோவியர் குடியே. கடைச்சங்க காலத்து எழுபெரும் வள்ளல்கள் மாண்டு மறைவுற்றபின் னர், அவர்தம் கொடைத்தொழில் அனைத்தையும் தான் ஒரு வனுகவே, தனித்து நின்று ஆற்றிய பெரியோனுகிய அந்நல்லி யக்கோடனை ஈன்றதால், ஓவியர்குடி, உயர்ந்தோர் உள் ளத்தே இடம்பெறும் பெருமையுடையதாயிற்று. அதியர் குடியில் வந்தவன் அதியமான் என்றும், அவன் நாடு அதிய மானுடு என்றும் அழைக்கப் பெறுவதைப் போலவே, ஓவியர் குடியில் வந்தவன் ஓய்மான் என்றும், அவன் நாடு ஓய்மானுடு என்றும் அழைக்கப் பெறும்.

4. **கொங்கர்:** கோவை மாவட்டமும், சேலம் மாவட்டத் துத் தென்பகுதியும் கொண்ட நிலப்பரப்பைத் தாங்கள் வாழிடமாகக் கொண்ட பழந்தமிழ் மரபினரே கொங்க ராவர். கொங்கர் வாழ்ந்திருந்தமையால், அந்நிலப் பகுதி கொங்கு நாடு எனும் பெயர் பெற்றிருந்தது. அப்பெயரே இன்றும் நின்று நிலவுகிறது. கொங்கரின் குலத்தொழில் ஆனிரை ஓம்புதலாம். கொங்நாடு, நீர்வளம் அற்ற நாடாத லோடு நெடிய பலகுன்றுகள் நிறைந்த மேட்டு நிலமுமாத லின், கொங்கர், தமக்கும் தம் ஆனிரைக்கும் வேண்டிய உண் ணீர் பெறுவான் வேண்டி நாடெங்கும் எண்ணிலாக் கிணறு களைத் தோண்டி வைத்திருந்தனர். புல்லுணவு தேடிச் செல் லும் இடங்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு நேராமை குறித்து, ஆனிரைகள் செல்வதற்கு முன்பே அவ்விடங்கட் குச்சென்று, கணிச்சிப் படையால் தீப்பொறி சிதறும் வண் ணம் கற்பாறைகளைப் பிளந்து கிணறுகளைத் தோண்டி வைப்பர். நெடிதாழம் உடையவாய்த் தோண்டிய அக்கிணறு

களிலும், நீர் சிறிதே ஊறிநிற்குமாதலின், அந்நீரை, நீண்ட கயிறுகளில் கட்டிய சின்னஞ்சிறு முகவைகளால் முகப்பர். நீர் காணாது நெடுந்தொலைவு கடந்து வரும் அக் கால்நடைகள், ஆங்காங்குள்ள அக்கிணறுகளைக் கண்ணுற்றதும், செந்தூள் பரக்குமாறு காற்றெனெ விரைந்தோடி, கொங்கர் முகந்து முகந்து கொட்டும் நீரை மொய்த்துக் கொள்ளும்.[1]

ஆனிரை செல்வத்தை இவ்வாறு அரும்பாடு பட்டுக் காக்கும் கொங்கர், கொற்றம் மிக்க குடிமக்களாகவும் விளங்கினர். வாளேந்திப் போர் புரிவதில் வல்லுநராய் வாழ்ந்த அக்கொங்கர், பகையரசர்களின் பேரரண்களைத் தப்பாது தகர்த்தழிக்க வல்ல தந்திரமும் வாய்க்கப் பெற்றிருந்தனர். கல்கால் கவணை என்ற கருவிகளைத் துணை கொண்டு கொங்கர் எறியும் கற்கள், கற்கோட்டைகளையும், கண்ணிமைக்கும் நேரத்தில் இடித்து இல்லையாக்கிவிடும்.[2]

சேரநாட்டின் கிழக்கெல்லையும், சோழநாட்டின் மேற்கெல்லையும், பாண்டி நாட்டின் வடமேற்கெல்லையும் ஒன்று கலக்கும் இடைநிலத்தை தாயகமாகக் கொண்டு வாழ்ந்த கொங்கர்பால் அளவின்றிப் பெருகியிருந்த ஆனிரை செல்வத்தின்பால் கொண்ட ஆசைப் பெருக்காலும், அவர்பால் பொருந்தியிருந்த அரிய போர்ப்பயிற்சி கண்டு கொண்ட அச்சமிகுதியாலும், சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் அக்கொங்கரை முறியடிப்பதில் முனைந்து நின்றனர்.

1. "பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடு."

—பதிற்று: 22.

2. "ஆரெயில்அலைத்த கல்கால் கவணை
நாரரி நறவின் கொங்கர்."

—பதிற்று; 88.

பல்யானைச்செல்கெழுகுட்டுவன் என்ற சேர வேந்தன், கொங்கரை வென்று, அவர்க்குரிய கொங்கு நாட்டைச் சேர நாட்டின் ஒரு பகுதியாகவே சேர்த்துக் கொண்டான்.[2] அந்நாள் முதல், கொங்கர் சேரர் படையில் சேர்ந்தே பணியாற்றத் தலைப்பட்டனர். கொங்கர்வேறு சேரர்வேறு அல்லர்: இருவரும் ஒருவரே என்று மதிக்குமளவு அவ்விரு இனமும் இரண்டறக் கலந்து விட்டன. சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும், சோழன் செங்கணானுக்கும் நடைபெற்ற கழுமலப் போரில், கொங்கர் சேரர் படைவீரராய் ஆற்றிய பணிகள் அளவிடக் கூடியன அல்ல. கழுமலக் கோட்டையைக் காத்து நின்ற சேரர் படைத் தலைவர் அறுவரையும், தான் ஒருவனாகவே களம் புகுந்து கொன்று வீறு கொண்ட சோழன் படை முதலியாம் போரூர் கிழவன் பழையனைக் கொன்று உயிர் போக்கியவர் இக் கொங்கரே.[3] சோணாடாண்ட சங்ககாலப் பேரரசர்களுள் ஒருவனாகிய கிள்ளிவளவனால் வென்று அடக்கப்பட்டாருள் கொங்கரும் ஒருவராவர்.

பசும்பூண் பாண்டியன் என்றும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கொங்கரை அவர்க்

---

1. "ஆகெழு கொங்கர் நாடு அகப்படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்,"
—பதிற்று; 22.

2. "கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஒர் கிழவோன்
—நற்றிணை; 10.

"அன்று அவர் குழீஇய அளப்பரும் கட்டூர்ப்
பருந்து படப் பண்ணிப் பழையன் பட்டென."
—அகம்: 44.

குரிய கொங்கு நாட்டிலிருந்தே துரத்தவேண்டுமென்று எண்ணினான். உடனே கொங்கு நாட்டிற்கு அணித்தாக உள்ள மலை நாட்டை வாழிடமாகக் கொண்டு கொங்கரின் இயல்பெல்லாம் உணர்ந்திருந்தானாகிய அதியன் என்ற படைத் தலைவனை அது புரியுமாறு பணித்து, அவனுக்குத் துணையாக ஒரு பெரிய யானைப் படையையும் அனுப்பி வைத்தான். அப் பணி மேற்கொண்டு கொங்கு நாடு புகுந்த அதியனும், கொங்கரை வென்று அவர்கட்குரிய நாட்டின் பெரும் பகுதியைப் பாண்டியர் உடைமையாக்கி மீண்டான்.[1]

இவ்வாறு தம்மையும் வென்று, தம் நாட்டையும் கவர்ந்துகொண்ட பாண்டியன் படை முதலியாகிய அதியன், பிறிதொரு காலத்தில் வாகை எனும் இடத்தில் நடைபெற்ற போரில் உயிர் இழந்தமை கேட்டு, கொங்கர் மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர்.[2]

ஆனிரை கவர்ந்து அழிவு பல புரியும் தம் வெட்சிப் போரை, கொங்கர் முடியுடை மூவேந்தர் நாடுகளில் மட்டுமே நிகழ்த்தினாரல்லர். அக்காலச் சிற்றரசர் நாடுகள் சிலவற்றி லும், அவர்கள், தம் ஆற்றலைக் காட்டத் தலைப்பட்டனர். அது பொறாத ஆய் அண்டிரன் என்ற குறுநிலத் தலைவன் ஒருவனும் கொங்கரை எதிர்த்துப் போரிட்டான். அவனோடு போரிடமாட்டாது தோற்ற கொங்கர், வேற்படை முதலாம் தம் படைக்கலங்களையும் களத்தில் போட்டுவிட்டு ஓடத்

---

1 கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பண்டியன்'' அகம்: 253

2 "கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதியன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே

தலைப்பட்டனர். அவ்வாறு தோற்றோடிய அவர்கள், மேலைக் கடலைச் சார்ந்துள்ள நாடு புகுந்து ஒழிந்துகொள்ளும் வரை விடாது துரத்திச் சென்று வென்றான்[1] அவ் ஆய் அண்டிரன்.

கொங்கரை வெற்றி கொண்ட வேந்தர்களின் பெயர் மறைந்துவிட்டது; ஆனால், கொங்கர் வாழ்ந்த நாடு, இன்றும் கொங்குநாடு என்ற பெயரிலேயே திகழ்ந்து, அவர் பெயரை நினைப்பூட்டி நிற்கிறது.

5. **தொண்டையர்:** செந்தமிழ் மொழி வழங்கும் சிறப்புமிகு பன்னிரு உள்நாடுகளாய்ப் பிரிந்து வழங்கிய வட வேங்கடம் தென் குமரிகட்கு இடைப்பட்ட பண்டைத் தமிழகத்தில், வேங்கட மலைக்கு இப்பால், தமிழகத்தின் வடக்கெல்லைகளாய் விளங்கிய உள்நாடுகள் இரண்டிற்கும் தொல்லோர் இட்ட பெயர்கள், அருவா, அருவா வடதலை என்பனவாம். பட்டினப்பாலை பெற்ற பெரியோனாகிய கரிகாற் பெருவளத்தான், அருவாளரை வென்று அடிமை கொண்ட பின்னர், அவர் பெயரால் விளங்கிய அந்நாடுகள் இரண்டும், தொண்டை நாடு என்னும் பெயரால் ஒரே நாடாகித் தொண்டையர் என்பார்க்கு வாழ்வளிக்கத் தொடங்கிவிட்டது. பண்டு, அருவா, அருவா வடதலை என்ற இரு சிறு உள்நாடுகளாகப் பிரிவுண்டு திகழ்ந்த அந்நாடு, தொண்டையர் வருகைக்குப் பின்னர்: ஆமூர், இளங்காடு, ஈக்காடு, ஈத்தூர், ஊற்றுக்காடு, எயில், கடிகை, கலியூர், களத்தூர், குன்றபத்திரம், சிறுகரை, செங்காடு, செந்திருக்கை, செம்பூர், தாமல், படுவூர், பல்குன்றம், புலால், புலியூர், பேயூர், மணவூர், வெண்குன்றம், வேங்கடம், வேலூர்

1. "கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப் பெயர்த்திட்ட வேலினும் பலவே"

என்ற இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆளப் படலாயிற்று.

கரிகாற்பெருவளத்தான், அருவாளரை வென்று பார் கொண்டான் எனத் தெரிவதாலும், தொண்டையோர் பற்றிய வரலாற்று நிகழ்ச்சிகளை நல்கும் புலவர்களாகிய தாயங்கண்ணனாரும், கல்லாடரும், அத் தொண்டையோர் மரபில் வந்த மன்னன் ஒருவன்பால், அதிகமான்பொருட்டுத் தூது சென்ற ஔவையாரும், அத் தொண்டையோர் மரபோடு தொடர்புடைய திரையர் குடியையும், அக்குடி வந்த திரையனையும், அவனுக்குரிய பவத்திரி ஊரையும் குறிப்பிட்டுச் சொல்லும் புலவர் பெருமக்களாகிய காட்டூர் கிழார் மகனார் கண்ணனாரும், நக்கீரரும், காலத்தால் கரிகாலனுக்குப் பிற்பட்டவராகவே தெரிவதால், தொண்டையர் மரபு, தமிழகத்தில் அடிகோலியது, அக் கரிகாற்பெருவளத்தானுக்குப் பின்னரே எனக் கொள்க.

"தெண்ணீர்வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்ற பேராப் புகழ் பெற்ற தொண்டை நாட்டைக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தலைப்பட்ட தொண்டையர் தமக்குரிய வேங்கட மலைக்காட்டில் வினையாற்றல் மிக்க வேழங்கள் மலிந்திருப்பக் கண்டு, தாம் விரும்புமளவு வேட்டையாடிப் பெற்று, சிறந்த போர்ப் பயிற்சி அளித்துப் பெரும்படையுடையராய் தருக்கித்திருந்தனர். வேங்கட மலைவாழ் முனிவர்கட்கு, வேள்வித்தீ வளர்க்கக் காட்டு விறகுகளைக் கொண்டு தந்து விழுமிய வாழ்வுடையவாய் விளங்கிய அவ்வேழங்கள், தொண்டையர் அளித்த போர்ப்பயிற்சி பெற்ற பின்னர், பகையரசர் நாடுகளை வென்று, அந்நாட்டு மண்ணில் விளையும் உண் பொருள் அல்லது வேறு உண்ணா விறல்மிகு வாழ்வுடையவாகித் திகழ்ந்தன. அத்தகு வேழப் படையினைப் பெற்றி

ருந்தமையால், தொண்டையர், பகைவர்களின் காவல்மிக்க பேரரண்களைப் பாழ் செய்து ஆங்கு அடங்கி வாழ் அரசர்களின் முடிமுதலாம் அரிய பெரிய அணிகளைக் கவர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதல்லது, அப் பகைவர்தம் பெரும் படைகண்டு அஞ்சி பணிந்து வந்து தரும் திறைப் பொருள் பெற்று போர்விடுத்து வீடுதிரும்ப விரும்பாப் போர்வெறி பிடித்து திரிவாராயினர்.[1]

தன்படை வலிகண்டு அஞ்சி, தன்னோடு பகையொழித்து நட்புகொண்டு வாழ்வான் வேண்டிய அதியமான் நெடுமான் அஞ்சி விடுக்கத், தன்பால் தூதாக வந்த தமிழ்ப் பெரு மூதாட்டியார் ஔவையார்க்குத் தன் படைக்கலச் சாலையைத் திறந்துகாட்டி, அவர் பாராட்டைப் பெற்ற தொண்டைமான் பிறந்தது இத் தொல்பெரும் குடியே. சோழர்குலக் குரிசில் ஒருவனுக்கும் நாகநாட்டுக் குமரியாம் பீலிவளை எனும் பெண்ணினல்லாளுக்கும் பிள்ளையாகப் பிறந்து, தொண்டைக் கொடி அணிந்து, திரைவீசும் கடல் வழியாக வந்து, காஞ்சிமா நகரில் அமர்ந்து, வேங்கட

1. "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் அருவி வேங்கடம்."
—அகம்: 213.

"பொருவார்
மண்எடுத்து உண்ணும் அண்ணல் யானை
வண்தேர் தொண்டையர்."
—குறுந்: 260.

"பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்
வென்றி அல்லது வினைஉடம் படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி உண்டித் தொண்டையோர் மருக"
—பெரும்பாண்; 450-54.

நாட்டை, அல்லது கடிந்து அறம் புரிந்து ஆண்ட திரையனுக்குரிய மரபும் இத் தொண்டையர் மரபேயாம்.

6. **பூழியர்:** செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலங்களுள் பூழி நாடும் ஒன்று. தொல்காப்பியம், நன்னூல் முதலாம் இலக்கண நூல்களுக்கு உரை வகுத்த பேராசிரியர்கள் "பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்பர்" எனக் கூறிச் செல்வது காண்க. கொங்கு நாட்டைப் போலவே பூழிநாடும் கால்நடைச் செல்வத்தால் கவின்பெற்றதாகும். கொங்கரின் கால்நடைச் செல்வம் மாடு ஒன்றேயாக, பூழியர், ஆடு, மாடு, ஆகிய இரண்டினையும் உடைமையாகக் கொண்டிருந்தனர். பூழியர் தம் உடைமைகளாகிய, சிறிய தலைகளைக் கொண்ட வெள்ளாட்டுக் கூட்டம் அணிஅணியாகச் செல்லும் அழகைப் பழந்தமிழ்ப் புலவர்கள் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துள்ளனர்.[1]

பூழியர் தம் ஆனிரைகளைத் தம் நாட்டின் நடுவண் நின்று நிலைபெற்றுத் திகழும் செருப்பு எனும் பெயர் பூண்ட மலைக்காட்டு நாட்டிற்குக் கொண்டு சென்று மேய விடுத்து, அம்மலைக்காட்டு மண்ணில் கல்லோடு கலந்து காட்சி அளிக்கும் மாணிக்க மணிகளைத் தேடித் திரட்டி வருவராதலின், அப்பூழி நாட்டவரின் பொருள் வளம் கண்டு பேரரசர்களும் பொறாமைப்படுவாராயினர்.[2]

---

1. "பூழியர்,
சிறுதலை வெள்ளைத் தோடுபரந்தன்ன" —குறுந்: 163.
"பூழியர்
உருவத்துருவின் நாண்மேயல் ஆகும்." —நற்: 192.

2. "புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்உயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியல் செருப்பின் பூழியர்." —பதிற்று: 21.

இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை போலும் சேர நாடாண்ட பேரரசர் பலரும், பூழியர்க்குத் தலைவராகவும், காவலராகவும் இருந்து, பூழி நாட்டைக் காத்து, "பூழியர் கோவே!" "பூழியர் பெருமகன்", "பூழியர் மெய்ம்மறை" என்றெல்லாம் புலவர்களால் பாராட்டப் பெறுவாராயினர்.

இவ்வாறு, சேரரின் சிறந்த உடைமையாகக் கருதப் பட்ட, பூழிநாட்டைப், பாழிக்குரியோன் எனப் பலராலும் பாராட்டத்தக்கவனும், பெரும்படைத் துணையும், பேராற்றலும் வாய்ந்தவனுமாகிய நன்னன் என்பான் வென்று கைப்பற்றிக் கொண்டான். பூழிநாடு, சிலகாலம் அவன் உடைமையாகவே இருந்து வந்தது. அந்நிலையில் சேரநாட்டு அரியணையில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்ற அடலேறனையான் ஒருவன் வந்து அமர்ந்தான். பூழி, நன்னன் உடைமையாக இருப்பதை அவனால் பொறுக்க இயலவில்லை. எத்துணைப் பாடுபட்டேனும், அதை மீண்டும் சேரர்க்குரிய தாக்கத் துணிந்தான்; அதனால், நன்னன், நண்ணார் நணுகற்கரிய நாற்படையுடையான் என்பதை அறிந்தும் அவன்மீது போர் தொடுத்தான். கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை முதலாம் பல போர்க்களங்களில் பலமுறை போரிட்டு, அவன் காவல் மரமாம் வாகையையும் வீழ்த்தி, அவனையும் கொன்று வெற்றி கொண்டு, பூழியைப் பண்டேபோல் சேரர் உடைமையாக்கிக் குடிப்புகழ் நாட்டினான்.[1]

1. "பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச்செருவி னாற்றலை யறுத்து, அவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்த
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."
—பதிற்று: பதிகம்: 4.

இவ்வாறு பேரரசர்களும், பேராண்மை மிக்க பெரிய வீரர்களும், தத்தம் உடைமையாக்கிக் கொள்ளும் முயற்சியில் தத்தம் உயிரையும் விடத்துணியும் விழுமிய சிறப்பு வாய்ந்த, பூழிநாட்டு மண்ணில் தோன்றி மாண்புற்று வாழ்ந்தவரே பூழியராவர்.[1]

7. **மலையர்:** தென்னார்க்காடு மாவட்டத்தில் பாயும் பெண்ணையாற்றின் கரையில் உள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட சிறு நாட்டை ஆண்டுவந்தவர் மலையர் என்ற மரபினராவர். மலையர் எனவும் மலையமான்கள் எனவும் அழைக்கப்பெறும் அவர்கள் ஆண்டமையால் மலையமான் நாடு என்றும், மலாடு என்றும் பெயரிட்டு அழைக்கப் பெறும் அந்நாடு, காடும் மலைகளும் சூழ, நடு நாட்டில் இருப்பதால், கடல் கோள்களால் அழிவுறுவதோ, பகைவர் தம் படை கோள்களால் பாழுறுவதோ இல்லை. அந் நாட்டின் நடுவிடத்தே முள்ளூர் என்ற மலையொன்றும் உளது; அகில் ஆரம் முதலாம் பெருமரங்கள் அடர்ந்து எவராலும் அணுகற்குஆகா இயற்கையரண் அமையப் பெற்ற அம்மலை முடியில், மலையமன்னர்கள் அமைத்திருந்த அரண் வலி மிக்க கோட்டை ஒன்றும் உளது. முள்ளூர் மலைக் காட்டின் சந்தன மணத்தையும், முள்ளூர் மலைக்கோட்டையின் காவற் சிறப்பையும் கபிலர் முதலாம் பெரும்புலவர்களும் பாடிப் பாராட்டியுள்ளனர்.[2]

---

1 "இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்தநாடு தந்தன்ன வளம்." —அகம்: 199.

2 "கடல்கொளப் படாஅது; உடலுநர் ஊக்கார்;
கழல்புனை திருந்தடிக் காரி! நின்னாடே" —புறம்-122.

கிழக்கே சோணுடும், மேற்கே சேரநாடும் இருக்க இடைப்பட்ட மலாடு நாட்டினை ஆண்டுவந்தமையால், அவ்விரு பேரரசுகளின் வாழ்விற்கும் தாழ்விற்கும் மலேய மன்னர்களே பெரிதும் காரணமாய் விளங்கினர்.[1] சேரர்க்கும் சோழர்க்கும் நடைபெறும் போர்களில் மலேயர் யார்பக்கம் இருந்து மலேகின்றனரோ, அவர்க்கே வெற்றி வாய்க்கும் என்ற பெருநிலேயை உண்டாக்கிப் பெருக வாழ்ந்திருந்தார்கள் மலேய மன்னர்கள். போரில் வெற்றிபெற்ற வேந்தனும் "இப் போரில் மலேயன் துணேவந்திலனேல் வாகை மாலே பெறுவது என்ருல் இயலாது போயிருக்கும்; அவன் படைத் துணே கிடைத்தது; ஆகவே வெற்றித் திருமகள் எனக்கு மாலே சூட்டி விட்டாள்" என்று மலேயரையே போற்றுவன் தோல்வி கண்டு துயர் உழப்போனும்," மலேயன் தன் படையோடு வந்து மாற்ருனுக்குத் துணே புரிந்திலனேல், வெற்றி எனக்கே எளிதில் வாய்த்திருக்கும்; அவ்வாய்ப்பினே இழக்கப் பண்ணினவன் படைத்துணே வந்தமலேயனே அல்லது மலேத்து நின்ற மாற்ருன் அல்லன்" என அவன் புகழே பாடுவன்.[1]

---

1 "முரண் கொள் துப்பின் செவ்வேல் மலேயன்
முள்ளூர்க் கானம் நாற. குறுந்-312.

"பொய்யா நாவின் கபிலன் பாடிய
மையணி நெடுவரை ஆங்கண் ஒய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர்." புறம்-174.

2 "கடந்து அட்டு வென்ரேனும் நிற்கூறும்மே
'வெலீஇ யோன் இவன் எனக்
'கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமந்தாங்கிய
வல்வேல் மலேயன் அல்லனுயின்
நல் அமர் கடத்தல் எளிதுமன் நமக்கு எனத்
தோற்ரேன் தானும் நிற்கூறும்மே. புறம்-125.

வள்ளல் என மதிக்கத்தக்க வளமார் புகழ்பெற்றவர் இவ் வெழுவரே எனப் புலவர் இருவரால் ஒருங்கே பாராட்டப் பெற்ற கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் தகுதி பெற்றோனும், கொல்லிமலை யாண்ட வல்வில் ஓரியைக் கொன்று, அவன் தலைநகர்த் திருவீதிகளில் வெற்றித் திருவுலா வந்தோனும், 'காரி! கபிலர் பாடிவிட்டார் உன் புகழை; இனி எம்மால் பாடுதல் இயலுமோ அதனை' எனப் புலவரெல்லாம் வியந்து பாராட்டத்தக்க விழுப்புகழ் உடையானும் ஆகிய திருமுடிக்காரி தோன்றியது இம் மலையர் குடியே. ஆண்ட அரசன் போரில் மாண்டு போயினனாக, அவன் மகனும் நனிஇளையோனையும் கைப்பற்றிக் கொல்ல நண்ணார் துணிந்திருக்கும் நிலையில், அவ்வரசிளங் குமரனைத் தன் முன்னோர் மலையரணின் வைத்துக் காத்தும், அவன் நாட்டைக் கைப்பற்றி ஆளும் பகைவரை அழித்தும், அவனை அவனுக்குரிய அரியணையில் அமர்த்தியும், வாழ்விழந்து வருந்திய சோணாட்டு மக்களுக்கு வாழ்வளித்த மாவீரனும் சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் பெற்றளித்த பெருமையும் மலையமான் மரபினர்க்கே உரித்து. கிள்ளிவளவன் என்ற சினம் மிக்க சோழ மன்னனால் கைப்பற்றப் பட்டு, அவன் பட்டத்து யானையின் காற்கீழ் இட்டுக் கொல்லப்பட இருந்த நிலையில் புலவர் கோவூர் கிழாரின் தலையீட்டால் உயிர் பிழைத்த இளம் மகார் இருவர் பிறந்த குடியும் இம் மலையர் குடியேயாம்.

கடைச்சங்க காலம் போலும் அத்துணைத் தொல்பெருங் காலத்தில், இத்துணைப் பெருவாழ்வு வாழ்ந்த மலையர், கி. பி. பனிரெண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பேரரசு செலுத்திய விசயாலயன் வழிவந்த சோழர் ஆண்டிருந்தபோதும், அவர்க்குப் படைத்துணையோடும் பெருவலியுடையராய் வாழ்ந்திருந்தனர்.

8. **மழவர்:** தமிழகத்து மறவர் குலங்களுள், அதியர் ஆவியர், ஓவியர், தொண்டையர், வேளிர் என்ற இவ்வைங் குலத்தவரும் தத்தமக்கென ஒவ்வோர் அரசு அமைத்துக் கொண்டு நாடாண்ட அரச இனத்தவராவர். கொங்கரும் பூழியரும் தனியரசு அமைத்து ஆண்டவரல்லராயினும், ஆனிரை ஓம்புதலாம் ஒரு தொழில் மேற்கொண்டு வாழ்ந்தவ ராவர். மழவர், இவ்விருவகையுள், எவ்வகையுளும் சேர்ந் தவரல்லர். சோழப் பேரரசின் உள்நாட்டுத் தலைநகராகிய உறையூர்க்கு மேற்கில், காவிரியாற்றின் வடகரையில், கொங்கு நாட்டிற்கு அணித்தாக, மழநாடு எனவும், மழ கொங்கம் எனவும் பெயர் பூண்டிருந்த ஒரு சிறு நிலப்பகுதியே மழவரின் பிறப்பிடமாம் என்றாலும், அவர்கள், ஆங்கு நிலைத்த வாழ்வு மேற்கொண்டிராது, நாடோடி வாழ்வையே பெரிதும் விரும்பி மேற்கொண்டிருந்தனர்.

செம்மறி யாட்டுக் கிடாயின் இரு கொம்புகள் போல் சுருள்கொண்டு, பிடரி மறையத் தொங்கும் தலைமயிரும், செம்மை நிறம் மாறாக் கண்களும் கொண்டு, கண்டார் அஞ் சத்தக்க தோற்றப் பொலிவுடையராகிய மழவர்பால், பகை வர்தம் பெரிய படைகளையும் பாய்ந்தழிக்க வல்ல சிறந்த குதிரைப்படையும் இருந்தது. வண்டுகள் வந்து மொய்க்கு மளவு புதுமை நலம் கெடா மலர்களால்ஆன நீலமாலை அணிந்து, கலீர் கலீர் என ஒலிக்கும் வீரக்கழல் புனைந்து, குதிரைப் படை துணை செய்ய மழவர் கூட்டம் வெளிப்பட்டு விட்டது என்றால், வந்தது அழிவு என வேந்தரெல்லாம் சிந்தை கலங்குவர்.[1]

1. "தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவல் மாய் பித்தை, செங்கண் மழவர் — அகம் 101.

"வண்டுபடத் ததைந்த கண்ணி, ஒண்கழல்
உருவக் குதிரை மழவர். — அகம் 1.

தமக்கென ஒரு தொழிலும், தமக்கென ஓர் அரசும் பெருத அம் மழவர், தம் அண்டைநாட்டு ஆனிரை செல்வங்களைக் கவர்ந்து வருவதில் கருத்துடையராய் விளங்கினர். ஆனிரை கருதி அண்டைநாட்டினுள் அடிவைக்கும் மழவர், ஆங்கு அவ்வானிரைகளைக் காத்து நிற்கும் வீரர்களைத் தம் வாட்படை கொண்டு வெட்டி வீழ்த்திவிட்டு, காளைகளும், கறவைகளும், கன்றுகளும் கூடிய நிரைகளை விரைந்தோட்டி வருவர்; இடைவழியில், சேணெடுந் தூரம் நடந்து வந்தமையாலும், விலாவெலும்பு நோக விரைந்தோடி வந்தமையாலும் வருந்திக் கண்ணீர் சிந்தும் கன்றுகளின் கண்ணீர் கண்டும் கலங்காக் கல்மனம் படைத்தவர் அம் மழவர்.[1]

அண்டை நாட்டவரின் ஆனிரைகளைக் கவர்ந்து வரும் மழவர், அவ்வானிரைகளைத் தம் வாழிடத்திற்குக் கொண்டு சேர்க்கும் வரையும் அவர் பசிக் கொடுமையும், குருதி வேட்கையும் பொறுத்திரா போலும். இடைவழியில் எங்கேனும் ஒரு வேப்ப மரத்தையும், அதன் அடியில் கோயில் கொண்டிருக்கும் குருதிப்பலி கேட்கும் கடவுள் நிலை தாங்கிய கல்லையும் கண்டுவிட்டால், உடனே, அவ்வானிரையுள் கொழுத்து நிற்கும் ஆவினைக் கொண்டுவந்து, அக் கடவுள்முன் நிறுத்திக் கொன்று, அதன் குருதியை அக்கடவுளுக்குப் பலியிட்டு விட்டு, அதன் நிணத்தை அம்மரத்தடியிலேயே வேகவைத்து

---

1. "கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் வழவர் அகம் 187.

1. "வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாளா உய்த்த நாம வெஞ்சுரத்து
நடைமெலிந்து ஒழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர்." அகம் 131

வயிறுர உண்டு தீர்ப்பர். மழவர்தம் புலால்வெறி தான் என்னே![1]

தாம் விரும்பும் நாடுகளுள் புகுந்து, அவ்வந்நாடுகளுக்குரிய ஆனிரைகளைக் களவாடி உயிர் வாழ்ந்த மழவர், அவ்வானிரைகள் கிடைப்பது அரிதாகிப் போய்விடுவதாலோ, அல்லது அவர்தம் இன்பவேட்கை, ஆனிரைச் செல்வம் ஒழிந்து வேறு செல்வங்கள்பாலும் சென்றுவிட்டமையாலோ, காட்டையும் கானாற்றையும், மலையையும் மடுவையும் கடந்து செல்லும் வழிப்போவாரை வருத்தி, அவர்கள் கொண்டு செல்லும் கைப்பொருள்களைக் கொள்ளையிட்டு உண்ணும் கொடுந்தொழிலையும் கூடாது மேற்கொண்டு வாழ்ந்தனர். ஆறலை கள்வராய் மாறிவிட்ட மழவர்கள், மரங்கள் மண்டி இருள்செறிந்திருக்கும் காட்டிடை வழிகளிலும், மலையோ என மருளத்தக்க கற்பாறைகள் மலிந்த மலையிடை வழிகளிலும், நாளொற்றிய வில்லும் அம்பும் உடையராய் வழிவருவாரை எதிர்நோக்கிக் கரந்திருக்கும் கொடுங்காட்சியினையும் பழந்தமிழ்ப் பாக்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளன.[2]

ஆறலைக்கும் மழவர்களின் கொடுமையை உணர்த்தும் காட்சிகளுள் ஒன்று இதோ: கூரிய அம்பேந்திய கையின

1. "வயவாள் எறிந்து வில்லின் நீக்கிப்
பயநிரை தழீஇய கருங்கண் மழவர்
அம்பு சேண் படுத்து வன்புலத்து உய்த்தெனத்
தெய்வம் சேர்ந்த பராஅரை வேம்பின்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வன்கண் அகலறை." அகம் 309.

2. "கடுங்கண் மழவர் களவு உழ எழுந்த
நெடுங்கால் ஆசினி ஒடுங்காடு." அகம் 91.
"கல்லா மழவர் வில் இடம் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை;" அகம் 127.

ராய்க், கைப்பொருள்கொண்டு காட்டுவழியைக் கடந்து போவாரை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தனர் மழவர். அக்காலை, ஓர் அரசன் விழைவையும் வேட்கையையும் அவன் பகையரசன்பால் எடுத்துரைத்தும், ஒப்புதல் பெற்றும் தூதுரைக்கும் தொழில் மேற்கொண்ட அந்தண முதியோன் ஒருவன், அரசன் செய்தி பொறித்த ஓலைச்சுருள் அடங்கிய உறையேந்தியவனாய் அவ்வழியில் வரலாயினன். உண்ணாமையால் உடல் தளர்ந்திருக்கும் அவனைக் கண்ணுற்ற மழவர், "வருவோன் வறியன்போல் தோன்றினும், உண்ணுதே உறுபொருள் சேர்த்து உறையில் இட்டு வைத்திருத்தலும் கூடும்; ஆகவே, இவனை வடிவம் கண்டு வாளாப் போகவிடுதல் கூடாது" என்று கருதினர். அந்நிலையில் அந்தணனும் அவர்களை அணுகிவிட்டான்; அவ்வளவே, மழவருள் ஒருவன் வாள்கொண்டு வெட்டி வீழ்த்திவிட்டான் அந்தணனை. வழியிடை வீழ்ந்த அவனை மழவர்கள் வளைத்துக் கொண்டு அவன் உடையையும், உடலையும் துருவித் துருவி ஆராய்ந்து விட்டனர்; உறையுள் ஓலையைக் கண்டனரேயல்லது உறுபொருள் ஏதும் கண்டிலர்; உடுத்திருக்கும் ஆடையும் ஓராயிரம் பொத்தல் உடையவாக உருக்குலைந்து போயிருப்பக் கண்டனர். எதற்கும் உதவா ஏழைப் பார்ப்பான் இவன் என்பதை அறிந்து கொண்டார்கள்; ஆனால், இவனை வாளாக் கொன்றோமே என்ற எண்ணமே அவர்கள் உள்ளத்தில் எழவில்லை; மாறாக, ஏதும் நடவாதது போல், அந்தணனைக் கொன்று வீழ்த்த உதவிய அம்பின் முனையில் படிந்திருக்கும் குருதிக்கறையைத் துடைத்து எறிந்து விட்டு, அவ்வம்பைத் தடவிக் கொடுத்தவாறே நடக்கலாயினர். இரக்கம் ஒன்றிலா அரக்கராம் அம்மழவர் தம் கொடுமைதான் என்னே![1]

---

1. "தூது ஒய் பார்ப்பான் மடிவெள் ஓலை
படையுடைக் கையர் வருதொடர் நோக்கி

இவ்வாறு, ஆனிரை கவர்ந்தும் ஆறலைத்தும் வாழ்வதே மழவரின் வாழ்க்கை நெறியாக அமைந்துவிட்டமையால், அவர்கள், அதற்குத் துணைபுரியும் படைப் பயிற்சியைப் பேணிக் காப்பதில் பெரிதும் விழிப்புடையராயினர். தம் குலத்து இளஞ்சிறுர்கட்கு அவர்கள் நனி இளையராயிருக்கும் போதே வாட்போர்ப் பயிற்சியும் விற்போர் பயிற்சியும், அளித்து, அவற்றைக் கற்றுத் தேர்ந்தாரைப் பாராட்டும் அரங்கேற்று விழாவினை ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வாராயினர். தம் வாழிடங்களில் பழமணல் போக்கியும், புதுமணல் பரப்பியும், வேறு பற்பல வகையாக அழகு படுத்தியும் அவர்கள் கொண்டாடும் அவ்வரங்கேற்று விழாக்காட்சியைப் பாடிப் பாராட்டிய புலவர்களும் உளர்.[1]

மழவர், இவ்வாறு ஆற்றல் மறவராய்த் தம் அண்டை நாட்டில் வாழக்கண்ட சேர மன்னர்களும், அச்சேர இனத்தோடு யாதோ ஒருவகையால் தொடர்புடையராய்த் தோன்றும் வேறு சில குறுநில மன்னர்களும், அம்மழவர்க்குத் தம் படைவரிசையில் இடம் அளித்துப் பயன் கொண்டார்கள். பல்யானைச் செல்கெழு குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய இருசேர மன்னர்களும், மழவர்களைப் பணிகொண்டு பேணி, 'மழவர் மெய்ம்மறை' என்ற பாராட்

உண்ணு மருங்குல் இன்மையின் கையது
பொன் ஆகுதலும் உண்டு எனக், கொன்னே
தடிந்து இடன் வீழ்த்த கடுங்கண் மழவர்,
திறனில் சிதாஅர் வறுமை நோக்கிச்
செங்கோல் அம்பினர் கைந்நொடியாப்பெயர்.'' அகம் 337.

1. "வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந் தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்,'' —அகம்: 187

டினைப் பெற்றுள்ளனர். அச் சேரர்க்குரிய பனந்தோடு அணியும் பேறுபெற்றோனாகிய அதியமான் நெடுமான் அஞ்சி, அம் மழவர்க்கு வாழ்வளித்து, "மழவர் பெருமான்" என்ற மாண்புமிகு பெயர் மேற் கொண்டான். சேரர்க் குரிய கொல்லி மலையாண்ட கோமகனாகிய வள்ளல் பெருந் தகை வல்வில் ஓரியும், அது புரிந்து அப்புகழ் கொண் டான்.

சேர இனத்தவரால் பேணிப் புரக்கப்பட்ட மழவர், வேறு சிலரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் உள. பொதினி மலைக்கு உரியோனும், அம்மலையில் கோயில் கொண் டிருக்கும் குமரவேள் நிகர்க்கும் பேராண்மை யுடையவ னும் ஆகிய நெடுவேள்ஆவி என்பான், அம்மழவரை ஓட ஓடத்துரத்தி வெற்றி கொண்டுள்ளான். மற்றும், கள்வர் குலக் கோமகனும், வேழங்கள் மலிந்த வேங்கட மலைக்குரி யோனுமாகிய புல்லி என்பான், மழவர்கள் வாழும் மழ கொங்க நாட்டிற்கே சென்று, அவர்களை வென்று துரத்தி விட்டு, அவர் வாழிடத்தையே தனதாக்கிக் கொண் டான்.[1]

9. **வடுகர்:** அதியர் முதல் மழவர் ஈறாகச் சொல்லப் பட்ட இனத்தவர் அனைவரும் தமிழகத்தையே தாயகமாகக் கொண்டவர்கள், தமிழ் மொழியே வழங்கியவர்கள். ஆனால், இத்தலைப்பில் கூறப்போகும் வடுகர், தமிழக மண்ணில் தோன்றியவரோ, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவரோ அல்லர். தமிழகத்தின் வடவெல்லையாகிய வேங்கட மலைக்கு அப்பால், வேற்று மொழி வழங்கும்

---

1. "உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவேள் ஆவி." அகம் 1.
"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி." அகம் 61.

நாடே வடுகரின் வாழிடமாம்; வடுகு என வழங்கும் தெலுங்கே அவர் வழங்கிய மொழியாம். ஆனால், பொருள் தேடிப் புறநாடு போகும் தமிழ் மக்களால் நன்கு அறியப் பட்டிருந்தனர் ஆதலாலும், தமிழக வரலாற்றில் தாமும் பங்கு கொண்டவர்களாகிப் புல்லி, கட்டி என்ற வீரர்களின் வாழிடங்களை அடுத்து வாழ்ந்திருந்தனர் ஆதலாலும், வட வேந்தர்களைப்போலவே தமிழகத்தைக் கைப்பற்றும் கருத்துடையவராய்த் தமிழக மண்ணினும் அடியிட்டுள்ளனர் ஆதலாலும், இவர் குறித்தும் சிலகூறி மேற்செல்வது நலமாம்.

வடுகர் விற்போரில் வல்லவர். காட்டில் மயில்கள் கழித்துச் செல்லும் தோகைகளைத் தம் வில்லில் அணிபெறக் கட்டி அழகு காண்பவர். வில்நாணை வலித்துக்கட்டி, விர்விர் எனும் ஒலியெழ விரைந்து அம்பேவும் அவர் கைத்திறம் கண்டு பாராட்டற்குரியதாம். கள்ளுண்டு களிக்கும் அவர்கள், காட்டுக் கொடுவிலங்கு நிகர்க்கும் வேட்டை நாய்கள் தொடர்ந்துவரக் கேட்டாரை நடுங்கப் பண்ணும் பம்பைப் பறையை முழக்கியவாறே, பக்கத்து நாடுகளுள் புகுந்து, அந்நாட்டு ஆனிரைகளைப் பாதி இரவில் வளைத்துக்கொண்டு,

---

1. "இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு
ஓங்குவெள் அருவி வேங்கடத்து உம்பர்
வால் நிணப் புகவின் வடுகர் தேயம்." —அகம்: 213.

"புடையலம் கழற்கால் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி, நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேயம்." —அகம்: 295.

"வடுகர் முனையது,
பல்வேல் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழி பெயர் தேயம்." —குறுந்: 11.

அவற்றைக் காத்து நிற்கும் காவற்படையினரை அழித்து விட்டு, கன்றுகளோடும், காளைகளோடும் கூடிய அந்நிரை களை, அற்றையிரவே தம் வாழிடங்கட்கு விரைந்தோட்டிக் கொணர்வதில் வல்லர் அவ்வடுகர்.[1]

வடுகரைத் தமிழக வரலாற்றோடு தொடர்பு படுத்தும் நிகழ்ச்சிகள் இரண்டு. வளங்கொழிக்கும் தமிழகத்தைத் தமதாக்கிக்கொண்டு, தமிழரசு அழித்துத் தம் அரசு நடாத் தும் தணியா வேட்கையுடையராய மோரியர் என்ற வட நாட்டு அரச இனத்தவர், தம் விழைவினை நிறைவேற்றிக் கொள்வான் வேண்டி, நெடிய பெரிய தேர்களோடு கூடிய பெரும்படையோடு தமிழகம் நோக்கிப் புறப்பட்டு, இடை வழியில் தம் தேர்களைச் செல்லவொட்டாது இடைநின்று தடுத்த மலைப்பாறைகளை யெல்லாம் வெட்டி அகற்றி வழி வகுத்துக்கொண்டு வருங்கால், அவர்க்குப் படைத்துணை அளிக்கும் வழிகாட்டிகளாய் விளங்கியவர் இவ்வடுகரே. தமிழகத்தின் எல்லைக்கண் வாழ்ந்து, தமிழ் நிலத்து இயல் பெலாம் உணர்ந்திருந்தவராய வடுகர், வழிகாட்டும் தூசிப் படையினராய்த் துணைபுரிய வந்துவிட்டனர் என்ற துணி வால், மோகூரை முற்றி வளைத்துக்கொண்ட மோரியர், அம் மோகூர்ப்பழையனால் முறியடிக்கப்பட்டபோது, மோரி யரோடு, வடுகரும் வந்தது மறந்து வாழிடம் நோக்கி விரைந் தனர்.[2]

---

1. "ஆரிருள் நடுநாள் ஏரா ஒய்யப்
பகைமுனை அறுத்துப் பல்இனம் சாஅய்த்
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்தோள் வடுகர்." —அகம்: 253.

2. "முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு

பெண்கொலை புரிந்த நன்னன் அவைப் புலவர்களால் பழித்துரைக்கத் தக்கோனாகிய நன்னனுக்குரிய பாழிநகர், வேளிர்கள் தங்கள் விழுநிதியை வைத்துக் காக்கலாம் வன்மை மிக்க அரண் உடையதாகும்; அதை அறிந்தும், ஆங்குக் குவித்து வைத்திருக்கும் பெருநிதிபால் கொண்ட ஆசைப் பெருக்கால், அப்பாழி நகரைக் கைப்பற்ற அரசர் பற்பலர் அரும்பாடுபட்டனர்; அவ்வாசை வடுகரையும் விட்டிலது. அதன் பயனாய்ப் பாழி சிலகால் வடுகர் உடைமை யாய் விளங்கிற்று; அக்காலைச் சோணாட்டு அரசியல் வானில் சுடர்விட்டுத் தோன்றினான் இளம்பெரும் சென்னி என்பா னோர் அடலேறு. ஏனைய வேந்தர்களைப்போலவே பாழி நகரைப் பற்றி ஆள்வதைத் தம் குடிக்கடனாகக் கருதினார் கள் சோழரும்; ஆனால், அது இளம்பெருஞ் சென்னியின் காலம்வரையும் கைகூடாமலே இருந்து வந்தது; அரியணை அமர்ந்ததும், அவன் கருத்து அதனிடத்திலேயே முதற்கண் சென்றது. குடிப்பழி கூறும் குறைவினையாக இருந்த பாழி நகர் வெற்றியில் கருத்தைப் போக்கிய இளம்பெருஞ் சென்னி, உடனே பெரும்படையோடு சென்று பாழியை வளைத்துக்கொண்டான். செம்பை உருக்கி உண்டாக்கினாற் போலும் உறுதிவாய்ந்த பாழிக்கோட்டை பாழுற்றது. பாழியைப்பற்றி ஆண்டிருந்த வடுகரை அவன் யானைப் படை உட்புகுந்து அழித்தது; பாழியைக் கைவிட்டுத் தம் நாடு போய்ச் சேர்ந்தனர் எஞ்சிய வடுகர். தமிழர் தம் வலியறியாது வந்த வடுகர்தம் தமிழக வாழ்வு பாழிப்போ ரோடு பாழுற்றுப் போய்விட்டது.[1]

---

விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த அறை."

—அகம்: 281.

1. "இளம்பெரும் சென்னி
குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார்

**10 வேளிர் :** ஆய், பாரி, பேகன் போலும் வள்ளல்களையும், நெடுவேள் ; ஆவி, நீடூர்க்கிழவன் எவ்வி, நன்னன் வேண்மான், வெளியன் வேண்மான், பிடவூர் வேண்மான், நெடுவேளாதன், இளவிச்சிக்கோ, இருங்கோவேள் முதலாம் பெருவீரர்களையும், அழுந்தூர்வேள், நாங்கூர்வேள், மையூர் கிழான் வேண்மான்போலும், முடியுடை மூவேந்தர்க்கு மகட்கொடை அளிக்கும் மாண்புடையாரையும், அழும்பில் வேள்போலும், வடவர் புறங்கண்ட படைத்தலைவர்களையும் பெற்றளித்த பெருமைசால் பழம்பெரும் தமிழ்க்குடி வேளிர் குடியாம். கடல் கடந்து ஈழத்தை வென்றும், கங்கையைக்கடந்து இமயத்தை வென்றும் வீறுகொண்ட வேந்தனும் கரிகாற்பெருவளத்தானையும் எதிர்க்க வல்ல வேளிர் பதினொருவர் பிறந்ததும் இவ்வேளிர் குடியேயாம்.

இவ்வாறு வள்ளல்களாய், வீரர்களாய், வளமார் வாழ்வுடையராய் வாழ்ந்து மறைந்த வேளிர்கள் பிறந்த குடிபற்றிய வரலாற்றினைப், பிழையற வகுத்துரைக்க மாட்டாது வரலாற்றுப் பேராசிரியர்கள் விழிப்புண்டு நிற்கும் நிலையிலேயே, தமிழக வரலாற்று மூலங்கள் உள்ளன.

“தேவரெல்லாம் கூடி, யாம் சேர இருத்தலின் மேருத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டு இருத்தற்கு உரியர் என்று அவரை வேண்டிக் கொள்ள, அவரும் தென்திசைக்கண் போதுகின்றவர் துவார பதியில் போந்து, நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும், அருவாளரையும்கொண்டு போந்து, காடு

---

செம்பு உறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானை.” —அகம்: 375.

கெடுத்து நாடாக்கிப் பொதியிலின் கண் இருந்தனர்" எனத், தொல்காப்பியப் பாயிரவுரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருப்பதையும், அரையம் என்ற பேரூரில் இருந்து அரசாண்ட வேளிர் தலைவனும் இருங்கோவேளைக் கண்டு கபிலர் பாடிய பாட்டில்[1] வரும் தொடர்களையும் சான்றுகளாகக் கொண்டு, தமிழகத்து வேளிர்களை, வடநாட்டுக் கண்ணன் வழியினராய்த் துவாரகையில் வாழ்ந்த யாதவ குலத்தவராக்குவர் சில வரலாற்று ஆசிரியர்கள்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் குறிக்கும் துவராபதி, நிலங் கடந்த நெடுமுடி அண்ணல் வாழ்ந்த வடநாட்டுத் துவாரகை அன்று; பறம்பு மலையைச் சார்ந்த ஒரு பகுதியேயாகும். ஆதலாலும், நச்சினுக்கினியர், கன்ன பரம்பரையாகப் பல பட வழங்கி வந்த செய்திகளை யெல்லாம் ஒரு தொடர்பு படுத்தி எழுதியுள்ளார் எனக் கொள்ளவேண்டுதலின், அவர் கூறியவற்றிற்கெல்லாம் சொற்கிடக்கை முறையானே பொருள் கொள்ளவேண்டும் என்னும் நியதி இன்றும் ஆதலாலும், துவராபதிக்கும் நெடுமுடி அண்ணலுக்கும் சம்பந்தம் கூறுவதும், அதற்கும் வேளிர்க்கும் சம்பந்தம் கூறுவதும் பொருந்தாதாம் எனக் கூறி, வேளிரின் வடநாட்டுத் தொடர்பை வேரறுத்துத் தமிழ்க்குருதி பாய்ச்சிக் காட்டுவர் வேறு சில வரலாற்றுப் பேராசிரியர்கள்.

தமிழ் நிலத்தோடு ஒன்றி நின்று, தமிழ் தழைக்கத் தமிழ்ப் பெரும் புலவர்களைப் பேணிப் புரந்த அப் பெருமக்களைத், தமிழினத்தின் வேறுபட்டவராகக் கொள்ளத் தமிழ்

1. "நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே!" —புறம்: 201

நெஞ்சம் இடம் கொடுத்திலது; ஆகவே, வேளிர் குலமும், தமிழர் வழிவந்த தமிழ்க்குலமே என கொள்வோமாக.

தமிழகத்து மறவர் குலங்கள் சிலவற்றைக் கண்ணுற்ற நாம், இனி, எடுத்துக் கொண்ட கோசர் பற்றிய வரலாற்றினைச் சிறிது விளங்க உணர்வோமாக.

# 2. இடமும் இயல்பும்

**வட** இந்தியப் பேரரசுகள் பலவற்றுள்ளும், உலகம் மதிக்கும் ஒப்புயர்வற்ற ஒரு பேரரசு நடாத்திய மௌரிய மரபில், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் அரியணை அமர்ந்து, வட பேரிமயம் முதல் வேங்கடம்வரைப் பரவிய பெருநாட்டாண்ட மன்னர் மன்னனும் அசோகன், "என் ஆட்சிக்கு அடிபணி யாது என் அரசோடு ஒத்த அரசு நடாத்திய பெருமை வாய்ந்த பேரரசுகள்" என்று கூறிப் பாராட்டிய தமிழகத்து அரச இனங்கள் நான்கனுள், சத்யபுத்ரர் இனமும் ஒன்று. அச் சத்யபுத்ரரே கோசராவர் எனத், திருவாளர் ஸிமித், திருவாளர் நீலகண்ட சாஸ்திரியார் போலும் வரலாற்றுப் பேராசியர் பலரும் ஒரு முடிபாகக் கூறுவர். கோசரைப் பற்றிக் கூறும் ஒவ்வோரிடத்திலும், "கோசர் நன்மொழிபோல வாயாகின்று," "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை வளங்கெழு கோசர்" என்பனபோலும் தொடர்களையே வழங்கி, அவர்கள் வாய்மொழி வழுவாதவர் என்பதை வற்புறுத்தும் பழந்தமிழ் இலக்கிய வரலாற்று மூலங்கள், சத்யபுத்ரர் என்பார் கோசரே என்பதை அரண் செய்கின்றன.

கோசர்க்குரிய நாடு, துளுநாடாகும். "அவர் பாக்களுள் வரலாற்றுக் குறிப்பு அமையாப் பா ஒன்றுகூட இல்லை"

என்று கூறத்தக்க வகையில், தமிழகத்து வரலாற்று நிகழ்ச்சிகளோடு தமிழகத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளின் வரலாற்று நிகழ்ச்சிகளையும், தம் காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளோடு தமக்கு முந்திய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளையும் கூறித், தமிழகத்து முதுபெரும் வரலாற்றுப் பேராசிரியர் என மதிக்கத்தக்க மாமூலனார், கோசரைப் பற்றிய சிறந்த செய்திகள் பலவற்றைத் தெளிவாக அறிந்து அறிவித்துள்ளார். அவர், கோசர்க்குரிய நாடு, துளுநாடாகும் என்றும் கூறியுள்ளார்.

மங்களூரை நடுவிடமாகக் கொண்டு, துளுமொழி வழங்கும் நாடே துளுநாடு என்றும், கேரளநாட்டிற்கு எல்லையாகும் சந்திரகிரியே துளுநாட்டிற்கும் எல்லையாம் என்றும் கூறும் வரலாற்றுப் பேராசிரியர்கள், அதுவே கோசர் நாடாம் என்பதில் ஒத்த கருத்துடையவரேயாவர். கோசரின் வாழிடமாகச் சிலப்பதிகாரம் கூறும் கொங்கு நாட்டை, "மேல் கொங்குநாடும் குடகு, மைசூர் பகுதிகளும் அடங்கிய கங்க தேசமாகத்," திரு. மு. இராகவையங்கார் அவர்களும், "கோவை, தென் சேலம் மாவட்டங்களைக் கொண்ட நாடாகத்," திரு. சிமித் அவர்களும் கொண்டாலும், அப் பகுதிகள் துளுநாட்டை ஒட்டியனவே என்பது குறிப்பிடத்தகும்.

இவ்வாறு, கோசர், விந்தியமலைக்குத் தெற்கே, மேற்குக் கடற்கரையை அடுத்துள்ள துளுநாட்டிலும், கொங்கு நாட்டிலும் வாழ்ந்தவராவர் என்பது பழந்தமிழ் இலக்கியங்களாலும், வரலாற்றுப் பேராசிரியர்களாலும் உறுதி செய்யப் பட்டிருப்பவும், கோசர் பற்றிய ஆராய்ச்சி உரைக்கும்

"மெய்ம்மலி பெரும்பூண் செம்மல் கோசர்,
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாகல் ஆர்கைப் பறைக்கண் பீலித்
தோகைக் காவின் துளுநாடு." -அகம்: 15.

தும் சின்னூல் ஒன்றில், திரு. ரா. இராகவையங்காரவர்கள், "கோசர், முதற்கண் நான்மொழி நாடு எனும் பகுதியில் வதிந்து, பின் குடகில் குடியேறியவராவர்" "என்று கூறியுள்ளார்." நான்மொழிக் கோசர் தோன்றியாங்கு" என்ற மதுரைக்காஞ்சித் தொடரும், "திருவறைக் கல்லும் நான்மொழி நாடும் உடைய வத்தவராயனை விடுகாதன்" என்ற கல்வெட்டுத் தொடருமே அவரை அவ்வாறு கொள்ளச் செய்தன. "மதுரைக் காஞ்சித் தொடருக்கு, நாற்கோசர் மொழித் தோன்றியாங்கு எனச் சிதைத்துக் கூட்டி, "நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" எனக் கூறும் நச்சினார்க்கினியர் உரையினும், நான்மொழி நாட்டுக் கோசர் தோன்றினாற் போன்று எனக் கிடந்தபடியே பொருள் கொள்வதே பொருந்தும் ஆதலாலும், கல்வெட்டுத் தொடர் வழங்கும் திருவறைக் கல்லாகிய நாமக்கல் மலை, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற இந் நான்கு மொழியும் வழங்குதற்குரிய எல்லையில் இருப்பதால், அது இருக்கும் நாடு நான்மொழிநாடு எனும் பெயருடையதாதல் பொருந்தும் ஆதலாலும், அந் நான்மொழி நாடு, கோசர் வாழ்ந்த கொங்கு நாட்டின் வடபகுதிக்கண் விளங்குவதாலும், கோசர் முதற்கண் நான்மொழி நாட்டில் வதிந்து, பின், குடகில் குடியேறியவரார் எனக் கொள்வதே பொருந்தும்" என்றும் கூறுகிறார் அவர்.

மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவனாகிய, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும், அதைப் பாடிய புலவராகிய மாங்குடி மருதனாரும் கடைச்சங்க காலத்தவராவர். கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். அக்காலத்தில், இன்றைய கேரள நாட்டில் சேர அரசே சிறப்புறத் திகழ்ந்தது. அக் காலை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் வழங்கும்

செந்தமிழ் மொழியே ஆங்கு வழக்கில் இருந்தது. மலையாள மங்கை, தமிழ்த்தாய் வயிற்றில் முகிழ்க்காத காலம் அது. மலையாள மொழிக்கு ஆறு அல்லது ஏழு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வாழ்வு ஏற்பட்டதில்லை என்பதே மொழிநூல் வல்லாரின் முற்ற முடிந்த முடிபாகும். ஆகவே, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்மொழிகள் அப் பண்டைக் காலத்தே வழங்கியதாகவும், அந் நான்கு மொழிகளும் ஓரிடத்தே கலந்து வாழ்தற்கிடமாகிய நாமக் கற் பகுதி நான்மொழி நாடென வழங்கப் பட்டதாகவும் கொள்வதோ, அக் கல்வெட்டுத் தொடரையே அடிப்படை யாகக் கொண்டு, "நான்மொழிக் கோசர்" என்ற மதுரைக் காஞ்சித் தொடருக்கு "நான்மொழி நாட்டுக் கோசர்" எனப் பொருள் கொள்வதோ, பொருந்தாது எனக் கொள்க.

கோசரைக் குறிப்பிடும் ஒவ்வோரிடத்திலும், பன்மை விகுதி கொடுத்து வழங்குவதிலும், "ஒன்று மொழிக் கோசர்", "வாய்மொழிக் கோசர்", "கோசர் நன்மொழி" என அவர்தம் நாநலம் உணர்த்தும் சிறப்பு அடையாக "மொழி" எனும் சொல்லை இணைத்து வழங்குவதிலும், பழந் தமிழ் இலக்கியப் பாக்கள் ஒருமைப்பாடுள்ளனவாம் ஆத லானும், "நாலூர்க் கோசர்", என்ற குறுந்தொகைத் தொடர், கோசருள் நால்வேறு கிளைகள் உள்ளன என உணர்த்துவ தாலும், "நான் மொழிக் கோசர்" என்ற தொடரில், "நான்", கோசரின் பன்மையை உணர்த்தும் முன் அடை யாக, "மொழி" இடைநின்று கோசரின் இயல்பை உணர்த்துவதாகக் கோடல் பொருந்துமேயல்லாது, "நான்" மொழியின் பன்மையை உணர்த்துவதாகக் கோடல் ஒரு சிறிதும் பொருந்தாது என்க.

இவ்வாறு கூறுவதால், அக் கல்வெட்டு எழுந்த காலத் தில் நான்மொழிநாடு எனும் பெயர் பெற்றிருந்த நாமக்கல் மலைப்பகுதிகள், கடைச்சங்க காலத்தினும் அப்பெயரே

பெற்றிருந்தது என்பதுதான் மறுக்கப் பட்டதேயல்லது' அந் நாமக்கற் பகுதியை அடுத்துள்ள கொங்கு நாட்டில் கோசர் வாழ்ந்திருந்தனர் என்பது மறுக்கப் பட்டிலது எனக் கொள்க. ஆனால், கோசர், கொங்கில் கோலோச்சத் தொடங்குமுன் குடகில் வாழ்ந்திருந்தவராவர் என, அவர் கூறுவது பொருந்தாது.

செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலை அமைத்து வஞ்சியில் கொண்டாடிய விழாவிற்கு வந்திருந்தோருள் ஒருவராகக் "குடகக் கொங்கரும்", தங்கள் தங்கள் நாட்டகத்தே மழைதொழில் என்றும் மாறாதிருக்க, கண்ணகிக்கு விழவொடு சாந்திசெய்த மன்னர்களுள் ஒருவராகக் "கொங்கிளங்கோசரும்" கூறப்பட்டுள்ளனர். இவ்விரு தொடர்களையும் சான்றுகளாகக் கொண்டு, விழாவிற்கு வந்திருந்தவராகக் கூறப்படும் கொங்கர், குடகிற்கு உரியவராகவும், விழாக் கொண்டாடிய கோசர், கொங்கில் வாழ்பவராகவும் கூறிய ஒருமைப் பாட்டாலும், விழாவிற்கு வந்திருந்தவரே விழாக் கொண்டாடத் தக்கவராவர் என்பதே பொருந்தும் என்பதாலும், கொங்கரையும் கோசரையும் ஒருவராகவே மதித்து, கொங்கிளங் கோசராவர், முதலில் கொங்கில் வதிந்தவர் என்றும், பின்னர்க் குடகடல் பக்கத்து மலைநாட்டில் குடியேறியவர் என்றும் துணிந்து கூறியுள்ளார் அவர்.

கொங்கு நாட்டிற்கு உரியவர் கொங்கரே என்பதிலும், கொங்கு நாட்டில் வாழ்பவர் கொங்கரேயாதல் வேண்டும் என்பதிலும் சிறிதும் ஐயம் இல்லை என்றாலும், கொங்கிற்கு உரியவராகிய கொங்கர் குடகடற்கரை நாட்டிற்குத் துரத்தப்பட்டனர் என்பதற்கு இறவா இலக்கியச் சான்று ஒன்றும் இருக்கிறது. வேளிர் தலைவனும் வள்ளலுமாகிய ஆய் அண்டிரனைப் பாடிய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் "விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய் நின்னாட்டு......அண்ணல் யானை எண்ணின் கொங்கர்க் குட

கடல் ஓட்டிய ஞான்றைத் தலைப் பெயர்த்திட்ட வேலினும் பலவே'' என்ற பாட்டில், அவன், கொங்கரைக் குடகடற்பகுதிக்கு ஓட்டிய செய்தி உரைக்கப்பட்டுள்ளது காண்க. ஆக, தங்கள் வாழிடமாம் கொங்கு நாட்டை விட்டுக் கொங்கர், குடமலை நாட்டிற்குச் சென்றுவிட, அவர் விட்டுச் சென்ற கொங்கு நாட்டில், அதன் அண்டை நாடாம் துளுநாட்டில் வாழ்ந்திருந்த கோசர் குடியேறினர் எனக் கொள்வதால், எத்தகைய வரலாற்று இடுக்கணும் இடம் பெறுமை உணர்க. மேலும், செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் எடுத்த விழாவிற்கு வந்திருந்தவர், ஆரியமன்னர், சிறை வீடுபெற்ற மன்னர், குடகக் கொங்கர், மாளுவவேந்தன், கயவாகு முதலியோராகும், கண்ணகிக்குத் தங்கள் நாட்டகத்தே விழாவெடுத்தோர், கொற்கை ஆண்ட வெற்றிவேற் செழியன், கொங்கிளங் கோசர், கயவாகு, சோழன் பெருங்கிள்ளி என்றே உரைபெறுகட்டுரை கூறுகிறது. ஆகவே, விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரும் தம் நாட்டகத்தே விழா எடுத்திலர்; தம் நாட்டகத்தே விழா எடுத்தோர் அனைவரும் விழாக்காண வஞ்சிக்கு வந்தாரல்லர் எனத் தெரிகிறது. ஆகவே, "விழாவிற்கு வந்திருந்தார்கள் கொங்கர்; அக் கொங்கு நாட்டகத்தே விழாக் கொண்டாடினர்கள் கோசர்; ஆகவே கொங்கரும் கோசரும் ஒருவரே'', எனக் கொள்வது பொருந்தாது. கொங்கர் வேறு; கோசர் வேறு என்பதை உணர்த்தவே, கொங்கரைக் குடகடலோடும், கோசரைக் கொங்கோடும் தொடர்பு படுத்தியுள்ளார் ஆசிரியர் இளங்கோவடிகள். அவனை, அவ்விருவருமே கடவுளாக ஏற்றுப் போற்றினர்கள் என்ற அவ்வேறுபாட்டை உணர்த்தவே, வேட்டுவவரியில், "இவளோ, கொங்கச் செல்வி, குடமலையாட்டி'' என, அவர்தம் வாழிடங்களை வேறுவேருக எடுத்து ஓதினர். மேலும், கொங்கர், தம் வாழிடம் விட்டு மேலைக்கடல் நோக்கிச் சென்றனர் எனக் கூறும் பழங்

தமிழ்ப் பாக்களே, கொங்கை வாழிடமாக்கொண்ட கோசர், அதைவிடுத்து வெளியேறியபோது கீழ்க் கடலைச்சார்ந்த செல்லூர்க்கும், தென்கிழக்கின் கண்ணதாகிய மோகூர்க்கும் சென்றதாகவே கூறுகின்றன. ஆக, எவ்வகையான் நோக்கினும், குடகக் கொங்கர் வேறு, கொங்குநாட்டுக் கோசர் வேறு, என்பதுதான் நிலைநாட்டப் பெறுகிறதேயல்லாது, கொங்கரும் கோசரும் ஒருவராவர், ஆகவே கோசர் முதலில் கொங்கில் வதிந்தவர் என்றும், பின்னர்க் குடகடல் பக்கத்து மலைநாட்டில் குடியேறியவர் என்றும் கொள்வது சிறிதும் ஏற்புடைத்தாகாது என, அறிக.

கோசரின் வாழிடம் பற்றிய விளக்கம் தரமுனைந்த அதே நூலில், அவர், அன்னாரின் இனத் தொடர்பு குறித்தும் சில கூறியுள்ளார். "கோசம் என்பது பெருங்கதைத் தலைவனை வத்தவர்கோன் உதயணன் இருந்து அரசாண்ட கோசாம்பிக்கு வழங்கும் பெயராகும். தம் வத்ஸநாடு பஞ்சம் பட்டும் பூகம்பம் எய்தியும் தடுமாறிய காலத்து, இவர் இத் தென்னாடு புகுந்தவர் என்று கொள்ளலாம். தென்னாட்டில் வாழ்ந்தவர் மரபில் வந்தவர் தலைவனைப் பற்றிய நூல் வச்சத் தொள்ளாயிரம். வச்சம் என்பது வத்ஸ தேசமாகும். இனி, இக் கோசாம்பியை ஆண்ட அரசர் இளன் என்னும் திங்கட்குலத்து வேந்தன் வழியினர் ஆவர்; அதுபற்றி அவன் வழிவந்தோர் இளங்கோ எனப் பெயர் சிறப்பர். இனி, இவர் வத்ஸ தேசத்துக் கோசம் என்ற தலைநகரிலிருந்து வந்தவராதலான் இளங்கோசர் என வழங்கப்பட்டனர் எனின் அதுவும் பொருந்தும். வத்ஸ என்ற சொல், ஆரியத்தில் இளமைக்குப் பெயராதலான், வத்ஸ கோசர், தமிழில் இளங்கோசர் என மொழி பெயர்த்து வழங்கப்பட்டுள்ளனர். கோசரைக் கூறிய பலவிடத்தும் சான்றோரெல்லாம் 'பல்லிளங் கோசர்', 'நல்லிளங் கோசர்', 'கொங்கிளங் கோசர்' என வழங்கிக் காட்டலான், இஃது உடல் இளமை

பற்றியதாகாது என்பது ஒரு தலையாகத் துணியலாம். வத்ஸ தேசத்தை இளநாடு எனக் கொண்டு, அந்நாட்டு வேந்தனை இளங்கோ என்றும், அந்நாட்டுக் கோசரை இளங்கோசர் என்றும் வழங்கினர் என்பது பொருந்தியதாகும். இனி, இக் கோசரைப் பற்றி நல்லிசைப் புலவர்கள் கூறிய சிறப்பியல்புகள் பலவும், கோசாம்பியை ஆண்ட உதயணன் நண்பினர்க்குப் பெரிதும் ஒத்துவிளங்குதல் அவர் கதை நோக்கி அறிக. "நன்றல் காலையும் நட்பிற்கோடார்" என்ற கோசர் பெரும் பண்பு. உதயணன் சிறைப்பட்டிருந்த போது அவன் நண்பனுகிய யூகி அவனை விடுவிடுக்கப் பட்ட பாட்டான் நன்கு அறியலாகும். இக் கோசர்க்குச் சிறந்த, "சென்று வழிப்படூஉம் திரிபில் சூழ்ச்சி என்பது, உதயணன் பகைவெல்ல வேண்டி, யூகி முதலியோர் புரிந்த அரியபெரிய சூழ்ச்சிகள் பலவற்ருலும் நன்கு அறிந்ததாகும்" என்றெல்லாம் பலப் பல கூறி, கோசர், வடநாட்டு வத்ஸ தேசத்துக் கௌசாம்பி நகரத்தவரே யல்லாது, பண்டு தொட்டுள்ள தமிழ்க்குடி மக்கள் அல்லர் என்று முடித்துள்ளார்.

இவ்வாறு, கோச்ரை, வத்ஸதேசத்துக் கோசாம்பி நகரத்தராகக்கொண்ட அவரே, கோசர், காஷ்மீர நாட்டுக் குடியினவராவர் என்ற பிறிதொரு கொள்கையையும் கூறுகிருர். "பிற்காலப் பாடல்களில் இவர், வத்தவர் என வழங்கப்பட்டவராயினும், சங்கத் தொகை நூல்களில் இளங்கோசர் என்றே பாடப்படுதலான், இவர், கோசத்தைத் தலைநகராகக்கொண்ட வத்சநாட்டில் புகுதற்கு முன்னரே, கோசர் என்ற பெயருடன் இருந்தவர்தாம் என்று துணிவதும் பொருந்தும். காச்மீர தேசசரித்திரமாகிய இராச தரங்கணியில் நட்பிற் பிழையாமைக்கு, அந்நாட்டு மக்கள் கோசம் என்ற ஒரு ஆள்முறை மேற்கொண்டொழுகியது கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, நட்பிற் பிழையாத பெருவாய்மைக்குக் கோசமுறையை மேற்கொள்பவராத

லின், இவர் கோசர் எனப்பட்டார் எனின், இத் தென்னாட்டுக் கோசரியல்பிற்கு அது நன்கு பொருந்துமென்க. இஃது இக்கோசர் தலைவி அன்னி மிஞிலியென்பாள், தன் வஞ்சினம் திருங்காலும் சினத்திற்கொண்ட படிவமாருள் என்பதனால் உய்த்துணரலாகும். கோச நாடு எனப் பெரிய சுனைத் தடம் காச்மீர நாட்டில் உண்டு. இவற்றால், காச்மீரத் துவராவதிவிட்டு வேளிர் தென்னாடு புகும்போதே, அவர் கூடவே ஆண்டுள்ள கோசமுறை வீரரும் வந்தனர் என்று கொள்வது பொருந்தும். இக் கருத்திற்கேற்பக் கொள்ளின் கோசவீரர் காச்மீரத்து நின்று முன்னரே தென்னாட்டிற் குடியேறியிருந்தனர் என்றும், பின்னர்த் தம் இனத்தவரிருக்கும் அத்தென்னாடே வத்தவ நாட்டுக்கோசரும் வந்து உறைந்தனர் என்றும் தெளிவது பொருத்தமாகும்'' என்று அவர் கூறுவது காண்க.

வடநாட்டார் சிலரைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். ஆனால், அன்னாரை அவர்கள் மோரியர் நந்தர் என இனப் பெயரால் அறிந்திருந்தனரே யல்லது, ஊர்ப்பெயரால் அறிந்தாரல்லர். ஒருவரை அறிவதில், நாட்டால், மொழியால், இனத்தால் அறிவதே முறையாம். ஊரால் அறிதல் பொருந்தாது. ஓரினத்தார் இருந்து ஆண்டனர் என்றால், அவர் இருந்த இடம், அரசோச்சுமளவு பரப்புடைய ஒரு சில ஊர்களைக்கொண்ட ஒரு சிறு நாடாகவேனும் இருத்தல் பொருந்துமேயல்லாது, தனி ஊராக இருத்தல் பொருந்தாது. ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு இராசாவாம் என்பது போல் அது நகைப்பிற்கிடமாகிவிடும். ஆகவே, கோசம்பி நகராண்டமையால் கோசர் எனப்பட்டனர் எனல் பொருந்தாது.

கோசர் எல்லா இடத்துமே இளங்கோசர் எனப்பட்டார் அல்லர்; முதுகோசர் என்றும் அழைக்கப்பட்டுள்ள

னர். இளமை, முதுமைபோலும் அடைபெருது, வறிதே கோசர் எனக் கூறப்பட்ட இடங்களும் பலவாம் என்ற இலக்கியச் சான்றுகள் உண்மையாலும், இளன் என்பான் மரபினராய கோசர், இளன்வழிக்கோசர், இளங்கோக் கோசர், இளமாவுக்கோசர் என அழைக்கப்பெறுதல் முறையே யல்லது, இளங்கோசர் என அழைக்கப்பெறுதல் முறையாகாது ஆதலாலும், இளங்கோசர் என்பதில் வரும் இளம் என்ற அடை, முதுமைக்கு மாருன இளமைப் பருவத்தைக் குறிக்க வருவதேயல்லது வேறன்று ஆதலாலும், வத்ஸ நாட்டுக் கோசத்தை ஆண்ட இளன் என்பான் வழியினராதலின், கோசர் இளங்கோசர் எனப்பட்டனர் என்பதும் ஏற்புடைத்தன்று.

வத்ஸ கோசர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழ்ப்படுத்தி வழங்க விரும்பியிருந்தால், தமிழர் அவ்விரு சொற்களையுமே மொழிபெயர்த்து வழங்கியிருப்பர். அவ்வாறு வழங்காமல், வத்ச என்ற மொழி முதல் சொல்லை மட்டும், அதன் பொருளாகிய இளமை என மொழிபெயர்த்து, மற்ருென்றை வடசொல்லாகவே கொண்டு இளங்கோசர் என வழங்கிஞர் என்றல் மொழியறிவுடையார் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. வத்ஸ என்பதன் மொழிபெயர்ப்பே இளம் என்பதாயின், வச்சத் தொள்ளாயிரம், தன் பாட்டுடைத் தலைவனை, வச்சக்கோ என்ருவது, இளங்கோ-என்ருவது வழங்கியிருக்க வேண்டுமேயல்லது, இளமைப் பொருள்படும் இருமொழிச்சொற்களும் இடம்பெற வச்சத்து இளங்கோ-என வழங்கியிருத்தல் கூடாது. இவ்விரு நிலைகளையும் எண்ணிப் பார்ப்பவர்க்கு, இளங்கோசர் என்பதில் உள்ள இளம், வத்ஸ என்பதன் மொழிபெயர்ப்பாம், ஆகவே இளங்கோசராவர், வத்ஸ கோசராவர் என்ற கொள்கை, பிழைபடு கொள்கையாகவே புலப்படும்.

தன் கணவன்மாரை வஞ்சித்தும், தன் பெண்மைக்கு மாசேற்ற முனைந்தும் கேடு சூழ்ந்த கௌரவர் தலைவனைக் கொன்று, அவன் குருதிநீவிக் கூந்தல் முடிக்கும் காலும் என் கூந்தல் விரிந்தே கிடக்குமாக என வழங்கிய வஞ்சினத்தை வாய்ப்பக்கண்ட பாஞ்சாலன் பெற்ற பொற்கொடி கோசர் குலத்தவள் அல்லள் ஆதலாலும், "காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்" என வஞ்சினம் வழங்கி, வழங்கியவாறே, வேந்தன் உயிர்கொண்டும், ஊரை எரியூட்டியும் சினம் தணிந்து, கணவன் வரப்பெற்று வாழுடைடைந்த, புகார் அளித்த பூங்கொடியாள் பைந்தமிழ் நங்கையல்லது கோசர்குலக் குமரி அல்லள் ஆதலாலும், காஷ்மீர நாட்டவர், கோசமுறை என்ற வஞ்சினம் வழங்கும் வழக்கமுடையவராவர், தந்தையின் கண்கவின் அழித்தார்க்குக் கேடுசூழா முன், கலத்தும் உண்ணேன் வாலிதும் உடேன் என வஞ்சினம் உரைத்து, அவ்வாறே வாழ்ந்து வெற்றிகண்ட கோசர் குலக் கன்னியாம் அன்னி மிஞிலி பால், அக்கோசமுறைச் சூள்உரை இடம் பெற்றுள்ளது; ஆகவே, கோசர், அக்காஷ்மீர நாட்டவர் எனல் பொருந்தாது.

புணர்ச்சியும் பழகுதலும் அற்ற நட்புடையராகவும், 'செல்வக்காலை நிற்பினும் அல்லற்காலை நில்லலன்; வருவன்' என்று கூறிய கோப்பெருஞ் சோழன் உரை பொய்யாவாறு வந்து, அவனோடு வடக்கிருந்து, உயர்ந்த நட்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கிய பிசிராந்தையார் கோசர் அல்லர். ஆதலின், கோசர்பால் காணலாகும் சிறந்த பண்புகளுள் ஒன்றாகப் பழந்தமிழ்ப் பாக்கள் கூறும், நன்றல் காலையும் நட்பிற்கோடாமை, வத்ஸ நாட்டுக் கோசம்பி ஆண்ட வத்தவர் கோனும் உதயணன் சிறைப் பட்டானாக, கெட்டகாலத்து விட்டனன் என்னாது நட்டோன் என்பது நாட்டிய யூகிபால் காணலாம் நட்புடை

மையிலிருந்து வழிவந்தது ஆதலின், கோசர், யூகி பிறந்த கோசாம்பி நகரத்தினின்றும் வந்தவராவர் என்பதும் பொருந்தாமை அறிக.

வச்சத் தொள்ளாயிரம் என்ற பெயருடையதொரு தமிழ்நூல் உண்மையாலும், அந்நூலின் பல இடங்களில் பாட்டுடைத் தலைவன் "வச்சத்து இளங்கோ" "வத்தவர் கோன்" "வச்சத்தார் மன்னவன்" எனக் கூறப்பட்டுள்ளமையாலும், வத்ச நாட்டுக் கோசத்திலிருந்து இத்தென்னாடுக்குச் சீரும் சிறப்பும் பெற வாழ்ந்த வீரர் பலர் உண்டு எனக் கூறுமுகத்தான், கோசரைக் கோசாம்பி நகரத்தோடு தொடர்புபடுத்துவது பிறிதொருமுறை.

வச்சத் தொள்ளாயிரம் மிகமிகப் பிற்பட்ட காலத்தது. அதில், வச்சத்தார், வத்தவர், என்பார் கூறப்பெறுதல் கொண்டு, பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் கோசரை, வத்தவ நாட்டவராகக் கோடல் பொருந்தாது.

கங்கை கொண்டான் என வழங்கப்பெறும் முதலாம் இராசேந்திர சோழனும், முதலாம் குலோத்துங்கனும், வத்ஸ நாட்டைச் சேர்ந்த சக்கரக் கோட்டம் என்ற நகரை வென்றனர் என, அன்னாரின் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வெற்றி கொண்ட நாடுகளின் பெயர்களையும், மன்னர்களின் பெயர்களையும், தம் பெயர்களோடோ, தம் தண்டத் தலைவர் பெயர்களோடோ இணைத்துப் பெருமை கொள்வது பழந்தமிழ் அரசர்களின் வழக்கமாம். ஒரு நாட்டை வெற்றி கொண்ட படைத்தலைவனுக்கு, அது குறிக்கும் பட்டப் பெயர் சூட்டி அந்நாட்டு ஆட்சி உரிமையை அளிப்பதும் அவர்கள் வழக்கமாம். முடிகொண்டான் என்பவனுக்கு வத்தராயன் என்ற பட்டப்பெயர் வழங்கி வத்ஸ நாட்டிற்குத் தலைவனாக்கினான் முதலாம் குலோத்துங்கன் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வகையால் வத்த

வர் ஆன தமிழ் வீரர் பலர்இருக்க, அவருள் ஒருவரைப் பற்றிப் பாடியதே வச்சத் தொள்ளாயிரமாம்.

"உன் உயிரும் என் உயிரும் ஒன்றென்பது இன்றறிந்தேன்;
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா !-உன்னுடைய
பொன்னாகத்து எங்கையர்தம் பொற்கை நகச்சின்னம்
என்ஆகத் தே எரிகை யால்" [கண்டு

என்ற வச்சத் தொள்ளாயிரப் பாட்டில், புலவர், பாட்டுடைத் தலைவனுக்கு அணித்தாக இருந்தே பாடியுள்ளமையால், அப் பாடலைப் பெற்ற வச்சத்தார் மன்னவன், வத்ச நாடு வென்று வத்தராயன் என்னும் பட்டப் பெயர்பூண்ட படைத்தலைவன் வழியில் வந்தவன் என்றே கொள்ளுதல் வேண்டும். ஆகவே, வச்சத் தொள்ளாயிரத்தைக் கொண்டு தமிழகத்துக் கோசரை, வத்ஸ நாட்டுக் கோசம்பி நகரத்தவராக்குவதும் பொருந்தாது எனக் கொள்க.

கோசரின் வாழிடம் வாழ்க்கை முறை பற்றிய விளக்கங்களை முறையாகவும் முற்றவும் உணர்த்தக்கூடிய வரலாற்று மூலங்கள் கிடைத்தில ஆதலின், அவர் குறித்துச் செந்தமிழ் இலக்கியங்கள் அளிக்கும் ஒரு சில குறிப்புக்களைக் கொண்டு நோக்கினால், கோசர்க்குரிய நாடாகத் துளுநாடு கூறப்பெறுமேனும், அவர்கள் அங்கேயே நிலைத்த குடியினராய் வாழ்ந்திராது, தமிழகம் எங்கும் அலைந்து திரியும் நாடோடி வாழ்க்கையினையே மேற்கொண்டிருந்தனர் என்றே கொள்ளுதல் வேண்டும்.

கொண்கான நாட்டு நன்னனோடு பகைகொண்டிருந்த வரலாறு புலவர் பலரால் விளங்க உரைக்கப்பட்டுள்ளது. சோணாட்டில் கிழக்குக் கடற்கரையை அடுத்துள்ள பட்டினங்களுள், வேல் எறிந்து வேழம் வீழ்த்தவல்ல வல்லமை வாய்க்கப்பெற்ற ஆதன் எழினிக்கு உரிய செல்லூர்க்குக் கிழக்கே உள்ள நியமத்தில் வாழ்ந்த கோச இளைஞர்களின்

வரலாறு இனிது உரைக்கப்பட்டுள்ளது. போரில் பெற்ற வாள்வடுவால் வனப்புற்ற முகத்தினராய் முதுகோசர் நியமத்தில் வாழ்ந்திருக்க, அவர் குலத்து இளைஞர்கள், செல்லூர்க்கு அணித்தாகச் சென்று, கடல் நீரில் புகுந்தாடி மகிழும் கன்னி மகளிர் பறித்துப் போட்டிருக்கும் புலி நகக் கொன்றை மலரையும், கழனியில் புகுந்து களைபறிக்கும் உழத்தியர் களையோடு களையாகக் களைந்து எறிந்த குவளை மலர்களையும், செல்லூர் அரணைச் சூழ வந்திருக்கும் காவற் காட்டுள் புகுந்து தாம் பறித்து வந்த முல்லை மலர்களோடு கலந்து, கண்ணி கட்டிச் சூடி மகிழ்வர் எனப் புலவர்கள் கூறியிருப்பது காண்க.[1]

கோசரைத் தன் படை வீரராகப் பணிகொண்ட பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய புலவர் மாங்குடி கிழார், கோசர், எழினி ஆதன் என்பானுக்கு உரியதும், சோணாட்டுக் கீழ்க்கரைக்கண் உள்ளதும் ஆகிய வளம் மிக்க வாட்டாற்றில், மலர் இட்டு மணம் ஊட்டப் பெற்ற மதுவுண்டும், மங்கையரோடு குரவை ஆடியும் மகிழ்ந்திருப்பர் என்று கூறியுள்ளார்.[2]

---

1. "அருந்திறல் கடவுள் செல்லூர்க் குணஅது
பெருங்கடல் முழக்கிற்றாகி, யாணர்
இரும்பு இடம்படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்."
'கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி உழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு
பல்இளங்கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர் செல்லி." —அகம் : 90, 216.

2. "நனைக் கள்ளின் மனைக்கோசர்
தீந்தேறல் நறவு மகிழ்ந்து
தீங்குரவைக் கொளைத் தாங்குந்து...
வளநீர் வாட்டாறு." —புறம் : 396.

இளங்கோசர் பலர் ஒன்றுகூடிச் சென்று தம் பயிற்சிக்குத் துணையாக, முருக்க மரத்தால் ஆக்கப்பெற்ற இலக்கை அமைத்துவிட்டு, அதன்மீது வாளும், வேலும், அம்பும் போலும் அரிய படைக்கலங்களைப் பலகாலும் எறிந்து எறிந்து பயிற்சி பெறுவதையும், அவ்வாறு அவர்கள் எறியும் பற்பல படைக்கலங்களைப் பலமுறை ஏற்றும் பாழுற்றுப்போகா அவ் விலக்கின் திண்மையையும் பாநயம் தோன்றப் பாராட்டியுள்ளார்.[1]

1. "வென்வேல்
இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க்கு உலையா நின் வலன் வாழியவே."
—புறம்: 169.

## 3. கோசரும் கொண்கானத்து நன்னனும்.

வள்ளல் பலரை ஈன்றளித்த வளமார் புகழ்மிக்க வேளிர் குலத்தவர், தம் விழுநிதிகளை வைத்துக் காக்கவல்ல காவல்மிக்க பாழி முதலாம் பேரூர்களையும், ஏழில் முதலாம் எழில்மிக்க மலைகளையும் தன்னகத்தே கொண்டு, பொன்படு பாறைகள் மலிந்த கொண்கான நாட்டை ஆண்டு கொண்டிருந்தான் நன்னன் வேண்மான் என்ற வேளிர்குலத் தலைவன். 'இயல்தேர் நன்னன்' 'பொலந்தேர் நன்னன்' எனப் பாராட்டத்தக்க தேர்ப்படையும், 'சூழியானைச் சுடர்ப்பூண் நன்னன்', 'கறையடி யானை நன்னன்' எனப் பாராட்டத்தக்க யானைப்படையும். 'ஏந்துவேல் நன்னன்', 'வென்வேல் நன்னன்' எனப் பாராட்டத்தக்க வேற்படையும் பெற்று, வீறு கொண்டிருந்த நன்னன், தன் நாட்டிற்கு அணித்தாக, ஆற்றல் மிக்கார் யாரும் அரசோச்சி யிருத்தல் கூடாது என எண்ணினான். அவ்வெண்ணத்திற்கு இடையூறு விளைக்கும் வகையில் வாழத் தொடங்கினான் பிண்டன் எனும் பெருவீரன். பொன்னேற்றிச் செல்லும் பெரிய கலங்களையும் கவிழ்க்கவல்ல சுறு மீன்போல், பேரரசுகளையும் பாழாக்கவல்ல பெருவலி படைத்த அப் பிண்டன், தனக்கு அணித்தாக இருப்பது தன் அழிவிற்கு ஆக்கமாம் என்று எண்ணிய நன்னன், தன் நாற்படைத் துணையால் அவனை வென்று அழித்து விட்டான். அவ் வெற்றியால்

4

அவன் பெருமை மேலும் மிகுந்துவிடவே, அவன், தன்காலப் பேரரசர்களைப் போலவே தனக்கென ஒரு காவல் மரத்தை வளர்த்துத், தன் ஆற்றல் பெருமையை, தன் ஆண்மைச் சிறப்பை அனைத்துலகத்தவர்க்கும் அறிவிக்க ஆசை கொண்டான். வெற்றிவீரனாதலின். வேந்தர்களின் வெற்றியை விளங்கப் பாடும் புறப்பொருள் திணையாகிய வாகைத் திணையின் பெயர்பூண்ட வாகைமரத்தையே காவல் மரமாக்க விரும்பினான். உடனே, தன் நாட்டின் எல்லைப் புறத்தில் வாகை எனும் பெயரால் ஒரு புதிய நகரத்தையே தோற்றுவித்து, அந்நகர் நடுவே வாகை மரத்தை வளர்த்தான். காவல் மரத்தைத் தம் உயிரினும் சிறந்ததாக ஓம்ப வேண்டுவது வேந்தர் தம் கடமையாதலின், வாகைமரம் வாகைமாநகர் ஆகிய இரண்டினையும் காக்கவல்லவன், சேர வேந்தர்க்கு மகள் கொடுக்கவல்ல சிறப்போடு, சேர நாட்டகத்ததாய வெளியம் என்ற ஊரில் வாழ்வோராகிய வேளிர் குடியில் வந்த ஆய்எயினனே என அறிந்து, அவனை அழைத்து, வாகையைக் காக்கும் பொறுப்பினை அவன்பால் ஒப்படைத்தான்.

பகைக்கும் துணிவு பெற்றவன் பிண்டன் ஒருவனே அவனை அழித்தாயிற்று; ஆற்றல்மிக்க ஆய்எயினனைத் துணைவனாகப் பெற்றாயிற்று; ஆகவே, இனி ஒப்பும் உயர்வும் அற்ற உரவோன் யான் ஒருவனே என இறுமாந்திருந்தான். அந் நிலையில், அந் நகரத்தே நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்று அவன் அழிவிற்கே வழிகோலிவிட்டது. உயர்வகைக் கனி தரவல்ல மாமரம் ஒன்றை நன்னன் தன் அரண்மனைத் தோட்டத்தில் வைத்து வளர்த்து வந்தான். ஒருநாள் அம் மரத்து மாங்காய் ஒன்று காம்பற்று அணித்தாக ஓடிய அருவியில் வீழ்ந்து அவ்வருவி நீரோடே மிதந்து சென்றது. அப்போது அவ்வருவியில் நீராட வந்த பெண் ஒருத்தி மிதந்து வரும் அம் மாங்காயைக் கண்ணுற்றாள். அக் காய்

நன்னன் தோட்டத்து நறு மாமரத்தின் காய் என்பதை அறியாள். அதனால், அக்காயைக் கையிற் கொண்டு கடித்துத் தின்றுவிட்டாள். அஃதறிந்தான் நன்னன்; ஆற்றல் மிகு மறவரும் அணுக அஞ்சத்தக்க நிலையில் அரும்பாடு பட்டுக் காத்துவரும் அக் காயைக் கன்னி யொருத்தி தின்று விடுவதா? நன்னன் மரத்து மாங்காயைத் தின்ற அவள் இன்னமும் உயிர்கொண்டு உலவுவதா? என்ற நினைப்பெழ நெடுஞ்சினம் கொண்டான். உடனே அப் பெண்ணைக் கைப்பற்றிக் கொணர்ந்து கொலைசெய்யத் துணிந்தான். அந் நிலையில், அப் பெண்ணைப் பெற்றவர் நன்னனை அணுகி, "அவள் நிறையளவு பொன்னால் பண்ணிய அவள் போலும் பாவையும், எண்பத்தொரு யானைகளும் ஈடாகத் தருகிறோம்; ஏற்று அவளை விடுக" என்று வேண்டி நின்றனர். அவர் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாது, தான் விரும்பிய வாறே அப்பெண்ணைக் கொன்று தீர்த்தான். நன்னன் கொடுஞ் செயலை நாட்டார் அனைவரும் கண்டித்தனர்; "பெண் கொலை புரிந்த நன்னன்" என, அவனைத் தூற்றிப் பழித்தார் பெரும்புலவர் பரணர். நன்னன் செய்த பழிக் கொடுமை நன்னனோடு நின்றுவிடவில்லை. அவன் வழிவந்தாரையும் அப் பழி வளைத்துக் கொண்டது. "பெண் கொலை புரிந்த நன்னன் மருகன்" என, அவன் வழிவந்தான் ஒருவனைப் புலவர் பெருந்தலைச் சாத்தனார் பழிப்பது காண்க.

பொன்வளம் மிக்க மலைப்பாறைகளால் மல்கப் பெற்ற கொண்கான நாட்டைக் கைப்பற்ற வேண்டும்,

---

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு, அவள் நிறை
பொன்செய்பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண் கொலைபுரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ" —குறுந்: 292.

என்ற வேட்கை அக்கால வீரர் அனைவர்க்குமே இயல்பாக இருந்தது. வள்ளல்களாகவும் வீரர்களாகவும் வாழ்ந்த வேளிர்கள் தம்மை மதியாது, தம் பகைவர்க்குத் துணையாய்த், தம்மையே எதிர்க்கத் துணிவதற்கு அவர்கள் பாழி நகரில் ஈட்டிவைத்திருக்கும் பெருநிதியே காரணமாம் என அறிந்தமையால், பாழிக் கோட்டையைப் பற்றிப் பாழாக்க வேண்டும் என்று பேரரசர்களெல்லாம் முனைந்துகொண்டிருந்தனர். அங்கிலையில் நன்னன் வலிமிகுவதையும், வலிமிகுதியால் அவன் வன்செயல் மிகுவதையும் தமிழகத்துத் தார் வேந்தர் எவரும் விரும்பவில்லை. ஆனால், அவன் ஆற்றல் கண்டு, கொண்ட அச்ச மிகுதியால், அவனை அழித்து அடக்கும் அப் பெரும் பணியைக் கோசர்கள் ஏற்க வேண்டி நேர்ந்தது.

பெண் கொலைபுரிந்த நன்னனை வென்று பழிதீர்க்க முனைந்த கோசர், அதை முட்டின்றி முடிக்க வல்லவன் கோசர்களுள்ளேயே, பகைவர் தம் பேரரண்களையும் பாழாக்க வல்ல பெரும்படையுடையனுமாக, நெடிய பெரிய தேர்ப்படைகளையும், வில்லேந்தி வெஞ்சமர் புரியவல்ல வீரர்களையும் கொண்டதோடு, கவசம் அணிந்து காவல்கொண்ட பரந்த மார்பும் விரிந்த தோளும் வாய்க்கப்பெற்ற மிஞிலியே என அறிந்து, அவன் தலைமைக்கீழ் ஒன்று திரண்டனர். நன்னன் ஆற்றல் மிக்கவன்; பேரரசர்களையும் புறங்காணவல்ல பெருவலி படைத்தவன்; பற்றற்கரிய பாழிக் கோட்டை உடையவன்; வாகைக்கண்வாழும் ஆய் எயினன் எனும் வாட்போர் வல்லவனை ஆருயிர் நண்பனைப் பெற்றவன்; அத்தகையானைத் தான் தனித்துச் சென்று தாக்குதல் இயலாது என அறிந்து வேறு இருபெரும் வீரர் துணையை வேண்டி நின்றான்; கோசர் குலத்தில் பிறந்து, பாண்டியன் நெடுஞ்செழியன் படையிற் பணிபுரிந்து வந்த

அதியன் அகுதை என்ற இருவர், மிஞிலி வேண்டி நிற்கும் படைத் துணை அளிக்க முன்வந்தனர்.

அதியன் அகுதை ஆகியோரின் துணையோடு, நன்னனை எதிர்க்க முனைந்த மிஞிலி, நன்னன்வாழும் பாழிக்கோட்டை மீது போர் தொடுத்துப் போவதற்கு முன்னர், அவனுக்குப் படைத் துணை அளிக்கும் ஆய் எயினனைக் கொன்று, அவன் காத்து நிற்கும் நன்னனின் காவல் மரமாம் வாகையைவீழ்த்த வேண்டும் என உணர்ந்தான்; அப் பணி அதியன்பால் ஒப் படைக்கப்பட்டது. அவ்வாறே, அதியனும், தன் வில்வீரர் களோடு சென்று வாகையை வளைத்துக் கொண்டான். ஆனால் வாகைப் போர்க்களத்தில் ஆய் எயினன் ஒருவனை மட்டுமே எதிர் நோக்கிச் சென்ற அதியன், ஆங்கு அவனுக் குத் துணையாய்க் கொங்குப் படையும் போரிடக் கண்டு சிறிதே கலங்கினன். பாண்டியர் படைத் தலைவனாய்ப் பணி புரிந்திருந்த காலை, அதியன் அக்கொங்கரோடு போரிட்டு வென்று, அவர் உடைமையாய் இருந்த பல நாடுகளைப் பாண்டியன் உடைமையாக்கினன்; அதனால், அவன்பால் பகைகொண்டு, அவனை அழிக்கலாம் காலத்தை எதிர் நோக்கியிருந்த கொங்கரை, ஆங்கு எதிர்பார்க்காத நிலையில் காண நேர்ந்தமையால் பெற்ற கலக்கத்தோடு, ஆய் எயின னுக்குரிய பெரும்படையோடு, கொங்கர் படையையும் தான் ஒருவனாகவே நின்று எதிர்த்துப் போரிட்டமையால், அதி யன், போர் தொடங்கிய சிறிது பொழுதிற்கெல்லாம் உயிரி ழந்து விட்டான். தம்மை வென்று துரத்திய வீரன் வீழ்ந்

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்,
பசும்பூண் பாண்டியன் வினைவல் அதியன்
களிறொடுபட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே."
—குறுந்: 393.

மை கண்டு கொங்கர், வெற்றிவிழாக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

வாகைப்போர் நிகழ்ச்சி, கோசரின் உட்கருத்தை உணர்த்திவிடவே, நடுங்கா உள்ளம் வாய்ந்த நன்னனும் நடுங்கிவிட்டான்; வாகையில் தன் நண்பனே வெற்றி கொண்டன் எனினும், ஆங்கு அவனை அதியன் ஒருவன் மட்டுமே எதிர்த்தான்; மேலும் கொங்கர் படைத்துணை, எயினனுக்குப் பெருந்தொண்டு புரிந்தது; அதனால் அதியனை வெல்வது எளிதாயிற்று. ஆனல் பாழிப்போர் முடிவு அத்தகையதாகிவிடாது; மிஞிலிக்குத் துணையாக வந்திருக்கும் அகுதைபால், போரில் வெற்றி காணவல்ல, பொன்னுல் ஆன ஆழிப்படையுளது; அப்படையோடு களம் புகும் அவனை வெற்றிகோடல் அரிதினும் அரிதாம் என நாடெலாம் போற்ற வாழ்பவன் அவ்வகுதை; மேலும் ,அதியனை இழந்த அவர்கள், அதற்குப் பழி வாங்கத்தக்க வகையில் பெருவெறி பிடித்துப் போரிடுவர்; ஆகவே, வாகை வாழ் எயினனையும் ஈண்டுத் தருதல் வேண்டும் என விழைந்தான்; மேலும் அவன் காணும் நிமித்தங்கள் எல்லாம் அவனுக்கு அழிவுக் குறிகளையே காட்டின. அதனுல் அவன் நடுக்கம் அதிகமாகி விட்டது. அந்நிலையில் ஆங்கு வந்து சேர்ந்த ஆய் எயினன், அவனுக்கு ஆறுதல் உரைகள் அளித்து, அவனை அரணகத்திலேயே இருக்குமாறு கூறிவிட்டுத் தனியொருவனுகவே போர்க்களம் புகுந்தான்.

"புள் நிமித்தம் காட்டும் பொல்லாங்கையும் போக்குவேன்; அஞ்சேல்!" எனக் கூறிப் போர்க்களம் புகுந்தான் ஆய்எயினன் என்பதை அறிந்த மிஞிலிக்கும் அச்சம் கலந்த ஓர் ஐயம் உண்டாயிற்று; இவன் நம்மையும் வெற்றி கொண்டு விடுவனே? அத்தகைய ஆற்றல், அமைவரப் பெற்றவன்தானே இவ் வெயினன்? அதனுல்தானே, புள் நிமித்தம் கண்டு நன்னன் அடங்கியிருக்க இவன் அமர்க்

களம் புகுந்துள்ளான்; அங்ஙனமாயின் இன்றையப் போரில் நாம் வெற்றி கொள்வது நம் வாள் வன்மையில் மட்டும் இல்லை; வெற்றித் திருமகளின் உற்றதுணையும் நமக்கு இருத்தல் வேண்டும்; அதைப் பெற்றால் அல்லது, வாகைக்கு உரியானை அழித்து வாகை கொள்வது இயலாது என்றெல்லாம் எண்ணங்களை ஓடவிட்ட அவன், அவ் வெற்றித் திருமகள் வீற்றிருக்கும் கொற்றவை கோயிலுக்குட் புகுந்து, "கொற்றவையே! பாழிப் போர்க்களத்தில், நீ வெற்றிக் கொடியேந்தி எம் கொற்றப் படைமுன் செல்லுதல் வேண்டும்; அவ்வாறு சென்று வெற்றி தேடித் தருவையாயின், உன் பேய்க்கணம் மகிழப் பெரும்பலி தருவேன்" என, வேண்டிக் கொண்டு களம் புகுந்தான்.

பாழிக் களத்தில் போர் தொடங்கிவிட்டது. ஆய் எயினன் தன் ஆற்றலெல்லாம் காட்டி அருஞ்சமர் புரிந்தான்; அவன் ஆற்றிய போர்க் கடுமையால், களம், செங்களமாக மாறிவிட்டது. ஆனால், 'அதியனை வென்ற வீறுடையேன் யான்' என்ற செருக்குமிகுதியால், களத்தில் நிற்பவர் இருவர், தான் ஒருவன் என்ற உண்மையை உணராமலும், போர் முறையைப் பின்பற்றாமலும் போரிட்டு வந்தமையால், இறுதியில், எயினன், மிஞிலியின் மின்னொளி காட்டும் வாள் வீச்சால் வெட்டுண்டு, பாழிப்புறத்து மண் மீது வீழ்ந்து மாண்டு போனான்.

தன் தலைவகளைத் தாக்கிய கோசரோடு போரிட வேண்டுவது தன் கடமையாகவும், தான் போகாது தன் நண்பனைப் போர்க்களம் போக்கிய முறையற்ற செயல் குறித்து நாணியோ, தனக்குப் படைத்துணை அளிக்கும் எயினனும் இறந்தானாகத் துணை இழந்து தனித்து நிற்கும் அந்நிலையில் போர்க்களம் புகுந்தால் தனக்கு நேரலாம் பொல்லாங்கை நினைந்து நடுங்கியோ, தனக்காகப் போரிட்

டுத் தன் அரண்புறத்தே வீழ்ந்து கிடக்கும் தன் நண்பன் உடலைக் காணவும் நன்னன் களம் புகுந்திலன். அரணுக் குள்ளேயே அடங்கி விட்டான்.

ஆய்எயினன் இறந்தான்; அவனோடு வேளிர்குல வீரர் பலரும் விண்ணுலகடைந்தனர். அதனால், பாழிப்போர்க் களத்தில் பார்க்குமிடமெல்லாம், தம் கணவன்மாரை இழந்து புலம்பும் வேள்மகளிர் கூட்டமே திரண்டிருந்தது. காதலரை இழந்த கடுந்துயர் ஒருபால் வருத்த, பிறிதொரு பேரச்சமும் அம்மகளிரைப் பற்றி வருத்திற்று. விறல்மிகு வீரனாய் வாழ்ந்த காலத்தில், நன்னன், தான் வெற்றி கொண்ட வேந்தர்களின் உரிமை மகளிரைச் சிறை செய்தும், அவர் தம் அடர்ந்து நீண்ட கூந்தலைக் கொய்தும், அக் கூந் தல் கொண்டு திரித்த கயிற்றால், அவ் வேந்தர்களின் வேழங் களைப் பிணித்துக் கொணர்ந்தும் கொடுமைபல புரிந்தவனா வன்; அம்மட்டோ! பெண்கொலை புரிந்த பெரும்பழி

1. "பொலம்பூண் நன்னன் புள்நாடு கடிந்தென
யாழிசை மறுகின் பாழி ஆங்கண்
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்உயிர் கொடுத்தனன் சொல்லியது அமையாது."

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப், புள்ஒருங்கு
அங்கண் விசும்பின் விளங்கும் ஞாயிற்று
ஒண்கதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
நிழல்செய்து உழறல் காணேன் யான்எனப்
படுகளம் காண்டல் செல்லான், சினம் சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்ப." —அகம்: **396, 208.**

யொன்றும், அண்மையில் அவனைப்பற்றியுளது. அதனால், அத்தகைய கொடியோனின் படைவீரர் மனைவியரான தம்மை, அவன் பகைவர் எவ்வகைத் துன்பத்திற்கு உள்ளாக்குவரோ என எண்ணி அஞ்சி நடுங்குவாராயினர். அவர்தம் அந் நடுக்கம் கண்டும் நன்னன் அரண்விடுத்து வெளிவந்தானல்லன்.

அந்நிலையில், பாழிப் போர்க்களத்தில், படைத்தலைவன் மிஞிலியின் அருகே நின்றிருந்த அகுதை, அவ்வேள் மகளிர் பூசலைக் கண்ணுற்றான். கலங்கிற்று அவன் உள்ளம். கணவன்மார் கொடியராயின், அதற்கு இக் காரிகையர் துன்புறுதல் நெறியாகாது என நினைந்தான். அதனால், அவர்க்குத் தம் கோசவீரரால் கேடுவராவண்ணம் காத்தான்; ஆனால், அவ்வேள் மகளிர்க்குக் கோசர் மட்டுமே யல்லாமல் வேறு பல பகைவர்களும் உளர். ஆதலின், அவர்க்குக் கோசரால் வரும் கேட்டினைத் தவிர்த்தால்மட்டும் போதாது, அவர்க்குப் பிற பகைவராலும் கேடு வராவண்ணம் காக்க வேண்டும் என உணர்ந்தான். அதனால், அவ்வேள் மகளிரை அப் பகைவீரர் அணுகலாகாக், காவல் மிக்க இடத்தில் வைத்துக் காத்தான்.[1]

நன்னன் பொருட்டு உயிர்துறந்த வேளிரின் மகளிர்தம் வருத்தம் தீர்த்து வாழ்வளித்த அருள் உள்ளம் வாய்க்கப் பெற்றாரெனினும், கோசர்க்கு, நன்னன்பால் மட்டும் அருள் சுரந்திலது; மாறாக, அவன்மீது மாறாச்சினமே கொண்டிருந்தனர். பெண் கொலை புரிந்தவன் செயல்

---

1. "உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெரு விதுப்புற்ற பல்வேள் மகளிர்
குரூஉப் பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்கு பெருந்தானை
அகுதை களைதந் தாங்கு." —அகம்: 208.

பொறுத்தற்கியலாக் கொடுமையுடையதாம் என்று கருதிக் கொதித்தது அவர் உள்ளம். அதனால், அவர்கள், நன்னன் தன் உயிரினும் சிறந்ததாக மதித்து வளர்த்து வந்த மாமரத்தை—பெண் கொலைக்குக் காரணமாம் பழிமிகும் அம் மாமரத்தை—வேரோடு வெட்டிச் சாய்த்துச் சிறியவும் பெரியவுமாய துண்டுகளாகச் சிதைத்து, பாழிக் கோட்டை விட்டு வெளிப்பட்டு வந்து நோக்கும்போது, நன்னன் கண்ணில், அம்மரம் நின்ற சுவடுதானும் தோன்றாதவாறு, அனைத்தையும் தம்மூர்க்குக் கொண்டு சென்றனர். கோசர் தம் அப் பெருஞ் செயலைத் தம் பாவிடை வைத்துப் பாராட்டினார் புலவர் பரணர்.[1]

கோசர் நன்னன் நறுமா கொன்றது குறித்துக் கூறப் பெறும் கதையொன்றும் உலாவி வருகிறது: "பெண் கொலை புரிந்த நன்னன் கொடுஞ் செயலைப் பொறாத கோசர், நன்னனின் மாமரமே இக் கொடுங் கொலைக்குக் காரணமாம் என்று கொண்டு, அதனை அழித்தற்கு ஒரு வன்கட் சூழ்ச்சி செய்தனர். அச் சூழ்ச்சியாவது தங்கள் குலத் தலைவர்களுள் ஒருவனான அகுதையை அகவன் மகளிர்க்குப் பெரும்பிடிப் பரிசில் தரும்படிச் செய்து, அவற்றை அம்மகளிரைக் கொண்டு நன்னன் தோட்டத்து அம் மாமரம் முதலாகக் கட்டச் செய்தனர். மாமரத்தில் கட்டிய பிடிகள் தங்கள் தலையில் மண்ணைப் பெய்தற்குத் தரையைப் பறித்த நிலையில், மாமரம் வேரோடு ஆற்றில் சாய்ந்தது. அதனை நாட்டில் உள்ளாரெல்லாம் விறகிற்கு ஒடித்துப் போக மரமேயில்லையாய் அழிந்தது. ஒருகாய் தின்ற தப்பிற்கு ஒரு மகளைக் கொலைசெய்த நன்னன் மரமே இல்லையாகச் செய்யும் இவ்

1. "நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர்போல
வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே."—குறுந்: 73

வகவன் மகளிரை என்செய்வன் என்பது துணிய இச் சூழ்ச்சி செய்தனர். நன்னன், இசைவல்ல அவ்வகவன் மக ளிர் அன்பினால் அவரை வருத்தாது, தான் முன்செய்த கொடுமையை உணர்வன் என்று இவ்வாறு ஒரு சூழ்ச்சி செய்தனர் போலும்'' என்று கூறி, அதற்கு அடிப்படைச் சான்றுகளாக மேலே காட்டிய செய்யுளோடு, கீழ்வரும் செய்யுளையும் காட்டி, "இவற்றுள் கோசர் வன்கட் சூழ்ச்சி இன்னதென்பது, அகுதை மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்ததனால் அறியக் கிடப்பது காண்க.'' என்றும் கூறுவர்.

"இன்கடுங் கள்ளின் அகுதை தந்த
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்தது, அவன் நெடும்புற நிலையே.''
—குறுந்: 298.

வரையாது வழங்கும் வள்ளல் எனப் புலவர் போற்றும் விழுப்புகழ் உடையவன் அகுதை. அத்தகையான், இன் னார்க்கு இன்னது கொடுத்தால் இன்னது உண்டாம் என ஒன்றை எதிர்நோக்கிப் பரிசு அளிக்கும் அறவிலைவணிகனாய் வாழ்ந்திருப்பான் என எதிர் பார்த்தல் இயலாது. அகுதை, தன் பகைவனைப் பழி வாங்குதற் பொருட்டே அகவன் மகளிர்க்குப் பிடியானைகளைப் பரிசிலாகக் கொடுத்தான் என்பது, அவன் வண்மைக்கு இழுக்காம். அவன் அளித்த பரிசில் அத்தைய உள்நோக்கு உடையதாயின், புலவர்கள் அதைப் போற்றிப் புகழ்ந்திரார். வரிசைக்கு வருந்தும் பரி சில் வாழ்க்கையராய அகவன் மகளிர், தம்மாட்டுப் பேரன் புடையனாய்ப் பரிசில் பல அளித்து, "இசைநல் ஈகைக் களிறு வீசுவண்மகிழ்ப் பாரத்துத் தலைவன் ஆர நன்னன்,'' "அகவு நர்ப்புரந்த அன்பின் கழல்தொடி நறவுமகிழ் இருக்கை நன்னன்'' எனப் புலவர் போற்றப் பெருவாழ்வு வாழும்

பெரியோன் ஒருவனுக்கு அழிவுதரும் அரசியல் சூழலில் தலை யிடார். அது அவர்க்கு இயல்பும் அன்று. "வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீதறிந்தன்றோ வின்றே" எனப் பரிசிலர் மாட்டு என்றும் அப்பழி இருந்த தில்லை எனக் கோவூர்கிழார் கூறுவதும் காண்க. குமணன் பால் தாம் பெற்ற குன்றனைய களிற்றினை, இளவெளிமான் காவல் மரத்தில் பிணித்தனரே பெருஞ்சித்திரனார் எனக் கூறல் கூடும். இளவெளிமான் தம் தகுதி அறிந்திலன்; அதை அவனுக்கு அறிவித்தல் வேண்டும் எனத் தம் அகத் தெழுந்தவேட்கையை நிறைவேற்றிக் காட்டுதற்பொருட்டே குமணனைப் பாடிப் பெற்ற யானையை இளவெளிமான் காவல் மரத்தில் பிணித்தனரே யல்லாது, அவர் பிணித்த யானை, அக்காவல் மரத்தை அழிக்க, இளவெளிமானைப் பழிவாங்கற் பொருட்டு அன்று; மேலும் அக்களிறு, அவன் பகைவன் ஒருவன்பால் பெற்றதும் அன்று; குமணனை, இளவெளிமான் பகைவன் எனக் குறித்தார் இன்றுவரை ஒருவரும் இலர். நிற்க. நன்னனைப் பழிவாங்க வேண்டும் என்ற கோசர் சூழ்ச்சிக்குத் துணைநின்றே, அகவன் மகளிர், அகுதை அளித்த யானையை நன்னன் காவல் மரத்தில் கட்டி னார்கள் என்பதை ஒப்புக்கொள்வதாகவே கொண்டா லும் அகவன் மகளிர்பால் அன்புடைய நன்னன் தன் மாமரத்தைக் காக்க அவரைத் துன்புறுத்தல் வேண்டுவ தில்லை. அவர் பிணித்த பிடியானையைக் கட்டவிழ்த்துவிட் டால் அது ஒன்றே போதும். மேலும், அகுதை அடலேறனைய ஆற்றல்மிக்க வீரனுமாவான். கோச வீரர்களைத் துணையாகக் கொண்டவன். அத்தகையான் நன்னன் கொடுஞ்செயற் கேற்ற தண்டத்தை அவனுக்கு அளிக்க நினைந்திருப்பானே யாயின், அந் நன்னன் கண் எதிரிலேயே, அவன் களையத் தவறிய வேள்மகளிர் பூசலைக் களைந்து அவனுக்குக் கலங் காப் பழிசூட்டிய அத்துணை ஆற்றல் உடையனாகிய அகுதை,

அதைத் தன் படைவலி கொண்டே செய்திருப்பன். இது போலும் சூழ்ச்சி நெறிசென்று, இழிவுடையனுகி விடான். மேலும், "மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்தது" எனக் கூறும் அக்குறுந்தொகைச் செய்யுட்கண், "அகுதை தந்த" என்ற பாடத்திற்குப் பதிலாக, "அகுதை பின்றை" என்ற பாடமே ஏடுகள் பலவற்றிலும் இடம் பெற்றுளது. ஆக, இத்தடைகளையெல்லாம் ஒருங்கு நிறுத்தி ஊன்றி நோக்கு வார்க்கு, நன்னன் நறுமா கொன்ற நிகழ்ச்சியை, அகுதை தந்த மடப்பிடிப் பரிசிலோடு தொடர்புபடுத்திக் கூறுவது, கதைகட்ட வல்லார் கட்டிவிட்ட கதையேயல்லாமல், வரலாற்றுண்மை வாய்க்கப் பெற்றதன்று என்பது உறுதி யாகும்.

# 4. கோசரும் திதியனும்

மேலைக் கடலைச் சார்ந்த துளுநாட்டில் தம் வாழ்க்கையைத் தொடங்கி, கீழைக் கடலைச்சேர்ந்த சோணாட்டு நியமம், பாண்டி நாட்டுக் கூடல், நடுநாட்டு மோகூர் முதலாம் இடங்கள் தோறும் தோன்றி, நாடோடி வாழ்வினர்போல் தோன்றினும், கோசர் நிலைத்த குடியினராகவும் ஒரு சில இடங்களில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கான இலக்கியச் சான்றுகளும் உள. காடு கெடுத்து நாடு கண்டும், நீர் எடுத்து நிலவளம் கண்டும் உழவுத் தொழில் மேற்கொண்டு உறுபயன் பெற்று வாழலாம் பெருவாழ்வின் பெருமையை உணரத் தலைப்பட்டதும், கோசர்களும் அத்தொழிலைத் தலைமேற்கொண்டனர். அவ்வாறு உழவுத் தொழிலை மேற்கொண்ட கோசர்களுள் ஒரு சிலர், தம் வாழிடத்திற்கு அணித்தாக இருந்த குறுங்காட்டு மரங்களை வெட்டிச் சாய்த்தும், கொடிகளும் செடிகளுமாய்ப் பின்னிக்கிடந்த புதர்களைக் களைந்து போக்கியும் விளைநிலமாக்கி, ஏர் பல கொண்டு இடைவிடாது உழுது உழுது பண்படுத்திய புன்செய் நிலங்களில் பயறு முதலாம் பயிர்களை வளர்த்துப் பயன்கொண்டு வாழ்ந்து வரலாயினர்.

இவ்வாறு உழவுத் தொழில் மேற்கொண்டு வாழ்ந்து வந்த கோசர்களுள் சிலர், தமக்குரிய விளைபுலத்தில் பயறு

விதைத்துக் காத்து வந்தனர்; செம்மண் நிலமாதலாலும், பெரும் புழுதி படப் பலசால் ஓட்டப் பெற்றமையாலும் பருவ மழையும் பெய்திருந்தமையாலும், பயிற்றுப் பயிர், நன்கு கிளைத்துப் படர்ந்து பச்சிலைகளால் நிறைந்து பயன் தருவதாயிற்று; "ஏரினும் நன்றால் எரு இடுதல்; நட்டபின் நீரினும் நன்று அதன் காப்பு" என்ற உழவுத் தொழில் உண்மையை உணர்ந்திருந்த கோசர், தம்முள் முதியரானர் சிலரை அவ்விளைபுலத்திற்குக் காவலாக்கி ஆங்கேயே இருக்க பண்ணினர்.

ஒரு நாள் அவ்விளைபுலத்திற்கு அணித்தாக, ஒரு பெரிய வர் தம் உடைமையாம் ஆனிரையை மேய்த்துக்கொண்டிருந் தார். அணித்தாக விளைபுலம் உளது; விளைபுலம் வறிதே கிடக்காமல் பயறு விளைந்து கிடக்கிறது; வயிற்றுப் பசி தீர்க்கும் வேட்கை மிகுதியால் மேய்புலம் நோக்கி விரையும் ஆனிரை, அவ்விளைபுலத்தில் பச்சைப் பசேலென விளைந்து படர்ந்து கிடக்கும் பயற்றினைக் கண்டுவிட்டால், அதனுட் புகுந்து மேயத் தொடங்கிவிடும்; ஆகவே, அவ்வானிரை, அவ்விளைபுலத்தைக் கடந்து போகும்வரை அவற்றை விழிப் போடு கண்காணித்துச் செல்லுதல் வேண்டும் என்ற கருத் துடையராகவும், அவ்வானிரையைச் சேர்ந்த ஒரு சிலஆக்கள் அவ்விளைபுலத்துள் எவ்வாறோ புகுந்து மேய்ந்துவிட்டன. பசுக்கூட்டத்தால் தம் பயற்றுப்பயிர் பாழுற்றுப் போன தைப் பார்த்துவிட்டார்கள், அக்கொல்லையைக் காத்திருந்த கோசமுதியோர்கள். முதுமைவிளைவால் மிக்கசினம் மூள்வது உலக இயற்கை. அதிலும் அரும்பாடுபட்டு வளர்த்த பயிர் பயன் நல்கும் தருவாயில், ஆக்கள் புகுந்து பாழ்செய்வதைக் காண நேர்ந்ததும், அவர் சினம் அளவிறந்து பெருகி விட்டது; உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் உரம் மிக்க சினம் வரப்பெற்றவர் செய்வது அறியார். அந்நிலையில் தாம் செய்யும் செயலின் விளைவு அறியார். அந்நிலைக்கு ஆட்பட்டு

விட்டபடியால், அம்முது கோசர், ஆனிரைப் பெரியாரின் தகுதியினைத் தம் மனத்தினிடைக் கருதிற்றிலர். அவர் கண்முன், ஆக்கள் புகுந்து அழித்துவிட்ட விளைபுலமே காட்சி அளித்தமையால், 'அப்பெரியவர், அத்தகைய கொடிய வரல்லரே; அவர் அச்செயலை வேண்டுமென்றே செய்திருக்க மாட்டாரே; அவர் கட்டுக்கும் அடங்காத நிலையிலேயே அவ்வானிரை விளைபுலத்தில் புகுந்திருக்கும்; ஆகவே அவர் மீது குற்றம் இல்லை; அதற்காக அவரைத் துன்புறுத்துவது கூடாது; வேண்டுமாயின் அவ்வானிரைகளை நையப் புடைக் கலாம்' என்று நிரலே நினைந்து முடிவுகாணத்தக்க நிலையினை, அவர்கள் இழந்துவிட்டார்கள். அதை இழந்துவிடவே, ஆனிரை குற்றம் புரியவும், குற்றம் அப்பெரியவரதே; அதிலும், தம்ஆனிரை, பிறர் புலத்துட் புகுந்து மேய்வதைப் பார்த்திருந்த அவர் கண்களுடையதே என்று கருதிவிட்டார் கள்; அக் கருத்து அவர் உள்ளத்தில் உருப்பெறவே, அவர் கள் அப்பெரியவரை வளைத்து வீழ்த்தி, அவர் கண்களைப் போக்கிக் குருடாக்கிவிட்டார்கள்.

தாம் செய்யாத பிழைக்குத் தம் கண்களைப் பறி கொடுத்த அப்பெரியவர், நோய் பொறுக்க மாட்டாது 'கோ'வென அழுது புலம்புவாராயினர்; அச்செய்தி அவர் ஊருட்சென்று பரவிற்று; அது கேட்டாள் அவர் மகள் அன்னிமிஞிலி எனும் அழகுத் திருப்பெயருடையாளாய அவ் விளமகள், தன் தந்தைக்கு நேர்ந்த துயர்கண்டு துடித்தாள்; துவண்டாள்; வாழ்க்கை அறம் பிறழாது வாழவல்ல வாய் மையுடையவராகிய தன் தந்தைக்குக் கேடு விளைத்த கோசர் பால் கடுங்கோபம் கொண்டாள். ஆனல், அக்கோசரோ கொற்றம் மிக்கவர். எங்கே செல்லினும் இணைபிரியாது செல்லும் இயல்பு வாய்ந்த ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்; அவர்தம் ஆற்றல் கண்டு, அரச வாழ்வில் மிதக்கும் ஆடவர் களே அஞ்சி நடுங்கினர் என்றால், அத்தகையாளரைப்

பெண்ணாய்ப் பிறந்த தான், தனித்து முயன்று அழிக்க முனை வது அறிவுடைமை ஆகாது; அது ஆகவும் ஆகாது என உணர்ந்தாள்; ஆனால், அவர்கள் தந்தைக்கு இழைத்திருக்கும் கொடுமை, அவளை வாளா அடங்கியிருக்கவிட்டிலது; அவர் களை எவ்வாறேனும் பழி வாங்குதல் வேண்டுமென்றே அவள் உள்ளம் துடித்தது; ஆகவே, "என் தந்தையின் கண் போக்கிக் குருடாக்கிய அக்கொடியோரை ஒறுத்து அழிக் கும் வரை நல்ல வெள்ளாடை உடுக்கேன்; ஒண் மணிப்பூண் களைப் பூணேன்; ஓய்வாக அமர்ந்து, உண்கலத்தில் உண விட்டு, உளமார உண்பதும் செய்யேன்; உயிர் வாழ்வான் வேண்டி ஒரு சிறு உணவை உழன்றுகொண்டே தின்று விட்டுத் திரிந்து தேடித், தக்கார் துணைபெற்று, தக்கதொரு தண்டனை தவறாது அளிப்பேன்" என வஞ்சினம் உரைத்தாள். உரைத்தவாறே, உடுத் திருந்த நல்லாடையைக் களைந்து எறிந்தாள்; அணிந் திருந்த அருவிலை நன்கலங்களை அகற்றிவிட்டாள்; கண் டார் அஞ்சத்தக்க கடுஞ்சின உருவத்தாளாகிக் காட்சி அளித்தாள்.

கடுஞ்சினம் கொண்டாலும் கருத்துப் பிறழா அக் காரிகையாள், ஆற்றல் மிகு கோசரை அடக்கி அழிக்கவல் லார் யார் என்பதை ஆராய்வதில் சிந்தையைச் செலுத்தி னாள். சோணாட்டில் அழுந்தூர் என்றோர் ஊர் உளது; அழுந்தைஎன்றும் அது அழைக்கப்பெறும். சோணாட்டு அரசி யலை உருவாக்கும் பெருமை வாய்ந்த பேரூர்களுள் அதுவும் ஒன்று; சோணாட்டு அரியணையில் வீற்றிருந்த அவர்களுள் தலைசிறந்தோனாகிய கரிகாற்பெருவளத்தானை பெற்ற தாய் பிறந்த பெருமையுடையது அப்பேரூர். அவனை, அவன் தாயத்தார் அழித்துவிடாதபடி அவன் இளமைப் பருவத் தில் தன்னகத்தே கொண்டு காத்த கொற்றமுடையது அக் கோநகர்; தன் கன்னிப் போராம் வெண்ணிப் போரில்

கரிகாலன் பெற்ற வெற்றிக்கு விழாக் கொண்டாடிய விழுச் சிறப்பும் அம் மாநகர்க்கே உண்டு. அத்தகைய பேரூரில் அப்போழ்து திதியன் என்பானொரு வாள்வீரன் வாழ்ந்திருந்தான். முடியுடை மூவேந்தர்க்கு மகட்கொடுக்கும் மாபெரும் உரிமையோடு அப்பேரூரில் வாழ்ந்திருந்த வேளிர்களைத் தன் வாட்படையால் வெற்றிகொண்ட விறல் மிக்கவன் அத் திதியன். அவன்பால், நெடிய பெரிய தேர்ப் படையும் காற்றெனா விரைந்து பாயவல்ல குதிரைப் படையும், போர் என்றதும் பூரிக்கும் தோள்களைப் பெற்ற பெருவீரர்களும், திரண்டிருக்கும் சிறியவும் பெரியவுமாகிய அரண்கள் பலவும் இருந்தன. அப்படைப் பெருமை அறியாது, அவன் காவல் மரமாம் புன்னையையழிக்க ஆசையுற்ற போது, அச்செயல் அடாது என இடை புகுந்து அறிவுரை கூறிய தன் நண்பன் எவ்வி சொல்லையும் ஏற்றுக்கொள்ளாது வந்து போரிட்ட அன்னி என்பானைக் குறுக்கைப் பறந்தலைப் போரில் கொன்று உயிர் போக்கிய கொற்றம் உடையவன் அத் திதியன். பிற்காலத்தே, பாண்டியர்க்கு உரிமையுடையதான பொதியில் மலையையே தனதாக்கிக் கொண்டு, அதனால் பகை வந்துறத், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் பேரரசனையே எதிர்த்துப் போரிட்ட பேராண்மையாளன் அத் திதியன்.

அழுந்தூர்த் திதியன் அத்தகையன் என்பதை அறிந்ததும், அன்னிமிஞிலி, அழுந்தூர்க்கு விரைந்தாள். தன்னைப் பாடிப் பரிசில் வேண்டி நிற்கும் பாணர் முதலாம் இரவலர்க்கு இன்முகம் காட்டி, இன்சொல் வழங்கி, அவர் விரும்புவ அனைத்தையும் வாரிவாரிக் கொடுத்தவாறே, தன் நாளோலக்கப் பெருநிலையில் மகிழ்ச்சியில் திளைத்து வீற்றிருக்கும் அம்மாவீரன் முன் சென்று நின்றாள். அன்னி மிஞிலியின் துயர்மிகு நிலையைக் கண்ணுற்ற திதியன்,

அவள்தம் அக்கோலத்திற்கு யாது காரணம் எனக் கேட்டான்: அவள் நிகழ்ந்தது கூறித் தான் வழங்கியிருக்கும் வஞ்சினத்தை விளங்க உரைத்து, அது வாய்க்கத் துணை புரியுமாறு வேண்டினள்.

அது கேட்ட திதியன், களைகண் அற்ற அக்காரிகைக்குத் துணைபுரிய வேண்டுவது தன் கடமையாம் என உணர்ந்தான்; மேலும், அக்காலப் பேரரசர்களைப் போலவே, தமிழகத்து அரசியல் வாழ்வில் அடியிட்டு அடாது புரிந்து வரும் அக்கோசரை அடக்கி ஒடுக்குதல் வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கும் இருந்து வந்தது; அதற்கு ஒரு வாய்ப்பும் கிடைக்கவே, அவன் அக்கோசர் வாழிடம் நோக்கி-விரைந்தான்; அக் கொடுமைக்குக் காரணமாயிருந்த அம் முதுகோசரைக் கொன்று, அவள் குறை தீர்த்தான்.[1]

தன் குறை தீர்ந்தது; தன் தந்தையின் கண்களைப் போக்கிய கோசரைக் கொன்று தீர்த்தாயிற்று; தான் எடுத்துக்கொண்ட சூள் இனிதே நிறைவேறிற்று என்ற

1. "முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்
பகடு பல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்துப்
பாசிலை அமன்ற பயறு ஆபுக்கென
வாய் மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது
ஊர் முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணுள் ; வாலிதும் உடாஅள் ;
சினத்தில் கொண்ட படிவம் மாறுள்.
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டு, சினம் மாறிய
அன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்து
ஆனு உவகையேம் ஆயினெம்." —அகம். 262

அமைதி பிறந்ததும், அன்னி மிஞிலி, தன் அலங் கோல வாழ்வை அன்றே கைவிட்டாள்; வழக்கம் போல், தூய மெல்லிய வெள்ளாடை உடுத்து, நல்ல பல நவமணிப் பூண்கள் பூண்டு, அவ்வழுந்தை மாநகரில் வெற்றி விழாக்கொண்டாடி மகிழ்ந்து வலம் வந்தாள்.

கோசர், கொற்றம் மிக்கவராகவும், கொடுஞ்சினத்திற்கு அடிமைப் பட்டதன் விளைவால், காரிகை யொருத்தி காரணமாகக் கெட்டழிவாராயினர்.[1]

---

1. "தந்தை
கண்கவின் அழித்த தப்பல் தெறுவர
நன்றுமொழிக் கோசர்க் கொன்று முரண்போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்."

—அகம் : 262, 196.

# 5. கோசரும் மோகூர்ப் பழையனும்

கொண்கான நாட்டுக் கோமகனும் நன்னனை வெற்றி கொண்ட வீறுடையராய்ச், சோணாட்டுள் புகுந்தமையால் செருக்குமிக்குச் செய்வன தவிர்வன அறியாது செய்யக் கூடாதன செய்து, ஆங்கு, அழுந்தூர்த் திதியனால் அடக்கி ஒறுக்கப்பெற்ற கோசர், ஆங்கு வாழ நாணிப் பாண்டி நாடு புகுந்தனர்; அக்காலைப், பாண்டி நாட்டு அரியணையில் அமர்ந்திருந்த நெடுஞ்செழியன், தன் நனி இளமைப் பருவத்தையும் தனிமையையும் பயன்கொண்டு, யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, கிள்ளிவளவன் என்ற பேரரசர் இருவரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற குறுநிலத்தலைவர் ஐவர் துணையோடு தன்னைப் போரிட்டு அழிக்கத் துணிந்திருக்கின்றனர் என்பதை உணர்ந்து, அவர்தம் கூட்டுமுயற்சியைக் கெடுத்தழிக்கவல்ல பெரும்படை அமைப்பதில் ஆர்வமுடையனாய் இருந்தான். அதனால், பாண்டிநாடு புகுந்த கோசர்க்கு, ஆங்கு அரிய பெரிய வரவேற்புக் காத்துக் கிடந்தது. தன் நாடு வந்தடைந்த கொற்ற மிக்க கோசரைத் தன் படை வீரராக ஏற்றுப் பெருமை செய்தான் நெடுஞ்செழியன். முற்றிலும் கோசவீரர் களையே கொண்டு அமைக்கப்பெற்ற படைக்கு, அக்

கோசர்க்குள்ளேயே ஆற்றல் மிக்கோனாகிய, பழையன் என்பானைத் தலைவனாக்கினான்.

புகுந்த போர்க்களந்தோறும் வெற்றியே பெற்று வாகைமாலை யேற்று வையகமெல்லாம் போற்ற வாழ்பவனும், வஞ்சினம் உரைத்து வாள் எடுத்தால், அவ்வஞ்சினத்தை வழுவாது முடித்துக் காட்டவல்ல வல்லாளனுமாகிய அப் பழையன், தனக்குப் படைத்தலைமை அளித்த பாண்டியனின் குலப்பெயராம் மாறன் என்பதைத் தன் பெயரோடு இணைத்து வழங்கி, அப்பேரரசன்பால் தான் கொண்ட நன்றி பாராட்டும் பெருமையையும், அப் பழையன் மாறனின் தலைமைக்கீழ்ப் பணிபுரியும் அக்கோசர் வாட்போர்வல்ல வீரராகவும், அவர்களும் தங்கள் தலைவனைப்போலவே, பாண்டியன் ஏவும் பணிகளைத் தலைமேல் தாங்கி முடிக்கத் துடிக்கும் பெருநிலையினையும், புலவர்கள் பாராட்டி மகிழ்வாராயினர்.

இவ்வாறு, பழையன் மாறன் கீழ்ப் பணிபுரியும் கொற்றமிக்க கோசர்படை, கூடன்மா நகரைக் காத்து நிற்பதை அறியாத பாண்டியன் பகைவர் எழுவரும், தம் எழுபெரும் படையோடும் போந்து பாண்டி நாட்டுத் தலைநகரை வளைத்துக் கொண்டனர். அது கண்ட பாண்டியர் படையும் களம் நோக்கிப் புறப்பட்டுவிட்டது. களம் வந்து சேர்ந்த பாண்டியர் படையைக் கண்ணுற்ற பகைவர்கள், அப் பாண்டிப் படைக்கு நடுவே, கோசர் படை, பழையன்கீழ் அணிவகுத்து நிற்பதைக் கண்டு வியந்து கலக்கமுற்றனர். வாள் வேல் முதலாம் படைக்கலங்கள் ஒளிவீச, உரம்

"பொய்யா நல் இசை நிறுத்த புனைதார்ப்
பெரும் பெயர் மாறன் தலைவனாகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்
இயல்நெறி மரபின்நின் வாய்மொழி கேட்ப."

—மதுரைக் காஞ்சி.

மிக்கு நிற்கும் அக் கோசர் படையையே முதற்கண் வெற்றி கொள்ளுதல் வேண்டும்; அப் படையை அழிக்காமல் நெடுஞ்செழியனை அணுகுவது இயலாது; ஆனால், அக் கோசர் படையை எதிர்த்துப் போரிடுவது, தம்முள் எல் லார்க்கும் இயலாது. வெள்ளம்போல் பரந்த பெரும் படையும், நனிமிகச் சேய பகைநாடுகளுக் கெல்லாம் சென்று போரிட்டு வென்ற போர்ப்பயிற்சியும், காற்றெனக் கடுகிப் பாயவல்ல குதிரைப் படையும், கணக்கற்ற களிற் றுப் படையும் உடையார் மட்டுமே, அப் படைமுன் செல் லுதல் இயலும் என உணர்ந்து, தம் எழுவருள், அத்தகுதி முற்றவும் வாய்க்கப் பெற்றவன் கிள்ளிவளவன் ஒருவன் மட்டுமே எனத் தேர்ந்து, கோசரோடு போரிடும் பணியினை அவன்பால் ஒப்படைத்தனர்.

கோசரோடு போரிடும் பெருவாய்ப்புத் தனக்குக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியால், கிள்ளியும், தன் நாற் படையைக் கோசரின் அணிமீது ஏவினான். வந்திருந்த பகை வர் படை ஏழனுள்ளும் அளவாலும் ஆற்றலாலும் பெரி யது கிள்ளியின் படை; அப் படையோடு போரிடுவதே தம் பேராண்மைக்குப் பெருமையாகும்; அவ் வாய்ப்பினை அளிக்க மாட்டானோ பாண்டி மன்னன் என எண்ணியிருக் கும் நிலையில், வெள்ளம்போல் பரந்த கிள்ளிப்படை, தம் படை வரிசை நோக்கி வருவது கண்டு மகிழ்ந்தார்கள், கோச வீரர்களும். அது, தனக்குக் கிடைத்த பெறற்கரிய பேறு எனக்கருதி பெருமிதம் கொண்டான் பழையன். உள்ளத்தில் அவ்வுணர்வு மிகவே, கோசர் உரம் மிகுந்து போராடினர்; அதனால், போராடத் தொடங்கிய சிறிது பொழுதிற்கெல்லாம் சோணாட்டுப் படையை வென்று துரத்தி விட்டார்கள் கோசர். கோசர் படையைக்கொன்று, நெடுஞ்செழியன் நாட்டை அகப்படுத்திக் கொள்ளலாம் என்ற நினைவோடு வந்த கிள்ளி, தன் நாற்படையை நான்

மாடக்கூடற் போர்க்களத்தே விடுத்து, தன் நாடு நோக்கி ஓடத் தலைப்பட்டான். கிள்ளி, களத்தே விட்டுச் சென்ற கணக்கற்ற களிறுகளையும், குதிரைகளையும் கைப்பற்றிக் கொண்ட பழையன். அவ் வெற்றியோடும் அமைதி கொள்ளாது, தோற்றோடும் கிள்ளியைத் துரத்திச் சென்று பாண்டி நாட்டு எல்லைக்கண் உள்ள சோணாட்டின் பெரும் பகுதியைப் பாண்டியர் உடைமையாக்கி மீண்டான்.

கிள்ளியின் பகைவனும் கோக்கோதை மார்பன் பார்த்துப் பரிகசிக்குமாறு, அவனைப் பெருந்தோல்வியுறப் பண்ணிய பழையன் மாறன் பேராண்மையினையும், அவனுக்குத் துணையாய், அவன் கீழ்ப் பணிபுரிந்த கோச வீரர்களின் வாட்போர் வன்மையினையும், தம் அகத்துறைப் பாடல்கள் இரண்டின் இடையே வைத்து அழகுறப் பாராட்டியுள்ளார், தமிழ்ச் சங்கப் புலவர்க்குத் தலைவராம் தகுதி பெற்ற நக்கீரர்.[1]

தலையாலங் கானத்துப் போர்க்களத்தில் தன்னை எதிர்த்த ஏழரசர்களையும் தனியொருவனாகவே நின்று வெற்றிகொண்டு, அவ்விழுச் சிறப்பால், தலையாலங்கானத்

1. "வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி."

"நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடம்மலி மறுகின் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்,
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர் கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே."

—அகம்: 205, 346.

துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற பெரும் பெயர் பூண்டு, தான், தன்னேரில்லாப் புகழ் பெறுதற்குப் பெருந் துணை புரிந்தது, கூடற் பறந்தலைப் போரில், கிள்ளிவளவனை வென்றோட்டிய பழையனின் வெற்றியே என்ற உண்மை நிலையை உணர்ந்தான் நெடுஞ்செழியன். அதனால், அப்பழையனை உரிய முறையில் பாராட்ட விரும்பினான். உடனே, தன் ஆட்சிக்கு உட்பட்ட அரசர் அனைவரையும் அழைத்து, அவர் முன்னிலையில், மன்னனும் தகுதியை அவனுக்கு அளித்தான்; அப் பெருவிழா முடிந்த பின்னர், இருந்து ஆள ஓர் இடம் அளிக்காது, அரசனும் தகுதி மட்டும் அளிப்பது முறையாகாது என உணர்ந்து, அவனுக்கென ஒரு சிறு நிலத்தை அளிக்கவும் விரும்பினான். அவ்வாறு விரும்பி அதற்கேற்ற இடத்தைத் தேர்ந்தெடுக்கும் நிலையில், அவன் உள்ளத்தில் மற்றோர் எண்ணமும் உருப்பெற்றது. பழையனுக்கு அரசவாழ்வு அளிப்பதால், அவன், தனக்குப் படைத்துணைவனும் நிலையினை இழந்துவிடுதல் கூடாது; அவனுக்கு அத்தகு பெருஞ்சிறப்பும் செய்தல் வேண்டும்; அதே நிலையில் அவன் படைத் துணையினையும் பெறுதல் வேண்டும். ஆகவே, அவனுக்கு அளிக்கும் இடம், தனக்கு அரணாக அமையும் நிலமாகவும், ஆங்கு அவன் அரசோச்சியிருப்பது, தனக்குத் தக்கதோர் அரணாகவும் அமைய வேண்டும் என்று எண்ணினான். அவ்வாறு எண்ணி முடிவு கொண்ட அம்முடியுடை வேந்தன், தமிழகம் முழுவதினும் தனியரசு நடாத்தும் தனக்குப் பகையுண்டாயின், தமிழகத்தின் வடபால் எல்லைக்கு அப்பாலிருந்தே அது வருதல் கூடும்; ஆகவே, பழையனுக்கு அவ் வடவெல்லைப் பகுதியிலேயே நிலம் ஒதுக்கத் துணிந்து, தென்னார்க்காடு மாவட்டத்தில், கள்ளக்குறிச்சியை அடுத்த மலைநாட்டின் அகத்தே விளங்கும் மோகூரே முற்றிலும் பொருந்தும் இடமாதல் அறிந்து, அந்நாட்டை அவனுக்கு உரிமையாக்கினான்.

தன் தலைமைக்கீழ்ப் பணிபுரிந்த கோசர் படையைக் கூடல்மா நகரத்திலேயே விடுத்து, தனக்கு உதவவல்ல ஒரு சிறு படையை மட்டும் உடன் கொண்டு, மோகூர் மன்னனாய், மோகூர் சென்று வாழத்தொடங்கிய பழையன் மாறன், தனக்கு அத்துணைப் பெருவாழ்வு அளித்த பாண்டியப் பேரரசின்பால் கொண்ட அன்பு மிகுதியால், அப் பாண்டியர் குலத்திற்கு உரிய மலர்மாலை அளிக்கும் வேம்பு மரத்தை, அவர்தம் நினைவுச் சின்னமாய் வைத்து வளர்த்து அதையே தன் காவல்மரமாகவும் கொண்டு வாழ்ந்திருந்தான். தன் வேந்தர்க்குரிய வேம்பையே தனக்குரிய காவல் மரமாகவும் கொண்டு வளர்த்த பழையன் பெருமையைப் புலவர்கள் பாட்டிடை அமைத்துப் பரவுவாராயினர், அத்தகைய பாராட்டுரைகளுள், "பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின் முழுமுதல் முழுமுதல்", "பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு வேம்பு" என்ற, இத் தொடர்களும் இடம்பெறும்.

பாண்டியர் தலைநகர்க்குச் சோழவேந்தன் ஒருவனால் வரவிருந்த கேட்டினைப் போக்கிக் காத்த பெரும்புகழோடு, மோகூரில் பெருவாழ்வு வாழ்ந்திருந்த பழையன் மாறனுக்கு, வடநாட்டுப் பேரரசன் படைகளால் தமிழகத்திற்கு வரவிருந்த பெருங் கேட்டைத் தகர்த்துக் காக்கும் ஒருபெரும் புகழும், அம் மோகூரில் காத்துக் கிடந்தது.

வடநாட்டுப் பேரரசுகளுள் மௌரியப் பேரரசும் ஒன்று. இமயம் முதல் வேங்கடம் வரையில் பரவிய பெருநாட்டில் அதன் அரச ஆணை சென்று கொண்டிருந்தது; அப்பேரரசின் வழிவந்த ஒரு வேந்தனுக்குத், தங்கள் ஆட்சிக்கு அடிபணியாதே தனியரசு நடாத்தி வரும் தமிழகத்தை வென்று அடிப்படுத்திய பெருமைக்கு உரியோனாகத் தன்னை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்ற பெரு

வேட்கை உண்டாயிற்று போலும். அதனால், தமிழகத்தின் மீது போர் தொடுத்துப் புறப்பட்டான். தங்கள் குலப் பேரரசனும் அசோகனும் கண்டு அஞ்சத்தக்க ஆற்றல் உடையவர் அத் தமிழகத்தார்; தங்கள் ஆட்சியைக் கைப் பற்றக் கனவில் கருதவும் பிற அரசுகள் நடுங்கத்தக்க பெரும் படையும் பேராண்மையும் பெற்றவர் அத்தமிழகத்தார்; என்ற உண்மைகளை உணர்ந்திருந்தமையால், தமிழகம் நோக்கிப் புறப்படும் தன் படை கடல்போல் பரந்து பெரும் படையாதல் வேண்டும்; வெற்றியல்லது தோல்விகாணா வேல்வீரர்களைப் பெருமளவில் பெற்றதாதல் வேண்டும்; வானளாவ உயர்ந்த குடையும், வெற்றிக் கொடியும் கட்டப் பெற்ற நெடிய பெரிய தேர்களைக் கொண்டதாதல் வேண்டும்; என நினைந்துநினைந்து, ஒரு பெரும் படையை உருவாக்கினான். தன் கருத்தேபோல் பெருத்துளது படை; இப்படை கொண்டு புகுந்தால் எத்தகைய பெருநாடும் பணிந்துவிடும் என்ற துணிவு பிறந்ததும், தமிழகம் நோக்கிப் புறப்பட்டுவிட்டான். அவ்வாறு வருவோன், செல்லும் வழி, தன்பெரிய தேர்ப்படை விரைந்து போகுமளவு விரிவுடையதாகாது குறுகியிருந்ததோடு, அத் தேர்ப் படையை அறவே செல்லவொட்டாது இடை நின்று தடுக்கும் பெருமலைகளால் நிறைந்திருப்பதைக் கண்டான். அம்மலைகளைக்கடந்து மாபெரும் தானையைக் கொண்டு செல்வது இயலாது என்றாலும், தமிழக ஆட்சிபால் அவன் கொண்டிருந்த தணியாத வேட்கை, அம்மலைகளைப் பிளந்து, அவற்றின் ஊடே படை போகும் பெருவழிகளை உருவாக்கத் தூண்டவே, வழியிடைக் கண்ட மலைகளையெல்லாம் உடைத்து ஊடுருவிக்கொண்டு வந்தது மோரியப் பெரும் படை.

தமிழகத்தின் வடவெல்லையை அணுகிவிட்ட வடவர் படை, அந்நிலப் பகுதியில் வடுகர் என்ற மக்கள் வாழ்

வதைக் கண்ணுற்றது. அவ்வடுகர் வாழிடத்தே பாடி கொண்டு தங்கியிருந்த சில நாட்களில், அவ்வடுகரோடும் அவர் தலைவரோடும் பழகிவந்த வடநாட்டு வேந்தன், வடுகர் அடலேறனைய ஆற்றல் வாய்ந்தவர்; எத்துணைச் சேய்மைக் கண் உள்ள நாட்டினும் புகுந்து போராடி அந்நாட்டு உடைமைகளைக் கவர்ந்து வரும் போர்த்திறம் வாய்க்கப் பெற்றவர்; தமிழர்தம் பகைவருள் தலையாயவர்; அத்தமிழரோடு பலகால் போராடிப் போராடி அவர்தம் போர் முறைகளையும், தமிழகத்தின் இயற்கை நிலைகளையும் நன்கு அறிந்திருப்பவர் என்ற செய்திகளை அறிந்தான். அதனால், தமிழகத்தின் அரசியல் உண்மைகளை உள்ளவாறு உணரலாகாச் சேணெடும் நாட்டினனாகிய தனக்கு, அவ்வடுகர் துணை இன்றியமையாதது என உணர்ந்து, அவ் வடுகர் தலைவரை அணுகித் தமிழ் நாட்டின் வெற்றி குறித்துச் செல்லும் தனக்குப் படைத்துணை அளிக்குமாறு வேண்டிக் கொண்டான். தாம் செல்லும் இடந்தோறும் விடாது துரத்தி வந்து வென்று ஓட்டிய தமிழகத்தாரைப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணி அதற்கு வாய்ப்பான காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தமையால், வடுகர், வடவேந்தன் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டனர்.

வழிகாட்டிகளாகவும், போரின் வழிமுறைகளை வகுத்துக் கூறும் அறிவாளர்களாகவும் வடுகர் படை முன்னே செல்லத், தமிழகத்துட் புகுந்தது வடவர் படை. தமிழகத்தின் பல பகுதிகளையும் தாண்டிக் கொண்டு மோகூரை அணுகியதும், மோகூர்க் கோட்டையை அழித்து, அதற்கு உரியோனாகிய பழையன் மாறனை வெற்றிகொண்ட பின்னரே ஏனைய தமிழகத்துள் செல்லுதல் இயலும். மேலும், பாண்டியர் படைத் தலைவனாய்ப் பணிபுரிந்து, பேரரசர் பலரை வெற்றிகொண்ட, விறல்மிக்கோனாகிய பழையன் மாறனைப் பின்னேவிடுத்து முன்னேறிச் செல்வது போர்

முறையும் ஆகாது என்ற போர் நெறியை வடுகர் எடுத்துக் கூறவே, வடவர் படை விரைந்து சென்று மோகூர்க்கோட்டையை வளைத்துக் கொண்டது.

தமிழகத்தில் தன்னை எதிர்ப்பவர் எவரும் இலர்: ஆகவே தன்பால் பெரும்படை இருக்க வேண்டுவதில்லை என்ற துணிவால், சிறிய படையொன்று பணிபுரிய மோகூரில் வாழ்ந்திருந்த [பழையன் மாறன்,] வடவர் முற்றுகை அறிந்து, அஞ்சாத அவனும் அஞ்சிவிட்டான். ஆயினும், அவன் போர்ப்பயிற்சி அவனுக்குத் துணைபுரிந்தது. [வடவர் வருகையைத் தன் பேரரசனுக்கு அறிவித்து விட்டால்,] மதுரை மாநகரிலிருந்து தன் கோசப் பெரும்படை வந்துவிடும்; அது, இவ்வடவர் பெரும் படையை ஒரு நாட் போரிலேயே வென்று ஓட்டிவிடும்; ஆகவே, அரசனுக்குச் செய்தி போக்கிவிட்டு, உள்ள சிறுபடைத் துணையால், அரணிற்குக் கேடுவரா வண்ணம் காத்துக் கொண்டு அரணகத்தே அடங்கியிருக்க வேண்டும் எனத் துணிந்தான். உடனே செய்ய வேண்டுவெனவற்றை விரைந்து செய்து முடித்தான். கோட்டைவாயிற் கதவுகளைக் கணையம் இட்டுச் செறித்துக் காவலுக்கு ஆங்காங்கே சிற்சில வீரர்களை நிறுத்திவிட்டு, பாண்டி நாட்டிலிருந்து வரும் பெரும் படையை எதிர் நோக்கி அரணகத்திலேயே அடங்கியிருந்தான்.

மோகூர் அரணை அழித்து விடலாம்; அல்லது மோகூரை முற்றியிருந்து, பழையனை வெற்றி கொள்ளலாம் என்ற வடவர் வேட்கை வீணாயிற்று; வடவெல்லைக் காவல் நிலையமாய் விளங்கும் தன் மோகூர் அரணுக்கு இது போலும் முற்றுகை உண்டாவது இயல்பாம் என்ற மூதறிவு வாய்க்கப் பெற்றிருந்தவனாதலின், பழையன், அம்முற்றுகை பயனற்றுப் போகுமாறு, அரணகத்தார்க்குப் பொருட் குறைபாடு நேராவகையில் வாழ்க்கைக்கு வேண்டும் வகை

வகையான பொருள்களை வேண்டுமளவு குவித்து வைத்திருந்தான். அதனால், அரணைவிட்டு வெளிவரவேண்டுவது அவனுக்குத் தேவையற்றதாகி விட்டது. ஆனால், இவ்வுண்மையறியாத வடவர் படை, என்றேனும் ஒருநாள் பழையன், பொருள் வேண்டி வெளிப்படுதல் வேண்டும்; ஆகவே அழிக்கலாகா அரண்அழிவில் படைகளை வீணே பாழ்படுத்தி விடாமல், மோகூர் முற்றுகையைத் தொடர்ந்து மேற்கொள்வோமாக என்று கருதிக் காத்துக்கிடந்தது.

ஈண்டையநிலை இதுவாக, [மோகூர் முற்றுகைச் செய்தியை அறிந்தான். பாண்டியன் நெடுஞ்செழியன்] படைத்தலைவன் பழையன் மாறனுக்கு வரும் கேடு, உண்மையில் தன் கேடே என்றும், மோகூர் அரணின் அழிவு, பாண்டி நாட்டின் அழிவேயாம் என்றும் அறிந்தான். அதனால் அச்செய்தி கேட்ட அக்கணமே, துணைப்படை அனுப்பத் துடித்தது அவன் உள்ளம். தமிழகத்தின் பெருவேந்தனாகிய அவன், படையெடுத்து வந்திருக்கும் வடவர் படையின் பெருமை பேராற்றல்களைப் பலர் கூறக் கேட்டறிந்திருந்தான். அதனால் மோகூர்க் களத்திற்குப் போகும் படை அவ்வடவர் படையினும் மிஞ்சிய ஆற்றல் வாய்ந்ததாதல் வேண்டும் என்று கருதினான். அவன் கருத்து அதுவாகவே, களம்பல கண்டு, வெற்றி பல பெற்ற விழுச்சிறப்பு வாய்ந்ததும், தொலைநாடு கடந்து, மோகூரை மிகமிகக் குறுகிய காலத்தே அடையுமாறு காற்றெனக் கடுகி விரைய வல்லதும், காடும், மலையும் காட்டாறுமாகிய கொடு வழியைக் கடக்கும் நிலையிலும், பகைவரின் அரிய படைக்கலங்கள் வந்து தாக்கும் நிலையிலும், பாழுற்றுப் போகாத் திண்மை வாய்ந்ததுமாகிய தேர்ப்படையும், அதைப்போலவே அனைத்து வகையாலும் சிறப்பு வாய்ந்த களிற்றுப்படை குதிரைப்படைகளும் வடவர் படையை எதிர்க்க வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றன. முப்பெரும் படைகளை

முதற்கண் தேர்ந்துகொண்ட நெடுஞ்செழியன், அப்படைகளைப் பணிகொண்டு சென்று, பழையன் மாறனுக்குத் துணைபுரியத் தன் படைவீரர் தொகுதியுள், எத்தொகுதி வீரர்களை அனுப்புதல் நலமாம் என்ற ஆராய்ச்சியை மேற்கொண்டான். பழையன் பிறந்தகுடி கோசர்குடி ஆதலாலும், தன்பால் உள்ள கோசர் படைக்கு அவனே தலைவனாகப் பணி புரிந்துள்ளான் ஆதலாலும், அவனுக்குத் துணைபுரிய வேண்டும் என்ற விழைவும் விரைவும், தன் படைவீரர் அனைவரினும் கோசவீரர்க்கே மிகமிக அதிகமாம் ஆதலின் [அக்கோசர் படையையே அனுப்புதல் வேண்டும் எனத் துணிந்தான்.] உடனே, கோசவீரர்கள் கூடிவாழும் ஊர்கள் தோறும், மோகூர் முற்றுகைச் செய்தியும், அவ்வரண் காக்கச் செல்லும் பாண்டியர் படையைப் பணிகொண்டு செல்லப் பாண்டிய மன்னன் ஏவற்பணியும் பறையறிந்து அறிவிக்கப் பட்டன.

அவ்வளவே! தங்கள் குலத்தவனும், தங்கள் படைத்தலைவனும் ஆகிய பழையனுக்கு நேர்ந்திருக்கும் இடுக்கண் அறிந்த [கோசர்கள் உடனே ஒன்றுதிரண்டு வந்து, தலைநகரில் அணிவகுத்து நிற்கும் தேர்களையும், களிறுகளையும், குதிரைகளையும் பணிகொண்டு, பழையன்வாழ் மோகூர் நோக்கிப் புறப்பட்டு விட்டனர்.] போர்முரசு முழங்கப் போர்ச்சங்கு ஒலிக்க, விரைந்து, இடைநிலை நாடுகளையெல்லாம் இமைப்பொழுதில் கடந்து, மோகூர்க்கு அணித்தாக உள்ள ஆலம்பலத்தை அடைந்துவிட்டனர்; அஃது அறிந்தான் பழையன். பாய்ந்துவரும் தன் இனப்படை, தன் அரணை வளைத்து நிற்கும் வடவர் படையைப் புறத்தே வளைத்துப் போரிடும் அதே நேரத்தில், அரணகத்தே அடங்கியிருக்கும் தானும் தன் படையும் புறம்போந்து தாக்கித் துரத்துதல் வேண்டும்; தன் இருபடைகட்கும் இடையே அகப்பட்ட வடவர் படை அறவே அழிவுறுதல் வேண்டும் எனப் போர்

முறையை வகுத்துக்கொண்டு, கோசர்படை. மோகூர் அரணை அணுகும் அந்நிலையை எதிர்நோக்கியிருந்தான். அவ்வாறு காத்திருப்பான் காதுகளுள் கோசர் படையின் முன்வரிசையில் முழங்கும் முரசொலியும், சங்கொலியும் வந்து புகவே, தன்னை வளைத்து நிற்கும் வடவர் படையை வளைத்துக்கொண்டது கோசர்படை என அறிந்து, அக் கணமே அரணைவிட்டு வெளிப்பட்டு, வடவர்படையை வாள் கொண்டு துமிக்கத் தொடங்கினன். அதுகாறும் அடங்கி யிருந்தவன் திடுமென வந்து தாக்கவே, வடவர்படை விளை வறியாது வெருண்டோடத் தொடங்கின. அவ்வாறு வெருண்டோடும் அவரை, விரைந்துவரும் கோசர்படை மடக்கி நிறுத்தி நெடும்போர் புரிந்து நிலையழித்துவிட்டது. தமிழகத்தைத் தமதாக்கிக் கொள்ளுதல்வேண்டும் எனத் தூண்டுகொண்டு வந்த வடவர்படை, தாம் பிழைத்தால் போதும் என எண்ணித் தருக்கழியுமாறு, அப்படையை அறவே அழித்துக் களித்தனர் கோசர் வழியிடைக்கிடந்த பெருமலைகளையெல்லாம் பிளந்து வழிவகுத்த பின்னரே செல்லலாம் பெரிய தேர்ப்படையோடு வந்த வடவரே வாழ்விழந்துபோன அந்நிலையில், அவர்க்கு வழிகாட்டி களாய் வந்த வடுகர் மட்டும் வாழ்வு பெற்று பெற்றுவிடுவரோ? வடவரேபோல், வடுகரும், கோசர்பெரும் படையால் பேரழிவிற்கு உள்ளாகிப் பிறக்கிட்டு போயினர்; பழையனின் வெற்றிக்கொடி, வானளாவப் பறந்தது, மோகூர் அரண் முகப்பில்; பழையன் வாகைமாலைசூடி, வீரத் திருவுலா வந்து வெற்றிவிழாக் கொண்டாடினன், மோகூர்ப் பெருந் தெருக்களில்.

பாண்டி நாட்டின் தலைநகராம் கூடன் மாநகர்க்குச் சோழர் படையால் வரவிருந்த கேட்டினைப் போக்கிக் காத்த, பழையனும், அவன்கீழ்ப் பணிபுரிந்த கோசர்களும், தமி ழகத்திற்கு வடநாட்டுப் பேரரசமரபினராம் மோரிய மன்

னர்களால் வர இருந்த பேரழிவையும் போக்கி, அழியாப் பெரும் புகழ்கொண்டு, பீடும் பெருமையும் பெருகப் பெரு வாழ்வு வாழ்ந்திருந்தனர்.

வேங்கடமலையை அடுத்த, தொண்டை நாட்டின் வட வெல்லைக் கண்ணதான ஓர் ஊரில் பிறந்து, வேங்கடத்திற்கு வடக்கண் உள்ள நாட்டு நிகழ்ச்சிகளை நன்கு அறிந்திருந்த புலவர் கள்ளில் ஆத்திரையனார் அவர்கள், மோரியரின் படைச்செலவையும், வேற்படையும் விரைந்து பாயும் தேர்ப்படையும் மலிந்த அவர் படைப் பெருமையையும், அப் படைச் செலவு குறித்து, அவர்கள் மலைகளைப் பிளந்து ஆக்கிய பெருவழிகளையும் படம் பிடித்துக் காட்டிப் பாராட்டியுள்ளார் புறப்பாட்டு ஒன்றில்.[1]

தமிழகத்தின் வரலாற்றோடு, வடநாட்டில் பாயும் கடவுட் பேராறும் கங்கை, அப் பேராற்றின் கரைக்கண் அமைந்த பழம்பெரும் பேரூராம் பாடலி, அப் பாடலியைத் தலைநகராகக் கொண்டு பேரரசு நடத்திய நந்தர், அந்நந்தர் கங்கை ஆற்றில் மறைத்துவைத்த மாநிதி போலும் வட நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளையும் விளங்க உணர்ந்தவராகிய மாமூலனார், மோரியர் மாபெரும் தானையோடு, வடுகர் வழிகாட்ட வானளாவ உயர்ந்த மலைகளையெல்லாம் பிளந்து வழிசெய்து கொண்டு வந்து, மோகூரை வளைத்துக் கொண்டதையும், அஃதறிந்த கோசர் படை முரசும் சங்கும் முழங்கவந்து, மோகூர் அரணுக்கு அணித்தாக ஆலம்பலத்துள் பாடிகொண்டிருந்து, மோரியரைத் தாக்கி வெற்றி

---

“வென்வேல்,
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய்.” —புறம்: 175.

கொண்டதையும், தம் அகத்துறைப் பாக்கள் இரண்டில் இனிது எடுத்துக் கூறியுள்ளார்.[1]

போர்ப்பறை முழங்க வந்து, முதுபெரும் மாநகராம் ஆலம்பலத்துள் இருந்து மோகூரைக் காத்த கோசர்களின் வாய்மை வழுவா வான்சிறப்பை, முதுபெரும் பெண்பாற் புலவராம் ஔவை மூதாட்டியாரும் அழகுறப் பாராட்டியுள்ளார்.[2]

தன் படைவரிசையுள், பீடுபெறு படை வீரராய் விளங்கிய கோசர், புலவர் பலரும் போற்றிப் புகழவல்ல பெரு வெற்றி பெற்றமை கேட்டுப் பெருமிதம் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன், அவர்க்குச் சில பல ஊர்களை

---

1. "முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனிஇருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த
அறை."

'வெல்கொடித்,
துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூது ஆலத்து அரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசம் கடிப்பிடுத்து இரங்கத்,
தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்
பணியாமையின் பகைதலை வந்த
மாகெழுதானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி உருளிய குறைத்த
இலங்கு வெள்அருவிய அறைவாய்.'

—அகம்: 281, 251.

2. "பறைபடப், பணிலம் ஆர்ப்ப, இறைகொண்டி
தொன்முதாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயாகின்று."

—குறுந்தொகை: 15.

உரிமையாக்கிச் சிறப்பிக்கச் சிந்தை கொண்டான். வடவர் படை மோகூர் வரையும் வரக்கண்ட அந் நிகழ்ச்சி, வட வெல்லைக் காவலை மேலும் வலுவாக்குதல் வேண்டும் என்ற உணர்வைப் பாண்டியனுக்கு ஊட்டவே, அவன், அக் கோசர்க்காம் குடியிருப்புகளை அம் மோகூர்க்கு அணித்தாகவே ஆக்கி அளித்தான்; அவ்வாறு அவன் அளிக்கக் கோசர் வாழ்ந்த கோநகர்கள், ஆலம்பலம், கோசர்பாடி எனும் பெயர்களோடு, கள்ளக் குறிச்சியை அடுத்து, இன்றும் இருந்து காட்சி அளிக்கின்றன.

## 6. கோசர்குலப் புலவர்கள்

**கொ**ற்றம் மிக்க வீரர்களைக் கொண்ட கோசர்குடி, புலமை நலம் சான்ற பெருமக்களையும் பெற்றளித்துளது. தம் வீரத்தால் தமிழக வெற்றிக்கு வழிவகுத்த கோசர்கள், தம் புலமையால் பைந்தமிழ் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்துள்ளனர். கடல் நீரில் புகுந்து களித்தாடும் கன்னியர் பறித்தளிக்கும் புலிநகக் கொன்றை, கழனியில் களைபறிக்கும் உழத்தியர் களையோடு களையாகக் களைந்தெறியும் குவளை, காவற் காட்டில் மலரும் கடிமண முல்லை ஆகிய பன்னிற மலர்களைக் கண்ணிகட்டி மகிழும் கோசர் குலச்சிறுர்களை யும், வாளும், வேலும் முதலாம் பகைவர் படைக்கலங்கள் பாய்ந்து ஆக்கிய புண்வடுக்கள் பொருந்திய முகத்தினராகிக் கடுஞ்சினத்தால் கண்சிவந்து உலாவும் கோசர்குல வீரர் களையும் காணலாம், சோணாட்டுச் செல்லூர்க்கண், அக் குலத்தில் வந்த அருந்தமிழ் ஆன்ருேர் ஒருவரும் வாழ்ந்துள் ளார். நெடுந்தொகை பாடிய நல்லிசைப் புலவர்களுள் நம் செல்லூர்க் கோசனும் ஒருவராவர்.

தமிழ்நாட்டுப் பேரூர் ஒன்றில், தகுதி மிக்க குடியில் வந்த ஓர் ஆண்தகை, அன்பும் அறிவும் ஒருங்கே அமைந்த தன் ஆருயிர் மனைவியையும், மனையின் நன்கலமாம் அழகுத் திருமகனையும் மறந்து பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு திரிந்தான்; ஒருநாள், அவன், மலர்மாலை முதலியவற்ருல்

தன்னை அணி செய்து கொண்டு, தேர் ஏறித், தன் உள்ளம் கொள்ளைகொண்ட புதியாள் ஓர் இளம்பரத்தையின் இல் நோக்கிச் செல்லத் தொடங்கினான்; தெருவில், தேர்க் குதிரைக் கழுத்தில் கட்டிய மணிகள் ஒலிக்கக் கேட்டான் மகன். தளிர்நடை யிட்டுத் தத்தித்தத்தி நடந்து நடை பழகியிருந்த அவன், உடனே விரைந்து தெருவுக்குச் சென்றான்; மகன் வருகையைக் கண்ணுற்றான் அக் கட்டிளங் காளை; உடனே "பாக! தேரைச் சற்றே நிறுத்திவை" எனப் பணித்துவிட்டுத், தேர் விட்டிழிந்து, மகனை வாரி எடுத்து மார்போடு அணைத்து மகிழ்வூட்டி, "மகனே! மனையகத்தே செல்க" எனக் கூறவும், மறுக்கும் அவனோடு மனைக்குட் புகுந்தான்; மகன் இடையீட்டால், மனையாளன் மனைவந்து சேர்ந்தது கண்டு மனத்திற்குள்ளே மகிழ்ந்தாள் ஆயினும், அதை மறைத்துக்கொண்டு, புதல்வன் மீது பொய்க் கோபம் கொண்டு, "இக்கொடியோன், இந் நல்லோரை இடித்து இடர்விளைத்து விட்டனனே! இவனை என் செய்தால் தீராது?" எனக் கூறியவாறே, கோல்கைக் கொண்டு அவனைக் குறுகினாள். அது கண்டான் அவ் விளைஞன்; தான் தவறு செய்ததற்குத் தன் மகன் தண்டனை பெறவேண்டி நேர்கிறதே; தண்டனை பெறுமளவு தவறு செய்தது தான்ஆக, தன்னைச் சினவாது, அத் தவறு புரியாவாறு தடுத்துக் காத்த இவனைச் சினக்கின்றனளே; இந்நிலைக்குக் காரணம் தானே அல்லவோ எனத் தன்பிழை உணர்ந்து கொண்டமையால், அவ் விளைஞன், பரத்தையர் சேரியில் தன் வருகை நோக்கி எடுக்கும் மணவிழாவொலி வந்து முழங்கவும், ஆங்குச் செல்லும் கருத்தை அறவே விடுத்து, அவளை, அவள் மணல் வீடு கட்டி மகிழ்ந்துறையும் இளம் பருவத்தே அன்று கண்ட போது கொண்ட அத்துணைப் பேரன்பே உடையனாகி, உயர் பேரொழுக்கமிக்க உரவோன் ஆயினன்.

பரத்தையர் ஒழுக்கம் கொண்ட பண்பிலாளன் என்ற அவன் பழியையும், கணவனைக் கணிகையர்பால் போக்கி விட்டமையால் இல்லறம் ஆற்றும் அரும்பயன் இழந்தவள் என்ற தன் பழியையும் போக்கியதோடு, கணவனோடு கூடியிருந்து, அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர் கோடலும் ஆகிய இல்லறப் பயனை இனிது ஆற்றி, வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்தோடு ஒப்ப மதிக்கும் ஒரு பெருநிலையையும் அளித்த மகன் மீது ஆரா அன்பு கொண்டு அகம் நிறைந்து வாழ்ந்தாள்.

மறுநாள் தன் மனைக்கு வந்த தன் ஆருயிர்த் தோழி பால், "தோழி! பகைவரும் விரும்பிப் பேரன்பு காட்ட வல்ல நல்லொழுக்க மிக்க நன்மகனைப் பெற்றவர், இம்மையில் பழிநீங்கிப் புகழ் பெறுவர்; வசை நீங்கி இசை பெறுவர்; மறுமையில், வீட்டுலகப் பெருவாழ்வு பெற்று விழுச்சிறப்பு எய்துவர் எனப் பெரியோர் பலர், பலநூறு ஆண்டுகளாகக் கூறிவரும் பழமொழியை நீ கேட்டிருப்பை. அது முழுக்க முழுக்க உண்மை என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது எனக்கு" என்று கூறி, நெருநல் நடந்த நிகழ்ச்சியை நிரலே எடுத்துச் சொல்லி இன்புற்றாள்.

பழந்தமிழ் மக்கள் வாழ்வில் காணலாம் மாண்புமிகு நிகழ்ச்சிகள் பலவற்றுள் ஒன்றான இந்நிகழ்ச்சியை, இனிய ஒரு நிழற் படமாக்கி நமக்கு அளித்துச் சென்றுள்ளார் புலவர் செல்லூர்க்கோசனார்.[1]

1. "இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துபர்
செறுநறும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்

பைந்தமிழ் வளர்த்த பெருமை, பாண்டிய நாட்டுத் தலை நகராம் மதுரைமா நகர்க்கு மட்டுமே உரிமையுடைத்தன்று. அப்பெருமையில் எமக்கும் பெரும்பங்கு உண்டு எனப் பறை சாற்றுவதுபோல், பத்திற்கும் மேலான புலவர் பெருமக்களைப் பெற்றிருந்த பெருமைசால் பேரூராம், சேரநாட்டின் தலைநகராம் சிறப்புமிகு கருவூரிலும், கோசர்குலப் புலவர் ஒருவர் காட்சி அளிக்கிறார்.

காதல் கொண்டு கடிமணம் புரிந்துகொண்டு இல்லறமாம் நல்லற வாழ்க்கையில் இன்பம் கண்டு வாழ்ந்து வந்தார்கள் இளங்காதலர் இருவர்: 'தோன்றின் புகழொடு தோன்

பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம்; தோழி!
நிரைதார் மார்பன், நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப், புதுவதின்
இயன்ற அணியன், இத்தெரு இறப்போன்,
மாண்தொழில் மாமணி கறங்கக், கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி, 'நெடுந்தேர்
தாங்குமதி, வலவ!' என்று இழிந்தனன், தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லிப், 'பெரும! செல்இனி அகத்து' எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம் என் மகனொடு
தானே புகுதந்தோனே; யான் அது
படுத்தனன் ஆகுதல் நாணி, 'இடித்து இவன்
கலக்கினன் போலும் இக் கொடியோன்' எனச் சென்று
அலைக்கும் கோலொடு குறுகத், தலைக்கொண்டு
இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந்து இசைப்பவும், தவிரான்
கழங்காடு ஆயத்து அன்று நம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே!" (அகம். 66)

றுக' என ஆணையிட்டு, 'ஈதல் இசைபட வாழ்தல்' என அப்புகழ் ஈட்டும் வழித்துறைகளையும் வகுத்துக் கூறிய வள்ளுவர் வாய்மொழியினை ஏற்றுக் கொண்டவர் அவ்விருவரும் ஆதலின், புகழோடு வாழவேண்டும் என்றும், இவ்வுலக இன்பங்களுள் எதையும் இழந்துவிடாமல் எக்காலமும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் என்றும், இம்மையில் பெறும் இப்பேரின்ப வாழ்வை மறுமையிலும் பெற்று நுகர வேண்டுமாதலின், அதைக் கொடுக்கவல்ல கொடைக் குணத்தில் குறை காட்டலாகாது என்றும் விரும்பினர்கள். அவ்வாறு விரும்பிய அவர்கள், அதற்குப் பொருளின் துணை இன்றியமையாதது ; அப்பொருளைப் பெருமளவில் பெறுதவரால் அப் பெருவாழ்வைப் பெறுதல் அறவே இயலாது என்பதையும், அத்தகு பொருளைப் பெறவேண்டுமாயின் ஓயாது உழைத்தல் வேண்டும்; ஊக்கம் ஒழிந்து உறங்கிக் கிடப்பவரால் அப் பொருளை அடைதல் ஆகாது என்பதையும் அறிந்திருந்தார்கள்; அவ்வுணர்வு இருவர் உள்ளத்தும் ஊற்றெடுத்துப் பெருகியதால், நனிஇளம் பருவத்தளாய அவளை விடுத்து நனிமிகச் சேய் நாட்டிற்குப் போக அவனும் துணிந்தான்; அதற்கு அவளும் இசைந்தாள். பொருளின் இன்றியமையாமை அவர்களைப் பிரியத் தூண்டுகிறது என்றாலும், நெடும் பிரிவை அவ்விருவர் உள்ளமும் தாங்காவாதல் அறிந்த அவ்விளைஞன், "என் பிரிவுத் துயரால், நீ நின் கூந்தலை வாரிமுடித்து, மலர் சூட்டி மகிழவும் மனங்கொள்ளாது மயங்கிக் கிடப்பை என்பதை யான் அறிவேன்; ஆதலின் உன்னை அந்நிலையில் நெடிதிருக்க விடாது, கார்ப் பருவம் தொடங்கியதுமே கடிது இவண் வந்து சேர்வன்; வந்து, நின் கருங்கூந்தலில், வண்டுகள் வந்து மொய்க்குமாறு தம்மிடைத் துளிர்த்த தேன் புலராதிருக்கும் தகைமையவாய புத்தம்புது மலர்களைப் பறித்துச் சூட்டுவன்" என வஞ்சினம் காட்டும் வாய்மொழி வழங்கி விடைபெற்றுச் சென்றான்.

கடமையைக் கருத்தில் கொண்டும், காதலன் உரைத்த கடுஞ்சூள் உரையை நினைந்தும் காத்திருந்தாள் அவள்; காலம் கழிந்தது; கார் காலமும் வந்துவிட்டது; வானத்தில் மின்னல் கள் கண்ணொளி கெடுக்குமாறு காட்சி அளித்தன; காதுகள் செவிடுபடுமாறு இடியோசை எழுந்தது; ஒளி கண்டும், ஒலி கேட்டும் வானை நிமிர்ந்து நோக்கிய அந்நங்கை, ஆங்குக் கார்மேகங்கள் கொண்டல் கொண்டலாய்ப் படர்ந்து விரைவதையும் கண்டாள்; கார்காலம் வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்டாள்; கலக்கம் பெரிதாயிற்று; கார் காலத் தொடக்கத்தில் வந்துவிடுவன் என்று கூறிய காதலன் வாளாகூறினானல்லன்; வஞ்சினம் உரைத்துக் கூறியுள்ளான்; உரைத்த வஞ்சினம் வழுவுதல் கூடாது; வஞ்சினம் வழுவினாரைத் தெய்வம் வருத்தும்; ஆகவே, காதலன் வாராமை கண்டு கொள்ளும் வருத்தத்தைக் காட்டிலும், வஞ்சினம் வழுவிய அவனுக்குத் தெய்வக்கேடு வந்துறுமோ என்ற கலகத்தால் பிறந்த வருத்தமே பெரிதும் வருத்துவதாயிற்று. சென்ற நாடோ, சேணெடும் தொலைவில் உள்ளது; இடைவழியோ மேகங்கள் வந்து படியுமளவு உயர்ந்த மலைகள் மண்டிக் கிடக்கும் கொடுமை மிக்கது; அத்துணை நெடுமையும், கொடுமையும் மலிந்த வழியில், தெய்வம் வருத்த அவர் எவ்வாறு வருந்துவரோ என்று எண்ணி இடர் உற்றாள். பின்னர், அக்கொடுமையைத் தவிர்ப்பான் வேண்டிக் கடவுளிடம் குறையிறப்ப விரும்பினாள். ஆனால், "தெய்வமே! என் கணவர் பொய்த்துவிட்டார்; ஆயினும் என் பொருட்டு அவரைக் கொடுமை செய்யற்க" எனக் கூறுமுகத்தான் கணவனைப் பிழைபுரிந்தானாக்க அவள் உள்ளம் விரும்பவில்லை; கணவன் பிழைபுரியாதவன்; இப்போதும் பிழைபுரிந்திலன் என்றே வாதாட விரும்பினாள்; அதனால் கார்காலத்து மேக எழுச்சி இது; இக்காலத்தில், மேகம் கண்ட கண்ட இடத்தில் எழும்; ஆகவே, ஈண்டு மேகம்

எழுந்திருக்கும் இதே நாழிகையில், ஆண்டும் எழுந்திருக்கும் என எண்ணுவதற்கில்லை; மேலும், அவர் சென்றிருக்கும் நாடோ சேணெடும் தொலைவில் உளது; ஆகவே, அவர் இம் மேகத்தின் மின்னொளியைக் காண்பதோ, இடியொலியைக் கேட்பதோ இயலாது; கார்காலத் தொடக்கக் காட்சியை அவர் கண்டிரார்; ஆகவேதான் அவர் வந்திலர் போலும்" எனத், தனக்குள்ளே கூறித் தன் நெஞ்சைத் தேற்றிக்கொள்வாள் போல், பொய்ச்சூள் புகல்வாரைத் துன்புறுத்தும் தெய்வத்தை நோக்கிக் கூறிக் குறை இரந்து நின்றாள். அம் மங்கை நல்லாளின் மனக் குறையை மாண்புமிகு பாவடிவில் வார்த்து வழங்கியுள்ளார் புலவர் கருவூர்க் கோசனார்.[1]

---

1. "இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்ம் என
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை
அரும்பு அவிழ் அலரிச் சுரும்பு உண் பல்போது,
அணியவருதும் நின் மணிஇருங் கதுப்பு என
எஞ்சா வஞ்சினம் நெஞ்சு உணக் கூறி
மைசூழ் வெற்பின் மலைபல இறந்து
செய்பொருட்கு அகன்ற செயிர்தீர் காதலர்
கேளார் கொல்லோ? தோழி! தோளின்
இலங்குவளை நெகிழ்த்த கலங்கு அஞர் எள்ளி
நகுவது போல மின்னி
ஆர்ப்பது போலும் இக் கார்ப் பெயல் குரலே!"
—நற்றிணை; 214.

# 7. கோசர்குலக் கோமான்கள்

**பா**ண்டியர் படையில் வினைவலனாய்ப் பணியாற்றிக் கொங்கரை வென்று துரத்தியோனும், பிறிதொருகால், வாகைப் பறந்தலைப் போரில் ஆய்எயினனோடு போராடிக் கொங்கர் மங்குபுகழ் கொள்ளுமாறு உயிர் துறந்தவனுமாகிய அதிகன், பாழிப் போர்க்களத்தில், அப் பாழிக்குரியோனாகிய நன்னனுக்குத் துணையாய்க் களம்புகுந்த ஆஅய் எயினனைக் கொன்று உயிர் போக்கியோனும், நன்னன் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு இடையூறு விளைத்த தனக்கு, அந் நன்னன் ஏதேனும் இன்னல் விளைவிப்பனோ என அஞ்சிய அகுதையைக் காவல் செறிந்த இடத்தே வைத்துக் காத்தோனுமாகிய மிஞிலி; பாழிக்களத்தில் எயினன் இறந்தானாக அவன் உரிமை மகளிராம் வேள்மகளிர், களைகண்காணாது கலங்கியிருந்தனராக, அவர் துயர் போக்க நன்னனும் பாழி விட்டு புறம் வராது அகத்தே அடங்கியிருக்கத், தன் பகைவன் சுற்றத்தார் என்றும் பாராது தானே முன்சென்று, அம்மகளிர்தம் துயர்களைந்தவனும், தன்னைப் பாடிவரும் காவல் மகளிர்க்குப் பரிசிற்பொருள்களாகப் பிடியானைகளையே வழங்கும் வள்ளியோனும் ஆகிய அகுதை; கிள்ளிவளவனால் பாண்டியர் தலைநகர்க்கு வந்த கேட்டினைப் போக்கினவனும், மோகூர்மீது போர் தொடுத்த மோரியரை வென்று அழித்தவனும் ஆகிய பழையன் மாறன் என்ற

இந்நாளூர்க் கோசர்குலக் கோமான்களேயல்லாமல் வேறு சில கோசர்குலக் குரிசில்களும் இருந்தனர். அன்னுருள் கொடை, கொற்றம் ஆகிய இரண்டாலும் சிறந்து புலவர் பாராட்டும் பெருவாழ்வு வாழ்ந்திருந்தான் ஒருவன்; அவனைப் பற்றி அறியத்தகுவன இவை:

கோசரின் தொல்பெரும் குடியிருப்பு நாடாகிய கொங்கு நாட்டில் ஈர்ந்தூர் என்ற பெயருடையதொரு பேரூர் பண்டு இருந்தது; அது இன்று ஈஞ்சூர் எனும் பெயர்பூண்டு இயங்குகிறது, அவ்வூரையும், அவ்வூரைச் சூழ உள்ள சிறு நிலத்தையும்உரிமை கொண்டு வாழ்ந்திருந்தான் ஒரு வீரன். ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த ஒரு பெரு வீரனுக விளங்கிய அவன் பாண்டி நாட்டின் பகை நாடுகளுள் ஒன்ருகிய சேரநாட்டின் உட்பிரிவாம் கொங்கு நாட்டில் வாழ்ந்திருப்பக் கண்ட, அக்காலே நாடாண்டிருந்த பாண்டிய மன்னன், அவனைத் தன் படைத் தலைவனுகுமாறு வேண்டிக்கொண்டான். தன் குலத்தில் வந்த பலரும் பாண்டியர் படையிலேயே பணி புரிந்தமை கண்ட அவன், அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான்; பாண்டியன் அவனைப் படைத்தவைனுக்கி, வழக்கம்போல் மாறன் எனும் பட்டப் பெயரும் சூட்டிச் சிறப்பித்தான். அதனுல் அன்று முதல் ஈர்ந்தூர்கிழான் கோயன் மாறன் என அழைக்கப் பெற்ற அவன, பாண்டியன் பொருட்டு போர்க்களம் பல புகுந்து வெற்றி பல பெற்றுத் தந்தான். போர்க்களந்தோறும் பகைவரின் வாளும் வேலும் பாய்ந்து பாய்ந்து அவன் மெய்ம் முழுதும் புண்களாகவே காட்சி அளித்தன; அப்புண்களெல்லாம் நோய் தீர்ந்து, மாருவடுக்களாக மாறி அம்மேனி வனப்பை அழித்து விட்டன; ஆயினும், நோய் தீர்க்கும் மருந்தாகிப் பயன்படவல்ல மரத்தை, மக்கள், நாள்தோறும் வெட்டி வெட்டி வடுச்செய்துவிடினும், அம் மரத்தின் மாண்பு குறையாது மேலும் மேலும் மிகுந்தே விளங்க, மக்கள் அம்

மரத்தை மனம் உவந்து மதிப்பதுபோல், மாறனின், போர்ப் புண் பெற்று மாண்பிழந்த அவன் மெய்ந்நிலை கண்டும், மக்கள் அவன்பால் வெறுப்புறாது, அவை உணர்த்தும் அவன் வெற்றிப் புகழை விளங்கப் பாராட்டிப் பெருமை செய்வாராயினர்.

வீரத்தால் சிறந்து விளங்கிய அக் கோயன்மாறன் கொடைத் தொழிலாலும் சிறந்து விளங்கினான். ஈர்ந்தூர் வந்து தன் புகழ்பாடும் இரவலர்க்கு இல்லையென்று கூறியறியான் அவன். வருவார் அனைவர்க்கும் தன்பால் உள்ளதை வஞ்சனை செய்யாது வழங்குவான்; அவன்பால் பெற்ற பொருளால் வந்தோர்க்கும் வறுமை தீர்ந்துவிடாது என்பது உண்மை. அவர் வறுமையை அறவே தீர்க்குமளவு வாரி வாரி வழங்கத்தக்க வளமார் வளம் அவன்பால் இல்லை; அதனால் அவனால் அவ்வாறு வழங்குவது இயலாது என்றா லும், வருவார் எவரும் வறிதே போகார். தம் இன்மை தீர்ந்து இன்புற்று வாழ விரும்பும் பாணர் முதலாம் இரவலர்கள், பொருள் வேண்டி அவன் வாயிலை அடைவ ராயின், அவன், அவரனைவரையும் அழைத்துக்கொண்டு தன் ஊர்க் கோடியில் உலைக்களம் அமைத்துத் தொழில்புரிந்து கொண்டிருக்கும் கொல்லன்பால் சென்று, அவனுக்கு அவர் தம் வறுமையால் வாடும் வயிற்றைக் காட்டிக், "கொல்லா! இவர் தம் வறுமை இன்றே தீர்தல் வேண்டும்; ஆனால், அது தீர்க்கும் பொருள்வளம் என்பாலில்லை;. அதைத் தேடிப் பெற்றே அளித்தல் வேண்டும்; பொருள் ஈட்டும் வழியாக நான் அறிந்த ஒன்றுஇது என்பதை நீ அறிவாய்; அண்டை நாடுகளின் மீது படையோடு சென்று, அவரை வென்று அவர் அளிக்கும் பொருட்குவியலைக் கொண்டுவருவதொன்றே யான்அறிந்த பொருளீட்டும் வழியாம்; ஆகவே அதை, யான் இப்போது மேற்கொள்ளுதல் வேண்டும், அதற்கு வேண்டும் படைக்கலன்களும் என்பால் இல்லை; ஆகவே, கொல்லா, என்

வேற்படை விளங்க, இலைபோல் அகன்ற வேல்களை விரைந்து வடித்தளிப்பாயாக!" என இருகை ஏந்தி இரந்தும் நிற்பான்.

பாண்டிய நாட்டை அடுத்திருந்த, சோணாட்டின் தென் எல்லை நாடாகிய கோனாட்டில் எறிச்சிலூர் என்ற எழில் மிக்க பேரூரில் பிறந்து, இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட் சென்னி, குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவன் போலும் சோழர் குலப் பேரரசர்களையும், ஏனாதி திருக்கிள்ளி, ஏனாதி திருக்குட்டுவன் போலும் சோழர் படைத்தலைவர்களையும் மட்டுமே பாடிப் பாராட்டும் பெருமை மிக்கவராகிய மாடலன் மதுரைக் குமரனார் என்ற புலவர், ஈந்தூர் கிழான் கோயன் மாறனின் கொற்றம் கொடை ஆகிய இருபெரும் பண்புகளையும் எடுத்துப் பாராட்ட விரும்பினார்; விரும்பிய புலவர், வறுமையால் வாடித் தன் எதிர்வரும் பாணனுக்கு, கோயன் மாறனின் மாண்புகளைக் கூறி, அவனை அவன்பால் போக்கும் பொருளமைதிகொண்ட பாணாற்றுப்படைச் செய்யுளால் பண் புறப் பாராட்டியுள்ளார்.[1]

1. "நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
இல்என மறுக்கும் சிறுமையும் இலனே;
இறையுறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்பு சுவைகொண்ட விழுப்புண் நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்; கொடைஎதிர்ந்து
ஈர்ந்தையோனே பாண்பசிப் பகைஞன்;
இன்மைதீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ முதுவாய் இரவல!
யாம் தன் இரக்கும் காலைத், தான்எம்
உண்ணா மருங்குல் காட்டித், தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்துஇலை நெடுவேல் வடித்திசின் எனவே." புறம்:180

சோணாட்டுக் கடற்கரை நகரங்களுள் செல்லூர் என்பதும் ஒன்று; மன்னர் குலத்தை மண்ணுக்கிக் காண்பேன் என வஞ்சினம் உரைத்து மழு ஏந்தித் திரிந்த பரசுராமன் இருந்து வேள்வி செய்த விழுச்சிறப்பு வாய்ந்தது எனப் புலவர் பாராட்டும் அப்பேரூரை அரசிருக்கையாக்கிக் கொண்டு ஆண்டிருந்தான் ஆதன்எழினி என்பான். களிற்றுப் போர் முறையினைக் கரைகண்டவன் அவ்வெழினி; அவன் எறியும் வேலேறுண்ட வேழங்கள் வெந்துயர் மிக்கு வீழ்ந்து மடிவதல்லது வெற்றிபெற்று மீள்வது இயலாது என அவன் பேராண்மையைப் பாராட்டியுள்ளார் புலவர் ஒருவர். அச்செல்லூர்க்குக் கிழக்கே, கடலையடுத்திருந்த நியமம் என்ற நகரை வாழிடமாகக் கொண்டிருந்தனர் கோசர் சிலர் என்ற செய்தியையும், செல்லூர்க் காவற்காட்டை அடுத்துள்ள மணல் வெளிகளில், கோசர் குல இளைஞர், மலர்க்கண்ணி கட்டி மகிழ்ந்து ஆடுவர் என்ற செய்தியையும் கொண்டு, அவ்வாதன் எழினியைக் கோசனுக்கிக் காண்பவரும் உள்ளனர்.[1]

கடல் வாணிக வளத்தால் கவின் பெற்ற மருங்கூர்ப் பட்டினம் என்ற மாநகர்க்கு அணித்தாக ஊணூர் என்ற நெல்வளம் மிக்க நல்லூர் ஒன்று உளது. அவ்வூணூர்க்கு உரியோனாய் வாழ்ந்திருந்தான் ஒரு வாள்வீரன். பகைவரின்

---

1. "கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி உழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு
பல் இளங்கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிஅரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய
பெருங்களிற்று எவ்வம்." —அகம்: 90, 216.

வேழப் படைகளை வெட்டி வீழ்த்த வாள் எடுத்துக் களம் புகுந்த ஒரு போர்க்களத்தில், அவன் பிடியானை ஒன்றின் காற்கீழ்ப்பட்டு மிதியுண்டான். அதனுற்பட்ட போர்ப் புண் ஆற, அது செய்துவிட்டுச் சென்ற தழும்பு, பெரிய வழுதுணங்காய் அளவு பெரிதாதல் கண்ட அக்கால மக்கள் அவனை வழுதுணைத் தழும்பன் எனப் பெயரிட்டு வாழ்த்து வாராயினர். வாய்மையே வழங்கும் வழக்குடையனுகிய அவன், தன்னைப் பாடிவரும் பாணர்க்குப் பரிசில் பல வழங்கிப் பாராட்டுபவன்; அதனுல், அப் பாணர் ஊர்ந்து வரும் களிறுகள், அவ்வூணூர்த் தெருக்களில் எக்காலமும் திரிந்து கொண்டேயிருக்கும். தழும்பன்பால், இத்தகைய தலைமை சால் பண்புகள் பொருந்தியிருக்கக் கண்ட தமிழகத்துப் பெரும்புலவர்களாம், தூங்கலோரியாரும், பாணரும், நக்கீரரும் அவனைத் தம் பாவிடை வைத்துப் பாராட்டியுள்ளனர்.[1]

தழும்பன் வரலாருக நாம் அறியத் தக்கன இவ்வளவே யாகவும், பாணர், அவனை "வாய்மொழித் தழும்பன்" எனச் சிறப்பித்து அழைத்துள்ளது ஒன்றையே கொண்டு, இவனையும் கோசனுக்கி விடுவர் சில வரலாற்று ஆசிரியன்மார்.

—முற்றும்—

1. "வாய்வாள், தமிழகப் படுத்த இமிழ்இசை முரசின்
வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்,
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விரிநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல் உமிழ் ஆவணம்." —அகம்: 227.